

உத்தேசிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் ஏரி மேம்பாடு


உத்தேசிக்கப்பட்டுள்ள
தி. நகர் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம்


உத்தேசிக்கப்பட்டுள்ள
தி. நகர் பாதசாரிகள் வளாகம்



உத்தேசிக்கப்பட்டுள்ள சேலம் ஆறு முகப்பு மேம்பாடு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்
வழங்கல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2018-19
மானியக் கோரிக்கை எண். 34

# எஸ்.பி. வேலுமணி

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை அமைச்சர்



# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 – 15 |
| 2. | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 16-176 |
| 3. | பெருநகர சென்னை மாநகராட்சி | 177-244 |
| 4. | பேரூராட்சிகளின் இயக்ககம் | 245-276 |
| 5. | சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் | 277-322 |
| 6. | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 323-361 |
| 7. | தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் | 362-377 |
| 8. | சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை | 378-393 |
| 9. | தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் | 394-410 |
| 10. | புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் | 411-417 |
| 11. | தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் | 418-424 |

# மானியக் கோரிக்கை எண். 34

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2018-2019

## 1. முன்னுரை

நகரமயமாதல் என்பது நகரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொகை வீதத்தில் ஏற்படும் படிப்படியான ஏற்றம் ஆகும். அதிகமான மக்கள் வசிக்கும் இடமாக நகரங்களும், பெரு நகரங்களும் உருவாவதற்கான முக்கிய செயல்முறையாக நகரமயமாதல் விளங்குகிறது. கிராமப்புர பகுதிகளை விடவும் பொருளாதார, அரசியல், சமூக முன்னேற்றம் பெற்ற பகுதியாக நகரப் பகுதிகள் விளங்குகின்றன என்பதே நகர்மயமாதலை ஊக்குவிப்பதாக உள்ளது.

### 1.1 நகரமயமாதல் - உலகளாவிய சூழ்நிலை

ஐக்கிய நாடுகள் அமைப்பின் (UNO) நகரமயமாதல் அறிக்கை, 2018-ல், உலக மக்கள் தொகையில் நகர மக்கள்

தொகை 1950 ஆம் ஆண்டில் 30 சதவீதம் ஆகவும், 2015 ஆம் ஆண்டில் 54 சதவீதம் ஆகவும் இருந்தது, 2050 ஆம் ஆண்டில் 68 சதவீதம் ஆக ஏற்றம் பெறும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. உலக மக்கள் தொகையில் மூன்றில் இருவர் நகரங்களில் வசிப்பவராக இருப்பர் என கணிக்கப்பட்டுள்ளது. 2018-ஆம் ஆண்டிலிருந்து 2050-ஆம் ஆண்டிற்குள் உலக நாடுகளில் இந்தியா, சீனா மற்றும் நைஜீரியா நாடுகள் மொத்த நகர்ப்புர மக்கள் தொகையில் 35 சதவீதத்தை கொண்டுள்ளதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அளவில் ஒரு கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் அதிகரித்து வருவதுடன் அவை பெரும்பாலும் குறைந்த முன்னேற்றமுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. 1960-ஆம் ஆண்டில் நியூயார்க் மற்றும் டோக்கியோ நகரங்கள் மட்டுமே ஒரு கோடிக்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களாக விளங்கின. 1999 ஆம் ஆண்டில் அவை 17 நகரங்களாக பெருகியதுடன் அவற்றில் 13 நகரங்கள் குறைந்த

முன்னேற்றமுள்ள நாடுகளில் காணப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் உலகில் உள்ள 31 பெரு நகரங்களில் (அதாவது 1 கோடிக்கும் மேல் மக்கட்தொகை கொண்ட நகரங்களில்) 24 பெரு நகரங்கள் குறைந்த அளவே வளர்ச்சி பெற்ற உலகின் தென் பகுதியில் (Global South) அமைந்துள்ளன.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் அதிகபடியான நகரங்களை நோக்கி குடிபெயர்தல் அதிகமாக காணப்படுகிறது. உலகில் மக்கள் அடர்த்தி அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் சீனா நாடுகளில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் உள்ளன. உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக டோக்கியா 37 மில்லியன் மக்கள் தொகை கொண்டு விளங்குகிறது. அதைத் தொடர்ந்து டெல்லி 29 மில்லியனும், சங்காய் 26 மில்லியனும், மும்பாய் 20 மில்லியனும் கொண்டுள்ளது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் காணப்படும் 1 மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நடுத்தர அளவிலான

நகரங்களே அதிவேகமாக மாநகரங்களாக உருவாகி வருகின்றன.

உலகம் தொடர்ந்து நகரமயமாகி வருவதால், நகரப் பகுதிகளில் குறிப்பாக இந்தியா போன்ற நடுத்தர வருவாய் உடைய வேகமாக நகரமயமாகும் நாடுகளில் உள்ள நகரப் பகுதிகளில் நீடித்து நிலைத்த வளர்ச்சி மாற்றங்கள் அதிகமாக காணப்படுகிறது.

## 1.2 நகரமயமாதல் - இந்தியாவின் சூழ்நிலை

இந்தியாவில் நகரமயமாதல் என்பது சுதந்திரத்திற்கு பிறகு, இந்தியா கலப்பு பொருளாதாரக் கொள்கையை தேர்ந்தெடுத்தது முதலே தொடங்கியது. இந்தியாவில் நகரமயமாதல் வளர்ச்சி என்பது இரு வழிகளில் காணப்படுகிறது. ஒன்று நகர்ப்புர மக்கள் தொகையில் ஏற்படும் இயற்கையான ஏற்றம், மற்றொன்று கிராமங்களிலிருந்தும் சிறுநகரங்களிலிருந்தும் பெருநகரங்களை நோக்கி மக்கள் குடிபெயர்தலால் ஏற்படும் ஏற்றம். 1951-ஆம் ஆண்டில் 5 நகரங்கள் மட்டுமே

1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையை பெற்றிருந்தது. அது 2011-ஆம் ஆண்டில் 53 நகரங்களாக உயர்ந்தது. மேலும், 2031-ஆம் ஆண்டில் 70 நகரங்களாக உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

2011 -ஆம் ஆண்டில் 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் 3 ஆகும். 2031 ஆம் ஆண்டில் அது 6 நகரங்களாக உயரும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. 2011 -ஆம் ஆண்டில் இந்தியாவின் நகர மக்கள் தொகை 377 மில்லியன், அதாவது மொத்த மக்கள் தொகையில் (1211 மில்லியன்) 31.16% ஆகும். ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் 2007-ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை அறிக்கையின் படி, 2030-ஆம் ஆண்டில் நாட்டின் 40.76% மக்கள் நகர்ப்புரங்களில் குடியிருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. 1901 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் நகர்ப்புர மக்கள்தொகையின் பங்கு பின்வரும் அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளது:-

இந்தியாவில் நகர்ப்புர மக்கள்தொகை

| | 1901 | 1951 | 1991 | 2001 | 2011 |
|---|---|---|---|---|---|
| மொத்த மக்கள் தொகை (மில்லியன்) | 238 | 361 | 846 | 1028 | 1211 |
| நகர்ப்புர பங்கு (%) | 10.84 | 17.30 | 25.72 | 27.71 | 31.16 |

மொத்தத்தில் இந்தியாவில் நகர்மயமாதல் நாடு முழுவதும் பரவி கிட்டதட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் அதன் தாக்கம் தெரிகிறது. இந்தியா வரலாற்றில் முதன்முறையாக, கிராமங்களை விட நகரங்களில் பெரும்பான்மையான மக்கள் வசிக்கும் ஐந்து பெரிய நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களைக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அவற்றில் ஒன்றாகும்.

## 1.3 தமிழ்நாட்டில் நகரமயமாக்கல் போக்கு

நாட்டிலுள்ள மிகப்பெரிய மாநிலங்களில், நகர்ப்புர மக்கள் தொகை பங்களிப்பில் தமிழ்நாடு முதலிடத்தையும், அதிக வளர்ச்சி பெறும் நகர்ப்புர மக்கள் தொகையில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. 2011-ஆம் ஆண்டு

மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் கிராமப்புரங்களில் இருந்து நகர்ப்புரங்களுக்கு அதிக அளவில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தமிழகத்தில் சிறிய நடுத்தர மற்றும் முக்கிய நகரங்கள் பரவலாக பரவியுள்ளதும், கிராமங்களில் இருந்து வேலை தேடி மக்கள் குடிபெயர்வதும், அனைத்து மாவட்டங்களிலும் தொழிற் பூங்காக்கள் அமைக்கப்பட்டிருப்பதும் தமிழ்நாட்டின் விரைவான நகரமயமாக்கத்திற்கு பங்களிக்கின்றன.

48.45% மக்கள் நகர்ப்புரங்களில் வசிக்கக்கூடிய தமிழ்நாடு நகர்மயமான மாநிலங்களின் பட்டியலில் முதலிடத்திலும், அதன் தொடாச்சியாக கேரளா, மஹாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களும் உள்ளன. எண்ணிக்கையில் மஹாராஷ்டிரா மாநிலம் மற்ற மாநிலங்களை விட அதிகமாக, ஐந்து கோடிக்கும் மேலான, நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களைக் கொண்டுள்ளது. உத்திரபிரதேசத்தில் நான்கு கோடி மக்கள் நகர்ப்புரத்தில் வாழ்கின்றனர். தமிழ்நாடு மூன்று கோடிக்கும் மேல்

நகர்ப்புரத்தில் வசிக்கும் மக்களைக் கொண்டு மூன்றாவது இடத்தில் உள்ளது.

| மாநிலம் | நகர்ப்புர மக்கள் தொகை (இலட்சத்தில்) | மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள்தொகையின் சதவிகிதம் | தரம் |
|---|---|---|---|
| ராஜஸ்தான் | 171 | 25 | 8 |
| மத்திய பிரதேசம் | 201 | 28 | 7 |
| கர்நாடகா | 236 | 39 | 4 |
| குஜராத் | 257 | 43 | 3 |
| ஆந்திர பிரதேசம் | 284 | 33 | 5 |
| மேற்கு வங்காளம் | 291 | 32 | 6 |
| தமிழ்நாடு | 349 | 48 | 1 |
| உத்திர பிரதேசம் | 445 | 22 | 9 |
| மஹாராஷ்டிரா | 508 | 45 | 2 |

தமிழ்நாட்டில் கடந்த 20 ஆண்டுகளாக நகரமயமாதலின் வேகம் அதிகரித்து உள்ளது. 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 34.15 விழுக்காட்டினர் மட்டுமே நகர்ப்புரம் சார்ந்தவர்களாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது. அதுவே 2011-ஆம் ஆண்டில் 14.3 சதவீதம் அதிகரித்து 48.45 சதவீதமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் நகர்ப்புர மக்கள் தொகை 2030-ஆம் ஆண்டளவில் 67 சதவீதமாக நாட்டிலேயே மிக உயர்ந்த அளவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கேற்ப நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான அதிகரிக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அடிப்படை குடிமைச் சேவைகள் வழங்கிடவும் பல முக்கிய கொள்கை மற்றும் நிர்வாகச் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. திறன் வளர்ப்பு, உள் கட்டமைப்பு மேம்பாட்டிற்கான நிதி ஏற்படுத்துதல், நவீன பொருந்தக்கூடிய பசுமை

தொழிற்நுட்பங்களை புகுத்துதல் போன்றவை இச்சவால்களை ஈடுசெய்ய அவசியமானதாகும்.

மாநிலத்தின் அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதற்கு தொலைநோக்குத் திட்டம், 2023 வழி அமைத்துத் தந்துள்ளது. நகர்ப்புர போக்குவரத்து நெரிசலை சமாளிப்பது, குடிநீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, குறைந்த வருவாய் உடையோர் உட்பட அனைவருக்கும் வீட்டு வசதி அளிப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் 2023-ஆம் ஆண்டுக்குள் நாம் எதிர்பார்க்கும் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு தொலை நோக்கு திட்டம், 2023 வழிவகுக்கிறது. நகர்ப்புர உட்கட்டமைப்புகளை மேம்படுத்த முதலீடு செய்வதின் நோக்கம் நகர்ப்புரத்திலிருந்து மற்ற பகுதிகளுக்கு முறையான இடரில்லாத இணைப்பை ஏற்படுத்துவதே ஆகும்.

உலகத் தரம் வாய்ந்த அடிப்படை உட்கட்டமைப்பு உட்பட பல மேம்பாட்டுத் திட்டங்களை மாநிலம் முழுவதும் செயல்படுத்திட தொலை நோக்குத் திட்டம் 2023 வழிவகை செய்கிறது. நகரங்களில் வேகமாக பயணிக்க விரைவு போக்குவரத்து அமைப்பு மற்றும் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, கன்னியாகுமரி நகரங்களை இணைக்கும் அதிவேக இரயில் சேவையுடன் ஒருங்கிணைந்த நகர்ப்புர போக்குவரத்து வசதி தொடங்கப்பட உள்ளது. மேலும், அனைத்து மக்களுக்கும் உரிய அழுத்தத்துடன் குழாய்கள் மூலம் 24x7 மணி நேரமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதி செய்யவும், அனைவருக்கும் பாதுகாப்பான சுகாதார வசதி கிடைத்திட செய்வதோடு திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை இல்லாத மற்றும் குப்பை கூளங்கள் இல்லாத சுற்றுச் சூழலை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.4 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாநிலத்தில் உள்ள நகர்ப்புர பகுதிகளை மேம்படுத்துதல், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பொறுப்பாகும். மேலும் திட்டமிடுதல், நிதி வழங்குதல், தரமான சேவை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு திட்டங்களை செயல்படுத்தி கண்காணித்தலும் இத்துறையின் பொறுப்பாகும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் குடிநீர் வழங்குதல், சாலைகள் மற்றும் கட்டடங்களை உருவாக்குதல், மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை, சுற்றுப்புற சுகாதாரம், பேருந்து நிலையங்கள் மற்றும் வர்த்தகக் கூடங்கள் அமைப்பது போன்ற பணிகளுக்காக இத்துறை பெருந்தொகையை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528

பேரூராட்சிகள் ஆகியவை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட வாரியான நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 0 | 2 | 2 |
| 2 | சென்னை | 1 | 0 | 0 |
| 3 | கோயம்புத்தூர் | 1 | 3 | 37 |
| 4 | கடலூர் | 0 | 5 | 16 |
| 5 | தருமபுரி | 0 | 1 | 10 |
| 6 | திண்டுக்கல் | 1 | 3 | 23 |
| 7 | ஈரோடு | 1 | 4 | 42 |
| 8 | காஞ்சிபுரம் | 0 | 9 | 17 |
| 9 | கன்னியாகுமரி | 0 | 4 | 55 |
| 10 | கரூர் | 0 | 2 | 11 |
| 11 | கிருஷ்ணகிரி | 0 | 2 | 6 |
| 12 | மதுரை | 1 | 3 | 9 |
| 13 | நாகப்பட்டினம் | 0 | 4 | 8 |
| 14 | நாமக்கல் | 0 | 5 | 19 |
| 15 | நீலகிரி | 0 | 4 | 11 |
| 16 | பெரம்பலூர் | 0 | 1 | 4 |
| 17 | புதுக்கோட்டை | 0 | 2 | 8 |
| 18 | இராமநாதபுரம் | 0 | 4 | 7 |

| வ. எண் | மாவட்டம் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|---|
| 19 | சேலம் | 1 | 4 | 33 |
| 20 | சிவகங்கை | 0 | 3 | 12 |
| 21 | தஞ்சாவூர் | 1 | 2 | 22 |
| 22 | தேனி | 0 | 6 | 22 |
| 23 | திருவள்ளூர் | 0 | 5 | 10 |
| 24 | திருவண்ணாமலை | 0 | 4 | 10 |
| 25 | திருவாரூர் | 0 | 4 | 7 |
| 26 | தூத்துக்குடி | 1 | 2 | 19 |
| 27 | திருச்சிராப்பள்ளி | 1 | 3 | 16 |
| 28 | திருநெல்வேலி | 1 | 7 | 36 |
| 29 | திருப்பூர் | 1 | 5 | 16 |
| 30 | வேலூர் | 1 | 11 | 16 |
| 31 | விழுப்புரம் | 0 | 3 | 15 |
| 32 | விருதுநகர் | 0 | 7 | 9 |
| **மொத்தம்** | | 12 | 124 | 528 |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் பின்வரும் துறைகளும், நிறுவனங்களும் இயங்கி வருகின்றன:

1. நகராட்சி நிர்வாக ஆணையரகம்
2. சென்னை பெருநகர மாநகராட்சி
3. பேரூராட்சிகளின் இயக்குநரகம்

4. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

6. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்

7. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

8. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

9. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

10. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

## 2. நகராட்சி நிர்வாக ஆணையரகம்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் நகராட்சி நிர்வாக ஆணையரகம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களைத் தலைமையாகவும் மற்றும் இணை ஆணையர்கள், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் ஏழு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களைக் (செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருப்பூர், தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மண்டலங்களுக்கு தலா ஒருவர் வீதம்) கொண்டுள்ளது. சென்னை மாநகராட்சி தவிர, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் செயல்பாடுகளை மேற்பார்வையிட்டு கண்காணிப்பது இவ்வலுவலகத்தின் பணியாகும்.

நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 11 மாநகராட்சிகளும் மற்றும் 124

நகராட்சிகளும் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நகராட்சிகளும் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

| **வ. எண்.** | **தரம்** | **ஆண்டு வருமானம் (₹ கோடியில்)** | **நகராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சிறப்பு நிலை | 10.00 க்கு மேல் | 18 |
| 2 | தேர்வு நிலை | 6.00 – 10.00 | 28 |
| 3 | முதல் நிலை | 4.00 – 6.00 | 34 |
| 4 | இரண்டாம் நிலை | 4.00க்கு கீழ் | 44 |
| மொத்தம் | | | 124 |

## 2.1 மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள்

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு இந்திய அரசியலமைப்பு சட்டம் 74-வது திருத்தத்தின்படி தேர்தல்

நடத்தப்படும். பிரிவு வாரியாக மாநகராட்சி மேயர்கள், நகர்மன்ற தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் பதவி விவரம் பின்வருமாறு:

| நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பொது) | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்கள்) | பழங்குடி இனத்தினர் (பெண்கள்) | பெண்கள் (பொது) | பொது | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **மாநகராட்சிகள் (சென்னை மாநகராட்சி உள்பட)** | | | | | | |
| மேயர்கள் | 1 | 1 | -- | 5 | 5 | 12 |
| வார்டு உறுப்பினர்கள் | 50 | 57 | -- | 412 | 400 | 919 |
| **நகராட்சிகள்** | | | | | | |
| நகர்மன்றத் தலைவர்கள் | 8 | 9 | 1 | 52 | 54 | 124 |
| வார்டு உறுப்பினர்கள் | 225 | 286 | 3 | 1,551 | 1,548 | 3,613 |

## 2.2 உட்கட்டமைப்பு மேம்பாடு

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய பணி உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி பராமரிப்பது ஆகும். தரமான, பயனுள்ள உட்கட்டமைப்புகளை

உருவாக்க அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகள் மற்றும் உலக வங்கி, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) முதலான பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் பெறப்படும் நிதி உதவியினைக் கொண்டு நகர்ப்புர உள்ளாட்சிகளில் உட்கட்டமைப்புத் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2.3 குடிநீர் வழங்கல்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை போதிய அளவில் வழங்குவதற்கு அரசு தீவிர முன்னுரிமை மற்றும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. குடிநீர் விநியோக நிலைமையை மேம்படுத்துவதற்காக, பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலமும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM), ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம்

(JNNURM) மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) ஆகிய திட்டங்கள் மூலமும் நிதி உதவிகள் பெறப்பட்டு பல்வேறு குடிநீர் விநியோக திட்ட பணிகள் அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவும் சில நேர்வுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB) போன்ற அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதமும், பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் என்ற அடிப்படையிலும் குடிநீர் வழங்க, மத்திய

பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் நிறுவனம் (CPHEEO) குறியீடுகளை நிர்ணயம் செய்துள்ளது. இந்த குறியீடுகளை எட்டும் நோக்கோடு அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் கீழ்வருமாறு:

| **உள்ளாட்சி கள்** | **அளவீடு (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு)** | **தற்போதைய நிலை** | **உள்ளாட்சி அமைப்பு களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| மாநகராட்சி கள் | 110 லிட்டர் மற்றும் அதற்குமேல் | நன்று | 8 |
| | 70-109 லிட்டர் வரை | திருப்திகரமான நிலை | 3 |
| **மொத்தம்** | | | **11** |
| நகராட்சிகள் | 90 லிட்டர் மற்றும் அதற்குமேல் | நன்று | 66 |
| | 40 முதல் 89 லிட்டர் வரை | திருப்திகரமான நிலை | 58 |
| | 20 முதல் 39 லிட்டர் வரை | பற்றாக்குறை | **0** |
| மொத்தம் | | | 124 |

2011-ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 93 லிட்டர் என்ற வீதத்தில் மொத்தம் 1,567.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித்திட்டம்-III, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஜெர்மன் மேம்பாட்டு வங்கி, ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத்திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி மூலதன மான்ய நிதி ஆகிய திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தியதன் மூலமாக 2017-2018 ஆம் ஆண்டில் குடிநீர் விநியோகம் 1873.29 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 113 லிட்டர் வீதம் வழங்கும் அளவுக்கு 2017-18 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3.1 சமீபத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பல்வேறு குடிநீர் மேம்பாட்டு திட்டங்கள்

**2.3.1.1** தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III-ன் கீழ் 17 குடிநீர் திட்ட பணிகள் ₹661.65 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 13 பணிகள் முடிவுற்றுள்ளன. பணிகள் முடிவுற்ற 13 உள்ளாட்சிகளில் அதிகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹ கோடியில் | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்து வதற்கு முன் | | திட்டம் முடிவுற்ற பின் | |
| | | | எம்.எல்டி | எல்பிசிடி | எம்.எல்டி | எல்பிசிடி |
| 1 | திருநெல்வேலி (தச்சநல்லூர்) | 5.94 | 36.72 | 77 | 55.00 | 116 |
| 2 | கோபிச்செட்டி பாளையம் | 4.05 | 4.96 | 90 | 7.44 | 135 |
| 3 | பொள்ளாச்சி | 8.64 | 10.20 | 105 | 12.70 | 135 |
| 4 | போடிநாயக்கனூர் | 2.32 | 5.75 | 76 | 6.95 | 90 |
| 5 | சேலம் | 24.84 | 71.00 | 85 | 105.72 | 127 |
| 6 | குறிச்சி | 49.93 | 4.00 | 40 | 7.50 | 70 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | குனியமுத்தூர் | | 3.50 | 40 | 8.00 | 75 |
| 8 | கவுண்டம்பாளையம் | 30.38 | 4.56 | 48 | 8.00 | 80 |
| | வடவள்ளி | | 2.30 | 55 | 3.00 | 70 |
| 9 | திருவண்ணாமலை -I | 0.32 | பகிர்மானம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது | | | |
| 10 | சிவகங்கை -II | 0.16 | | | | |
| 11 | துறையூர் | 0.14 | | | | |
| 12 | கிருஷ்ணகிரி | 1.52 | | | | |
| 13 | குழித்துறை-II | 0.99 | | | | |

எஞ்சியுள்ள ₹359 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சேலம் பகுதி-II, பல்லவபுரம், பம்மல் மற்றும் தேனி அல்லிநகரம் ஆகிய 4 குடிநீர் திட்டப்பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.3.1.2** ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதி உதவியுடன் திருச்சி, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாநகராட்சிகளிலும், பழனி, குன்னூர், எடப்பாடி, தேவகோட்டை, மேட்டுப்பாளையம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய நகராட்சிகளிலும் ₹663.68 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் திருச்சி மாநகராட்சி, தேவக்கோட்டை, எடப்பாடி, தூத்துக்குடி மற்றும் குன்னூர் நகராட்சிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. பணிகள் முடிவுற்ற உள்ளாட்சி அமைப்புகளின் அதிகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக நிலை பின்வருமாறு :

| **வ. எண்** | **உள்ளாட்சி அமைப்பின் பெயர்** | **திட்ட மதிப்பீடு ₹ கோடியில்** | **தினசரி குடிநீர் விநியோகம்** | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | **திட்டம் செயல்படுத்துவதற்கு முன்** | | **திட்டம் செயல்படுத்தப் பட்ட பின்** | |
| | | | **எம்எல்டி** | **எல்பிசிடி** | **எம்எல்டி** | **எல்பிசிடி** |
| 1 | திருச்சிராப்பள்ளி | 221.42 | 90.00 | 98 | 154.00 | 135 |
| 2 | தேவகோட்டை | 8.32 | 4.06 | 78 | 4.67 | 81 |
| 3 | எடப்பாடி | 18.52 | 3.14 | 61 | 6.30 | 113 |
| 4 | குன்னூர் | 13.85 | 2.82 | 62 | 3.46 | 76 |
| 5 | உடுமலைபேட்டை | 17.87 | பகிர்மானம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது | | | |
| 6 | தூத்துக்குடி | 282.44 | பணி முடிவுற்றது | | | |

மீதமுள்ள மூன்று திட்டப்பணிகள் கீழ்கண்டவாறு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது:

| **வ. எண்.** | **உள்ளாட்சி அமைப்பின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (₹கோடியில்)** |
|---|---|---|
| 1 | பழனி | 21.60 |
| 2 | திண்டுக்கல் | 70.50 |
| 3 | மேட்டுப்பாளையம் | 9.16 |

**2.3.1.3** ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதியின் கீழ் ₹793.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 14 பணிகளில் 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பணிகள் முடிவுற்ற 5 உள்ளாட்சி அமைப்புகளில் அதிகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக நிலவரம் பின்வருமாறு:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹ கோடியில் | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல் படுத்துவதற்கு முன் | | திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் | |
| | | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | திருநெல்வேலி | 22.22 | 40.32 | 84 | 47.90 | 101 |
| 2 | கடையநல்லூர் | 21.41 | 4.06 | 78 | 4.67 | 81 |
| 3 | திருவண்ணாமலை | 36.66 | 18.30 | 100 | 20.50 | 126 |
| 4 | பள்ளிப்பாளையம் | 11.66 | 2.59 | 63 | 3.22 | 91 |
| 5 | கரூர் | 24.67 | 10.02 | 106 | 16.06 | 135 |

மீதமுள்ள 9 திட்டப்பணிகள் கீழ்கண்டவாறு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|
| 1 | தாந்தோனி | 25.16 |
| 2 | இனாம் கரூர் | 18.57 |
| 3 | உதகமண்டலம் | 27.20 |
| 4 | திருநெல்வேலி | 230.00 |

| | | |
|---|---|---|
| 5 | கடலூர் | 148.09 |
| 6 | திருச்சிராப்பள்ளி | 63.70 |
| 7 | குன்னூர் | 40.19 |
| 8 | கோயம்புத்தூர் (இணைக்கப்பட்ட பகுதிகள்) | 108.16 |
| 9 | பத்மநாபபுரம் | 14.87 |

**2.3.1.4** ஒகேனக்கல் காவேரி கூட்டுக் குடிநீர் மற்றும் ப்ளோரோஸிஸ் மட்டுப்படுத்தும் திட்டம் ₹1928.80 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் ஆகிய 3 நகராட்சிகளுக்கு பயனளிக்கிறது, இத்திட்டத்திற்கான மொத்த செலவில் 3 நகராட்சிகளின் பங்கு விகிதாசாரத் தொகை ₹399.69 கோடியாகும்.

இத்திட்டத்தின் பயனாக மேற்கண்ட நகராட்சிகளின் குடிநீர் விநியோக அளவீடுகள் பின்வருமாறு அதிகரித்துள்ளன:

| வ. எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹ கோடியில் | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்து வதற்கு முன் | | திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் | |
| | | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | தருமபுரி | 132.55 | 5.50 | 80 | 14.26 | 135 |
| 2 | கிருஷ்ணகிரி | 93.59 | 4.00 | 56 | 8.00 | 112 |
| 3 | ஓசூர் | 149.32 | 6.50 | 27 | 15.50 | 63 |

**2.3.1.5** ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ₹270.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிவடைந்துள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதன் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் கீழ்கண்டவாறு மேம்படுத்தப்பட்டு உள்ளது:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | தினசரி குடிநீர் விநியோக திட்டம் | | | |
|---|---|---|---|---|---|
| | | திட்டம் செயல்படுத்துவதற்கு முன் | | திட்டம் செயல்படுத்தப்பட்ட பின் | |
| | | எம்எல்டி | எல்பிசிடி | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | ஆத்தூர் | 3.30 | 52 | 6.20 | 100 |
| 2 | நரசிங்கபுரம் | 1.30 | 56 | 1.90 | 82 |

வேலூர் மாநகராட்சி கூட்டுக்குடிநீர் திட்டமானது ₹1295 கோடி மதிப்பீட்டில், ஹட்கோ, ஜெர்மன் மேம்பாட்டு

வங்கி மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் நிதி உதவி மற்றும் உள்ளாட்சிகளின் பங்களிப்பு தொகை ₹104.50 கோடியுடன் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பணிகள் முடிக்கப்பட்டு, வேலூர் மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நிறைவுற்றபின் வேலூர் மாநகராட்சி மற்றும் 11 நகராட்சிகளில் அதிகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக அளவீடு பின்வருமாறு:

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு ₹ கோடியில் | தினசரி குடிநீர் விநியோகம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திட்டம் செயல்படுத்துவதற்கு முன் | | திட்டம் செயல்படுத்தப் பட்ட பின் | |
| | | | விநியோகம் செய்யப்படும் அளவு (மில்லியன் லிட்டரில்) | ஒரு நபருக்கான அளவு | எம்எல்டி | எல்பிசிடி |
| 1 | வேலூர் மாநகராட்சி | 529.56 | 18.50 | 37 | 57.73 | 111 |
| 2 | ஆம்பூர் | 95.25 | 4.40 | 39 | 11.16 | 97 |
| 3 | ஆற்காடு | 47.71 | 4.20 | 77 | 5.42 | 97 |
| 4 | இராணிப்பேட்டை | 30.22 | 3.50 | 69 | 4.78 | 94 |
| 5 | குடியாத்தம் | 86.40 | 7.30 | 80 | 9.62 | 105 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | ஜோலார் பேட்டை | 16.44 | 2.58 | 68 | 2.75 | 93 |
| 7 | வாலாஜாபேட்டை | 6.84 | 2.22 | 69 | 2.80 | 87 |
| 8 | அரக்கோணம் | 87.42 | 6.00 | 76 | 7.30 | 92 |
| 9 | திருப்பத்தூர் | 36.94 | 7.03 | 90 | 7.14 | 91 |
| 10 | பேரணாம்பட்டு | 34.01 | 1.95 | 38 | 4.52 | 88 |
| 11 | மேல்விஷாரம் | 26.83 | 3.02 | 67 | 4.00 | 90 |
| 12 | வாணியம்பாடி | 47.26 | 6.70 | 70 | 8.30 | 87 |

மேலூர் நகராட்சியில் கூட்டு குடிநீர் திட்டம் ₹23.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**2.3.1.6** அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT) நிதியின் கீழ் 2015-16 மற்றும் 2017-2020 ஆண்டில் ₹5386.17 கோடி மதிப்பீட்டில் 14 குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 3 பணிகள் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டுவர தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழான பணிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|
| **அம்ரூத் 2015-2016** | | |
| 1. | தஞ்சாவூர் மாநகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 48.14 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சி (விரிவாக்கப் பகுதியில் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 395.41 |
| 3. | திருப்பூர் மாநகராட்சி (விரிவாக்கப் பகுதியில் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 250.00 |
| 4. | ஈரோடு மாநகராட்சி | 484.45 |
| 5 | வேலூர் மாநகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 234.93 |
| 6. | நாகர்கோவில் நகராட்சி | 241.00 |
| 7. | ஓசூர் நகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 87.91 |
| 8. | இராஜபாளையம் நகராட்சி | 172.70 |
| 9. | ஆம்பூர் நகராட்சி (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 50.90 |

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|
| | **<u>அம்ரூத் 2017-2020</u>** | |
| 10 | கோயம்பத்தூர் (24x7 குடிநீர் பணிகள்) | 556.57 |
| 11. | கும்பகோணம் (பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 40.50 |
| 12. | மதுரை மாநகராட்சி (நீராதாரம் மேபோட்டு பணி) | 1020.00 |
| 13. | திருப்பூர் மாநகராட்சி (விரிவாக்கப் பகுதியில் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி) | 1063.51 |
| 14. | கோயம்பத்தூர் மாநகராட்சி (விரிவாக்கப் பகுதியில் நீராதாரம் மேம்பாட்டு பணி) | 740.15 |
| | **<u>மொத்தம்</u>** | **<u>5386.17</u>** |

**2.3.1.7** தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (TNSUDP) 6 குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் ₹660.37 கோடி மதிப்பீட்டில் பின்வருமாறு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

| வ. எண் | உள்ளாட்சியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|
| 1. | சங்கரன்கோவில், புளியங்குடி, ராஜபாளையம், சிவகாசி மற்றும் திருத்தங்கல் ஆகிய நகராட்சிகளில் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் | 475.13 |
| 2. | நாமக்கல் | 185.24 |
| மொத்தம் | | **660.37** |

### 2.3.2 திறனான குடிநீர் வழங்கல் மேலாண்மை அமைப்பு

குடிநீர் வழங்கல் திட்டங்களை இயக்குவதிலும் பராமரிப்பிலும் சிறந்த கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பினை மேற்கொள்ள நீர் வழங்கல் மேலாண்மை அமைப்புகளை மேம்படுத்துவது மிகவும் அவசியமானது. அரசு அப்பணிகளுக்கு சிறப்பு முன்னுரிமை அளித்து அவற்றை நவீன தொழில்நுட்பத்துடன் செயல்டுத்த பின்வரும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

- நீருந்து கட்டமைப்பின் திறனை மேம்படுத்த தற்போதுள்ள திறனற்ற மோட்டார்கள் மற்றும் நீருந்து குழாய்களுக்குப் பதிலாக புதிய மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைத்தல்.

- சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய தற்போதுள்ள பகிர்மான கட்டமைப்பினை புனரமைத்தல்.

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் குடிநீர் திட்டங்களில் குடிநீர் பெறும் அளவு, மோட்டார் மற்றும் பம்புகளின் செயல்திறன், குடிநீர் தரத்திற்கான இயற்பியல் மற்றும் வேதியியல் தன்மைகள் போன்றவை குறித்த விவரங்கள் சேகரிப்பதை தொடர்ந்து கண்காணித்தல், கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்புகளை (SCADA) நிறுவுதல்.

- கோயம்புத்தூர் மாநகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் திட்டத்தில்

கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையகக அமைப்பு (SCADA) நிறுவப்பட்டுள்ளது. பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் இந்த அமைப்பினை (SCADA) நிறுவுவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

- திருநெல்வேலி, திருப்பூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாநகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையகக அமைப்பு (SCADA) ஒரு சில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- நாமக்கல், குமாரபாளையம், திருச்செங்கோடு நகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையகக அமைப்பு (SCADA) பணிகள் முடிவுற்று வெற்றிகரமாக பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இராசிபுரம் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகளில் இவ்வமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

- திருநெல்வேலி, தூத்துக்குடி, மற்றும் திண்டுக்கல் மாநகராட்சிகளில் கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பை (SCADA) நிறுவுவதற்கான பணி 2018-19-ம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.
- இந்த ஆண்டு செயல்படுத்தப்பட உள்ள புதிய குடிநீர் திட்டப் பணிகளில் மதிப்பீட்டின் ஒரு பகுதியாக கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு (SCADA) சேர்க்கப்பட்டு உள்ளது.

### 2.3.3 குடிநீர் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் குடிநீர் வழங்கும் நிலையை மேம்படுத்தும் பொருட்டு உட்கட்டமைப்பு, அதன் குறைபாடுகள் மற்றும் நீராதாரத்தின் நிலையினை அறிந்திட நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் முழு குடிநீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு தற்போது குடிநீர்

திட்டத்தில் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகள் குடிநீர் ஆதாரத்தின் நிலை போன்றவை ஆய்வு செய்யப்பட்டன.

சேகரிக்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் உட்கட்டமைப்பு மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிகளை மேம்படுத்தும் பொருட்டு 53 உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றில் 11 உள்ளாட்சிகள் அருகாமையில் உள்ள உள்ளாட்சிகளுடன் இணைக்கப்பட்டுவிட்டன. முதற்கட்டமாக 42 உள்ளாட்சி அமைப்புகளில் பகிர்மானக்குழாய் மேம்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான மேல்நிலைத் தொட்டி மற்றும் தரைமட்டத் தொட்டிகள் கட்டும் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மொத்தம் ₹1220.15 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

42 திட்டங்களில், 15 நகராட்சிகளுக்கான திட்டங்கள் ₹226.12 கோடி மதிப்பீட்டில், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்

திட்டம் (UIDSSMT), நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைத் திட்டம் (UIG) மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (IUDM), ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் ஜெர்மன் வங்கி நிதி உதவி திட்டம் (KfW) போன்ற திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள 27 திட்டங்களில் 5 திட்டங்கள் அம்ருத் (AMRUT) மற்றும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP) ஆகியவற்றில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. 13 திட்டங்களுக்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மற்றும் பிற திட்டங்களின் கீழ் நிதி ஆதாரம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 9 திட்டங்களுக்கு நிதி ஆதாரம் இறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் திட்டங்கள் அனைத்திலும் பகிர்மான கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

**2.3.4 கோடையை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2018 (மாநில பேரிடர் நிவாரண நிதி)**

2016 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் குறைவான அளவில் மழை பெய்ததால் 2017ஆம் ஆண்டில் கோடையில் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் புதிய ஆழ்துளை கிணறுகள் கைபம்புகளுடன் அமைத்தல் மற்றும் சிறு மின்விசை பம்புகள் அமைத்தல் பணிகள், கைபம்புகள் பராமரிப்பதற்கான உதிரிபாகங்கள் வாங்குதல், ஆழ்துளை கிணறுகள் / நீர் உறிஞ்சு கிணறுகள் புனரமைப்பு செய்தல், கைபம்புகளுடன் கூடிய ஆழ்துளை கிணறுகளை சிறுமின்விசை பம்புகளாக மாற்றியமைத்தல், டாங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், HDPE தொட்டிகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளைத் தூர்வாருதல் மற்றும் பழுதடைந்த மோட்டார்களை மாற்றுதல் ஆகிய குடிநீர் பணிகள் ₹100.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது. இதில் ₹65 கோடி

மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மானியமாக விடுவிக்கப்பட்டது. மீதமுள்ள தொகை உள்ளாட்சிகளின் பொது நிதியிலிருந்து செலவிடப்படுள்ளது. மொத்தம் 1,744 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

**2.3.5 மழை நீர் சேகரிப்பு**

நீர் ஆதாரங்களை புத்துயிர்ப்பதோடு, நிலத்தடி நீர்த்தேக்கங்களை மேம்படுத்தவும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் 2001-ல் தொடங்கப்பட்டது. இந்தியாவிலேயே மழைநீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்துவதில் தமிழகம் முதல் மாநிலமாக திகழ்கிறது. 2001-2006 ஆண்டு காலகட்டத்தில் இத்திட்டம் சிறப்பான முறையில் தீவிரமாக செயல்படுத்தப் பட்டதால் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில், நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

கட்டட அனுமதி வழங்குவதற்கு, அனைத்து கட்டடங்களிலும் "மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பினை" கட்டாயமாக அமைக்க வழி வகை செய்யும் விதமாக

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள் 1972, அடுக்குமாடி மற்றும் பொது கட்டட விதிகள் 1973, மதுரை மாநகராட்சி கட்டடங்கள் (நீர் பாதுகாப்பு) விதிகள் 2002 ஆகியவற்றில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. பொது மற்றும் தனியார் கட்டடங்களில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் புத்துயிர் பெறுவது மட்டும் அல்லாமல் புதியவை அமைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில், மொத்தமுள்ள 44.56 லட்சம் கட்டடங்களில், 38.86 லட்சம் கட்டடங்களில் (30116 அரசு கட்டடங்கள் மற்றும் 38.56 லட்சம் தனியார் கட்டடங்கள்) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நகர்ப்புர

உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நீர் நிலைகளில் மழைநீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. கோவில் குளங்கள் உட்பட மொத்தமுள்ள 1486 குளங்களில், 773 குளங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்புகள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் தொடர்பாக பல்வேறு புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும் பழுதடைந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை சீர் செய்வதற்கு உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் உள்ளாட்சி அமைப்புகளால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மழைநீர் சேகரிப்பு அமைப்புகளில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் உரிய செயல் திட்டம் உள்ளாட்சி அமைப்புகளால் உருவாக்கப்பட்டு உள்ளது.

பருவமழை தொடங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து உள்ளாட்சிகளிலும் மழைநீர்

வடிகால், கால்வாய்கள், சிறு பாலங்கள் மற்றும் நீர்நிலைகளுக்கு செல்லும் வாய்க்கால்கள் ஆகியவை தூர்வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளன. அனைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகளும் புனரமைப்பு செய்யப்பட்டு செயல்படும் நிலையில் உள்ளன.

இந்நடவடிக்கையின் மூலம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 87 சதவீத கட்டடங்கள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் 52 சதவீதம் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் மழைநீரின் சேகரிப்பு 5.12 டிஎம்சி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அரியலூர், நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை மற்றும் சாத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் ஈரோடு மாநகராட்சியில் நீர்வளங்களை மேம்படுத்துவதற்காக ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதி (KfW) உதவியுடன் கீழ் ₹26.67 கோடி நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது.

## 2.4 பாதாள சாக்கடைத் திட்டம் (UGSS)

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டங்களை (UGSS) அமல்படுத்துவதற்கான கொள்கையை அரசு நிர்ணயித்துள்ளது. 117 உள்ளாட்சி அமைப்புகளில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கைகள் ₹11271 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்டுள்ளன. உரிய நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்டபின் இத்திட்டங்கள் பல்வேறு கட்டங்களாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### 2.4.1 செயலாக்கத்திலுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் பகுதி III-ன் கீழ் ₹1025.51 கோடி மதிப்பீட்டில் 22 நகரங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பாதாள சாக்கடைத் திட்டங்களில், உதகமண்டலம், சின்னமனூர், நாமக்கல்,

தருமபுரி, பெரம்பலூர், திண்டுக்கல் (பகுதி), திருவண்ணாமலை, காஞ்சிபுரம், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், தேனி-அல்லி நகரம், வேலூர், நாகப்பட்டினம் (பகுதி), புதுக்கோட்டை, திருவள்ளூர், விருதுநகர், கிருஷ்ணகிரி மற்றும் பல்லவபுரம் ஆகிய நகராட்சிகளில் ₹757.04 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் துணைத் திட்டமான நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகை திட்டத்தின் கீழ் 4 உள்ளாட்சி அமைப்புகளில் (மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள், ஆவடி மற்றும் தாம்பரம் நகராட்சிகள்) ₹925.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்களின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்

திட்டத்தின் கீழ் மறைமலைநகர், அரியலூர், அரக்கோணம், சாத்தூர், சிதம்பரம், திருப்பத்தூர், பெரியகுளம், மேட்டூர், நாகர்கோவில் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 10 நகரங்களில் ₹575.86 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, மறைமலைநகர், உடுமலைப்பேட்டை, பெரியகுளம் மற்றும் அரியலூர் நகராட்சியில் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஜெர்மன் மேம்பாட்டு வங்கி நிதியின் (KfW) கீழ் ஈரோடு மாநகராட்சியில் ₹209.09 கோடி, காரைக்குடி நகராட்சியில் ₹112.53 கோடி, பொள்ளாச்சி நகராட்சியில் ₹109.62 கோடி, மேட்டுப்பாளையம் நகராட்சியில் ₹91.70 கோடி மற்றும் விழுப்புரம் நகராட்சியில் ₹49.36 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளன. அதில் விழுப்புரம் நகராட்சியில் பணி முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. ஈரோடு மாநகராட்சி, காரைக்குடி,

மேட்டுப்பாளையம் மற்றும் பொள்ளாச்சி நகராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சத்தியமங்கலம் நகராட்சியில் ₹54.26 கோடி, போடிநாயக்கனூர் நகராட்சியில் ₹71.10 கோடி, அரியலூர் (விடுபட்ட பகுதி) நகராட்சியில் ₹3.30 கோடி, பெரம்பலூர் (விடுபட்ட பகுதி) நகராட்சியில் ₹9.50 கோடி மற்றும் ராசிபுரம் நகராட்சியில் ₹55.42 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் (IUDM) கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதில் போடிநாயக்கனூர், அரியலூர் (விடுபட்ட பகுதி) மற்றும் பெரம்பலூர் (விடுபட்ட பகுதி) ஆகிய நகராட்சிகளில் பணிகள் முடிக்கப்பட்டு வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. சத்தியமங்கலம் மற்றும் ராசிபுரம் நகராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

ஓசூர் நகராட்சிக்கு தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டத்தின் (TNSUDP) கீழ் ₹283.94 கோடி நிதி ஒதுக்கீட்டில்

நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் துவங்க தேவையான இடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள், பல்லவபுரம் நகராட்சியில் ₹ 22.00 கோடி, கும்பகோணம் நகராட்சியில் ₹59.84 கோடி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - இரண்டாம் கட்டம் ₹344.00 கோடி, மூன்றாம் கட்டம் - ₹312.14 கோடி திருநெல்வேலி மாநகராட்சி - இரண்டாம் கட்டம் ₹289.01 கோடி மற்றும் மூன்றாம் கட்டம் ₹440.19 கோடி, வேலூர் மாநகராட்சி - இரண்டாம் கட்டம் ₹343.69 கோடி மற்றும் மூன்றாம் கட்டம் ₹293.77 கோடி, இராமேஸ்வரம் நகராட்சியில் ₹40.33 கோடி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு ₹442.00 கோடி, ராஜபாளையம் நகராட்சியில் ₹246.99 கோடி மற்றும் ஆம்பூர் நகராட்சியில் ₹165.55 கோடி மற்றும் திருப்பூர் மாநகராட்சி விரிவாக்கப்பகுதிகள் ₹604.05 கோடி மதிப்பீட்டில் அம்ருத் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவிகளுடன் பல்வேறு நிலையில் செயல்படுத்தப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ள அரியலூர், கோயம்புத்தூர் (பகுதி), தருமபுரி, திருவண்ணாமலை, பெரியகுளம், திண்டுக்கல் (பகுதி), பல்லவபுரம், மறைமலைநகர், சின்னமனூர், காஞ்சிபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை, உதகமண்டலம், நாமக்கல், கரூர், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், திருப்பூர், பெரம்பலூர், இராமநாதபுரம், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, வேலூர், உடுமலைப்பேட்டை, திருவள்ளூர், தேனி-அல்லிநகரம், விருதுநகர், அரியலூர், நாகப்பட்டினம் (பகுதி), கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 34 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 5,50,386 (கடந்த ஆண்டு 4,75,663 இணைப்புகள்) வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சியின் பெயர் | வழங்கப்பட்ட மொத்த வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாநகராட்சிகள் | | |
| 1 | கோயம்புத்துர் | 38,502 |
| 2 | திண்டுக்கல் | 9,451 |
| 3 | திருப்பூர் | 15,481 |

| வ. எண் | நகர்ப்புர உள்ளாட்சியின் பெயர் | வழங்கப்பட்ட மொத்த வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4 | தஞ்சாவூர் | 27,929 |
| 5 | திருச்சிராபள்ளி | 57,683 |
| 6 | திருநெல்வேலி | 24,984 |
| 7 | மதுரை | 1,62,939 |
| 8 | வேலூர் | 5,175 |
| மொத்தம் | | 3,42,144 |
| **நகராட்சிகள்** | | |
| 1 | திருவண்ணாமலை | 6,083 |
| 2 | விழுப்புரம் | 5,154 |
| 3 | உடுமலைப்பேட்டை | 6,506 |
| 4 | உதகமண்டலம் | 15,778 |
| 5 | கரூர் | 10,200 |
| 6 | தருமபுரி | 1,875 |
| 7 | நாமக்கல் | 9,318 |
| 8 | கிருஷ்ணகிரி | 3,208 |
| 9 | சின்னமனூர் | 6,281 |
| 10 | தேனி -அல்லிநகரம் | 7,160 |
| 11 | இராமநாதபுரம் | 9,460 |
| 12 | பல்லவபுரம் | 26,690 |
| 13 | மறைமலைநகர் | 4,594 |
| 14 | திருவள்ளூர் | 1,971 |
| 15 | கடலூர் | 2,718 |
| 16 | காஞ்சிபுரம் | 19,712 |
| 17 | விருதுநகர் | 2,997 |
| 18 | கும்பகோணம் | 19,456 |
| 19 | மயிலாடுதுறை | 10,880 |
| 20 | திருவாரூர் | 6,365 |
| 21 | புதுக்கோட்டை | 8,439 |
| 22 | நாகப்பட்டினம் | 5,273 |
| 23 | பெரம்பலூர் | 10,092 |
| 24 | பெரியகுளம் | 6,904 |
| 25 | ஆவடி | 382 |
| 26 | அரியலூர் | 746 |
| மொத்தம் | | 2,08,242 |
| ஆகமொத்தம் | | 5,50,386 |

நவீன தொழில்நுட்ப முறைகளான குடைவு தொழில் நுட்பம் (Trenchless Technology) மூலம் குழாய் பதித்தல், அச்சு வார்த்த மனித நுழைவு அமைப்புகள், HDPE குழாய்கள் அமைப்பது மற்றும் இதர நவீன முறைகளைப் பயன்படுத்தி பணிகள் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டு வருகிறது.

### 2.5. கழிவு நீர் கசடு மேலாண்மை

நச்சுத் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட கழிவுநீரே பொதுவாக கசடு கழிவு என்றழைக்கப்படுகிறது. இதில் திரவ (Liquid), திட (Sludge), மேலும் கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் (Scum) ஆகியன மிகையாக காணப்படும். கழிவு நீர்த் தொட்டி வடிவமைப்பு, கழிவு சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில் அடங்கும். நமது துரிதகதியில் நகரமயமாகும் பொருளாதார சூழலில், குறிப்பிட்ட கால இடைவெளியில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல்,

கசடு கழிவினை அகற்றி கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்தல், மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு ஒரு விரிவான திட்டம் மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டில் 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் மற்றும் 12,524 பஞ்சாயத்துக்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் 9 மாநகராட்சிகள் (சென்னை உட்பட), 27 நகராட்சிகள் மற்றும் 3 பேருராட்களில், பாதாளச் சாக்கடை திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. வேகமாக வளர்ந்து வரும் நகரமயமாக்கத்தினால் நகரை சுற்றி உள்ள பகுதிகளில் மக்கள்தொகை பலமடங்கு உயர்வதால், பாதாள சாக்கடை வசதி இல்லாததால் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் உருவாகும் கழிவுநீரினை சுகாதார முறையில் கையாள அருகே அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து தொகுப்பு முறையில் (Cluster Basis) செயல்படும் கழிவுநீர் கசடு மேலாண்மைத் திட்டம் அவசியமானதாகிறது.

### 2.5.1 கழிவு நீர் கசடு மேலாண்மையின் அவசியம்

கழிவு நீர் கசடு கையாள்வதனை ஒழுங்கு படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஒரு முழுமையான வழிகாட்டுதலை, அரசாணை (நிலை) எண் 106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.09.2014 வாயிலாக அரசு வெளியிட்டுள்ளது. இவ்வழிமுறை கீழ்க்காணும் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்

- நச்சுத் தொட்டிகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்
- உந்துதல் மற்றும் கசடு நீக்குதல்
- கழிவுநீர் கசடுகளை எடுத்துச் செல்லுதல்
- சுத்திகரித்தல் மற்றும் அகற்றுதல்
- கழிவுநீர் கசடு சேகரித்தல், இடம் பெயர்த்தல், சுத்திகரிப்புக்கான கட்டணங்கள்
- தகவல், கல்வி திட்டம் பற்றிய புரிதல் மற்றும் பரிமாற்றம்
- மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலமாக ஆவணம் காத்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.

சேகரிப்பு இடங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து 18 முதல் 20 கிலோ மீட்டர் சுற்றளவில் அமைந்துள்ளவாறு 35 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 21 உள்ளாட்சி அமைப்பு தொகுப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. நகர்ப்புர மற்றும் கிராமப்புர உள்ளாட்சி அமைப்புகள், தங்களது உள்ளாட்சி அமைப்புகளில் உருவாகும் கழிவுநீர் கசடுகளை மேற்படி தொகுப்புகளில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வெளியேற்ற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் நகர்ப்புர மற்றும் கிராமப்புர உள்ளாட்சி அமைப்புகளின் கழிவுநீரினை வெளியேற்ற, தொகுப்புகளை கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் செயல்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பின்பற்றும் தொழில் நுட்பம், திறன் மற்றும் பயன்பாட்டின் விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்) | தொழில் நுட்பம் | வரத்து (மில்லியன் லிட்டரில்) | பயன்பாடு விழுக்காடு | வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (மார்ச் 31, 2018 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | - | 764.00 | ASP | 530.00 | 69 | 5,83,520 |
| 2 | சின்னமனூர் | 2012 | 4.00 | ASP | 3.20 | 80 | 6,281 |
| 3 | கோயம்புத்தூர் | 2010 | 110.00 | SBR | 27.00 | 25 | 38,502 |
| 4 | கடலூர் | 2016 | 12.25 | ASP | 0.89 | 0.8 | 2,718 |
| 5 | தருமபுரி | 2013 | 4.86 | ASP | 1.38 | 28 | 1,875 |
| 6 | திண்டுக்கல் | 2012 | 13.65 | ASP | 2.60 | 19 | 9,451 |
| 7 | காஞ்சிபுரம் | 2012 | 14.70 | WSP | 13.50 | 92 | 19,712 |
| 8 | கரூர் | 2007 | 15.00 | EAP | 6.50 | 43 | 10,200 |
| 9 | கும்பகோணம் | 2009 | 17.00 | ASP | 14.00 | 82 | 19,456 |
| 10 | கிருஷ்ணகிரி | 2016 | 9.00 | ASP | 1.85 | 21 | 3,208 |
| 11 | மதுரை | 2011 | 170.70 | SBR | 40.00 | 23 | 1,62,939 |
| 12 | மறைமலைநகர் | 2010 | 2.02 | EAP | 1.80 | 89 | 4,594 |
| 13 | மயிலாடுதுறை | 2007 | 8.50 | WSP | 5.86 | 69 | 10,880 |
| 14 | மாமல்லபுரம் | 2016 | 2.34 | ASP | 0.45 | 19 | 763 |
| 15 | நாமக்கல் | 2012 | 5.00 | ASP | 5.00 | 100 | 9,318 |
| 16 | நாகப்பட்டினம் | 2016 | 12.59 | ASP | 1.80 | 14 | 5,273 |
| 17 | ஒரத்தநாடு | 2016 | 1.50 | ASP | 0.28 | 19 | 1,040 |
| 18 | பல்லவபுரம் | 2011 | 0.00 | ASP | 13.00 | 0 | 26,690 |

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்) | தொழில் நுட்பம் | வரத்து (மில்லியன் லிட்டரில்) | பயன்பாடு விழுக்காடு | வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (மார்ச் 31, 2018 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 19 | பெரம்பலூர் | 2013 | 4.20 | ASP | 2.50 | 60 | 10,092 |
| 20 | புதுக்கோட்டை | 2016 | 10.62 | ASP | 2.60 | 24 | 8,439 |
| 21 | இராமநாதபுரம் | 2013 | 7.00 | ASP | 6.00 | 86 | 9,460 |
| 22 | தஞ்சாவூர் | 2007 | 28.05 | ASP | 13.00 | 46 | 27,929 |
| 23 | திருவண்ணா மலை | 2013 | 8.76 | ASP | 2.70 | 31 | 6,083 |
| 24 | தேனி -அல்லிநகரம் | 2015 | 12.05 | ASP | 1.80 | 15 | 7,160 |
| 25 | திருவள்ளூர் | 2016 | 6.20 | MBBR | 0.40 | 6 | 1,971 |
| 26 | திருவாரூர் | 2014 | 6.92 | ASP | 3.00 | 43 | 6,365 |
| 27 | திருநெல்வேலி | 2007 | 24.20 | WSP | 11.00 | 45 | 24,984 |
| 28 | திருப்பூர் | 2008 | 15.00 | EAP | 8.00 | 53 | 15,481 |
| 29 | திருச்செந்தூர் | 2016 | 3.90 | ASP | 0.03 | 0.77 | 135 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 2007 | 58.00 | WSP | 56.00 | 97 | 57,683 |
| 31 | உதகமண்டலம் | 2000 | 5.00 | ASP | 3.60 | 72 | 15,778 |
| 32 | உடுமலைப்பேட்டை | 2016 | 7.81 | ASP | 2.40 | 31 | 6,506 |
| 33 | வேலூர் | 2015 | 10.28 | ASP | 5.00 | 49 | 5,175 |
| 34 | விருதுநகர் | 2016 | 7.65 | ASP | 0.31 | 4 | 2,997 |
| 35 | விழுப்புரம் | 2014 | 12.50 | ASP | 3.50 | 26 | 5,154 |

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டம் துவங்கப்பட்ட ஆண்டு | சுத்திகரிப்பு திறன் (மில்லியன் லிட்டரில்) | தொழில் நுட்பம் | வரத்து (மில்லியன் லிட்டரில்) | பயன்பாடு விழுக்காடு | வழங்கப்பட்ட வீட்டு இணைப்புகள் (மார்ச் 31, 2018 வரை) |
|---|---|---|---|---|---|---|---|
| 36 | பெரியகுளம் | 2017 | 5.47 | ASP | 3.70 | 68 | 6,904 |
| 37 | ஆவடி | 2017 | 40.00 | ASP | 0.50 | 1 | 382 |
| 38 | அரியலூர் | 2018 | 4.16 | ASP | 0.30 | 7 | 746 |
| | மொத்தம் | | 1444.88 | | 774.11 | 41 | 11,34,804 |

நச்சுத் தொட்டிகளை கணக்கெடுத்தல், சுகாதாரமற்ற கழிவறைகளை கண்டறிதல் மற்றும் பயன்பாட்டில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் வடிகட்டி படுகை அமைத்தல் முதலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதுவரை மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கழிவுநீர் நச்சுத் தொட்டிகளிலிருந்து கழிவுநீரானது 211 எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட லாரிகள் மூலம் அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டமாக

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 50,000 மக்களுக்கு பயன்படும் வகையிலான முன்மாதிரியான கசடு கழிவு மேலாண்மை திட்டம் பில் அண்டு மெலின்டா கேட்ஸ் நிறுவனத்தின் (Bill and Melinda Gates Foundation) உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2.6 விலங்குகள் (நாய்) இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம்**

விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டுத் திட்டம், தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காகவும், மனிதாபிமானமற்ற அடிப்படையில் கொல்லப்படுவதை தவிர்ப்பதற்காகவும் செயல்படுத்தப்படுவதாகும். இத்திட்டம் உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி மாநகராட்சி / நகராட்சிகளின் பொது சுகாதார பிரிவின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுகிறது.

அரசாணை எண் 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 05.04.2013-ல் இத்திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட ₹5.40 கோடியில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு (சென்னை தவிர) கருத்தடை அறுவைச் சிகிச்சைக்காக நாய்களைக் கொண்டு செல்ல ₹3.00 கோடி செலவில் 60 புதிய வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் ₹2.40 கோடி செலவில் 80 அறுவைச் சிகிச்சை கூடங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

இத்திட்டத்தை செம்மையாக செயல்படுத்திட துப்புரவு பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு புகழ்பெற்ற தன்னார்வு தொண்டு நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. அறுவைச் சிகிச்சைக்கு முன்னரும், பின்னரும் நாய்கள் வசதியான கூடங்களில் தீவிர கண்காணிப்பில் வைக்கப்படுகின்றன. அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட நாய்களுக்கு நோய்கள் ஏற்படாதவாறு நோய்தடுப்பு மருந்துகள் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி 2013 ஆம் ஆண்டில் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி (சென்னை தவிர) பகுதிகளில் தெருவில் சுற்றித்திரியும் நாய்களின் எண்ணிக்கை 2,42,655 என கணக்கெடுக்கப்பட்டது. தற்போது மார்ச் 2018-ஆம் ஆண்டு வரை 1,90,365 நாய்களுக்கு ₹9.57 கோடி மதிப்பில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தெரு நாய்களுக்கும் தொடர்ச்சியாக அறுவை சிகிச்சை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.7 திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மையானது மாநில அரசுக்கும் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளது. பெருநகரங்களில் இது அதிகமாக உள்ளது. அதிக மக்கள் தொகை உள்ள பகுதிகளில் திடக்கழிவானது அதிகமாக ஏற்படுகிறது.

தமிழகத்தில் 11 மாநகராட்சிகள் (சென்னை தவிர) மற்றும் 124 நகராட்சிகளில் தினந்தோறும் சுமார் 7,671

மெட்ரிக் டன் திடக்கழிவு உற்பத்தியாகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான முதற்கட்ட கழிவு சேகரிப்பு, கழிவுகளை தேவைப்படும் இடத்திற்கு எடுத்து சென்று கையாளுதல் போன்ற நடவடிக்கைகள் செய்ய ஏதுவாக வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவை தமிழக அரசின் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ் வாங்கப்பட்டு வருகின்றன. பரவலாக்கப்பட்ட முறையில் சிறிய அளவிலான உரக்கூடங்கள் அமைத்து மக்கும் கழிவுகளிலிருந்து உரம் தயாரித்தல், ஒருங்கிணைந்த காற்றாடல் முறையில் உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மறுசுழற்சி மற்றும் கழிவு மீட்பு பொருள் சேகரிப்பு மையம் அமைத்தல், உயிரி எரிவாயு கூடம் அமைத்தல், போன்ற பணிகள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் பல ஆண்டுகளாக கொட்டி வைக்கப்பட்டுள்ள குப்பைகளில் உயிரி அகழ்வு மூலம் நிலத்தை மீட்டெடுத்தல் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### 2.7.1 திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016

நகராட்சி திடக் கழிவு விதிகள், 2000 திருத்தியமைக்கப்பட்டு, ஏப்ரல் 8, 2016 அன்று புதிய திடக் கழிவு மேலாண்மை விதிகளை அரசு வெளியிட்டது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ஐ நடைமுறைபடுத்தும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் உபவிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவித்துள்ளபடி, பயனாளர் கட்டணம் மற்றும் அபராதத் தொகையை உள்ளடக்கி இந்த உபவிதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே கழிவுகள் பிரித்தாளும் முறையினை செயல்படுத்தும் வகையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் மட்டும் நெகிழி மற்றும் உலர் கழிவுகள் சேகரிக்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. திடக்கழிவு மேலாண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த

நடைமுறையினால் வீடுதோறும் கழிவு சேகரிப்பு 90 சதவீகிதம், கழிவு உருவாகும் இடத்திலேயே பிரித்தல் 63 சதவீதமும் எட்டப்பட்டுள்ளது.

### 2.7.2 சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதி

திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியின் கீழ் நிதி நிலைமை நலிவுற்றுள்ள உள்ளாட்சி அமைப்புகளில் ஆண்டுக்கு ₹100 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை 10 மாநகராட்சி மற்றும் 120 நகராட்சிகளில் ₹628.97 கோடி திட்ட மதிப்பீட்டில் 1255 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றுள் 844 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.7.3 உயிரி எரிவாயுக் கூடங்கள்

நகராட்சிகளில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் மக்கும் தன்மையுள்ள மொத்த கழிவுகள் குறிப்பாக உணவகங்கள், தங்கும் விடுதிகள், திருமண மண்டபங்கள், காய்கறி அங்காடிகள், இறைச்சிக் கூடங்கள் ஆகியன மூலம் பெறப்படும் கழிவுகள் மூலம் 33 உயிரி எரிவாயு கூடங்கள் 3 மெட்ரிக் டன், 5 மெட்ரிக் டன், மற்றும் 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட மொத்தம் நாளொன்றுக்கு 179 மெட்ரிக் டன் திறனுடன் 8 மாநகராட்சிகள், 28 நகராட்சிகளில் ₹ 30.39 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம், பகுதி-2 திட்டம் ஆகிய திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டுடன் உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

உயிரி எரிவாயுக் கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் ஆற்றல் நகராட்சி உரக்கிடங்குகளிலுள்ள மின் விளக்குகள் எரிய வைக்கவும், உரம் தயாரிக்க தேவையான இயந்திரங்களை இயக்குவதற்கும், திரவக்கழிவுகளை

சுத்தப்படுத்தும் அலகுகளை இயக்குவதற்கும், அம்மா உணவகங்களின் சமையல் எரிவாயு பயன்பாட்டிற்கும், எரிவாயு தகனமேடை இயக்கத்துக்கும் பயன்படுத்தப்படுகிறது.

### 2.7.4 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள்

தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் மற்றும் செம்பாக்கம் நகராட்சிகளில் உருவாகும் திடக்கழிவுகளை முழுமையாக செயலாக்கம் செய்யும் விதமாக நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் திறன் கொண்ட ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம், முதல் தொகுப்பின் கீழ் ₹ 99.00 கோடி மதிப்பீட்டில் கழிவு மறுசுழற்சி மையம் கட்டப்பட்டு திடக்கழிவுகளிலிருந்து உரம் மற்றும் எரிபொருள் (RDF) தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இரண்டாவது தொகுப்பில் கழிவிலிருந்து 2.9 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு நடைமுறை படுத்தப்படவுள்ளது. இதற்கான ஆயத்த

பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 5125 மெட்ரிக் டன் உரம் தயாரிக்கப்பட்டு அதில் 1941 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது. திடக்கழிவிலிருந்து 71,024 மெட்ரிக் டன் எரிபொருள் தயாரிக்கப்பட்டு அதில் 5,331 மெட்ரிக் டன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 2.7.5 பரவலாக்கப்பட்ட சிறிய அளவு உர உற்பத்திக்கூடம்

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் 4 அல்லது 5 வார்டுகளில் உருவாகும் மக்கும் கழிவுகளை உரம் தயாரிக்க ஏதுவாக 2 முதல் 5 டன் கொள்ளளவு கொண்ட பரவலாக்கப்பட்ட சிறிய அளவு உரஉற்பத்திக் கூடங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தினால் இரண்டாம் நிலை சேகரிப்பானுக்கு ஆகும் செலவினம் குறைக்கப்படுவதுடன் குப்பை தொட்டி இல்லா தெருக்கள், வார்டுகள் என்ற நிலை உருவாக்கப்படுகிறது. மேலும்

அந்தப்பகுதியில் உள்ள சுய உதவி குழுக்கள் இதில் வேலை வாய்ப்பு பெற்று பயனடைகிறார்கள்.

முதற்கட்டமாக திடக்கழிவில் உள்ள மக்கும் கழிவுகளை கொண்டு உரம் தயாரிக்கும் வகையில் பரவலாக்கப்பட்ட முறையில் சிறிய அளவிலான உர உற்பத்தி கூடங்கள் திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மாநகராட்சிகளில் சீரிய முறையில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டமாக இத்திட்டம் தூத்துக்குடி, சேலம், திண்டுக்கல், மற்றும் திருநெல்வேலி மாநகராட்சிகள் மற்றும் ஆவடி, பூந்தமல்லி, திருவேற்காடு, பம்மல், அனகாபுத்தூர், திருத்தனி, அரக்கோணம், திருவண்ணாமலை, ஆரணி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், வாணியம்பாடி, திருவத்திபுரம், மேல்விஷாரம், ஓசூர், எடப்பாடி, ஆத்தூர், நரசிங்கபுரம், குமாரபாளையம், பவானி, வேதாரண்யம், தேவகோட்டை, குன்னூர், உதகமண்டலம், கூடலூர், நாகபட்டினம், வந்தவாசி, ஒட்டன்சத்திரம்,

காயல்பட்டினம் மற்றும் துறையூர் நகராட்சிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 2.7.6 உரம் தயாரித்தல்

உள்ளாட்சி அமைப்புகளில் தரம் பிரிக்கப்பட்ட திடக் கழிவுகளை கொண்டு மக்கும் தன்மை கொண்ட கழிவுகளை உரக்குவியல்கள் அமைத்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 5 மாநகராட்சிகள் மற்றும் 56 நகராட்சிகளில் ஆண்டொன்றுக்கு 90497 மெட்ரிக் டன் மக்கிய உரம் மற்றும் மண் புழு உரம் தயார் செய்யப்பட்டு விவசாய பண்ணைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி உர உற்பத்தி நிறுவனங்களுடன் உர விற்பனைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி 4 மாநகராட்சிகள் மற்றும் 5 நகராட்சிகள், மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடட் - உடன் (Madras Fertilizer Ltd.)

முத்தரப்பு ஒப்பந்தம் மேற்கொண்டு இதுவரை 5393 மெட்ரிக் டன் உரமானது வழங்கப்பட்டுள்ளது.

### 2.7.7 வெப்பச்சிதைவு (Pyrolysis) மையங்கள்

வெப்பச் சிதைவு (Pyrolysis) முறையானது மக்க வைக்க இயலாத மற்றும் மறுசுழற்சிக்குள்ளாக்க இயலாத திட உயிரியல்புகளை எரியூட்டி அதன் வாயிலாக எளிதில் சேமித்து வைக்கக்கூடிய மற்றும் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய திரவ எண்ணையாக மாற்றக்கூடிய முறையாகும். இந்த எண்ணையை வெப்பம் மற்றும் வேதிப்பொருள் உருவாக்கும் ஆற்றல் எரிபொருளாகப் பயன்படுத்தலாம். இந்த முறையைக் கையாண்டு சாத்தியமான உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவின் அங்கமான மக்கவைக்க இயலாத மற்றும் மறுசுழற்சிக்குள்ளாக்க இயலாத நெகிழிப் பைகள் (Plastic), துணிகள் மற்றும் இதர எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவுகளை அகற்ற பைராலிசிஸ் மையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

## 2.8 சாலைகள்

சாலைகள் நாட்டின் பொருளாதார மேம்பாடு, வளர்ச்சி மற்றும் சமூக நலன்களில் முக்கிய பங்கு வகிக்கின்றது. பொதுச் சொத்துக்களில் சாலைகள் மிக முக்கிய அங்கம் வகிக்கின்றது. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் (MoRTH) விவரக் குறிப்புகளின் அடிப்படையில் செலவு மற்றும் பயன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு நீடிக்கும் வகையில் சாலைகள் தரமாக வடிவமைக்கப்படுகின்றன.

மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் மொத்தம் 23,355.53 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில் 5501.55 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் சாலைகளும், 15,853.748 கி.மீ. நீளத்திற்கு தார் சாலைகளும், 606.662 கி.மீ. நீளத்திற்கு கப்பி சாலைகளும், 1261.29 கி.மீ. நீளத்திற்கு மண்சாலைகளும், மீதமுள்ள 132.28 கி.மீ. நீள சாலைகள் செதுக்கப்பட்ட கற்கள், பேவர் பிளாக்குகள்

போன்றவற்றால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் வழங்கல் திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளினால் சேதமடைந்த சாலைகளைப் பராமரித்தல், சீரமைத்தல் போன்ற பணிகள் நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்ட நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.8.1 நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (Tamil Nadu Urban Road Infrastructure Project)

அரசு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தினை உருவாக்கி நகராட்சிகளின் உட்கட்டமைப்பு விரிவாக்கம், குடிநீர் விநியோக திட்டங்கள், பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்களால் சேதமடைந்த சாலைகளை சீரமைத்து மேம்படுத்தும் பணிகளை செயல்படுத்தி வருகிறது.

பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த 4808.99 கிலோ மீட்டர் நீள சாலைகளை சீரமைப்பதற்காக கடந்த ஏழாண்டுகளில் ₹2401.55 கோடி மதிப்பீட்டில் 4992 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் 4660 பணிகள் ₹1953.25 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. விவரங்கள் கீழ்க் காணுமாறு:

| **வருடம்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (₹கோடியில்)** | **நீளம் (கி.மீ)** | **எடுக்கப்பட்ட மொத்த பணிகள்** |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2011-12 | 200.00 | 584.394 | 1035 |
| 2012-13 | 186.50 | 516.115 | 1084 |
| 2013-14 | 265.61 | 523.313 | 1063 |
| 2014-15 | 263.12 | 501.610 | 1084 |
| 2015-16 | 258.29 | 1016.410 | 248 |
| 2016-17 | 247.16 | 871.35 | 258 |
| 2017-18 | 411.16 | 795.80 | 220 |
| **மொத்தம்** | 1831.84 | 4808.992 | 4992 |

## 2.9 தெரு விளக்குகள்

தெரு விளக்குகள் நகர்ப்புர அடிப்படை வசதி ஆகும். மேலும், அவை உள்ளாட்சி அமைப்புகளின் மிக முக்கியமான பொறுப்புகளில் ஒன்றாகும். உள்ளாட்சிகளிலுள்ள தெருவிளக்குகளின் மின் கட்டண செலவானது உள்ளாட்சிகளின் நிதி ஆதாரங்களில் 25 முதல் 30 சதவீதமாகும். ஆகவே, மின் சிக்கனம் கொண்ட தெருவிளக்குகளை அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

மாநிலத்திலுள்ள 11 மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் 124 நகராட்சிகளில் மொத்தம் 7.42 இலட்சம் தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

மின்சார சேமிப்பு நிறுவனங்களின் (Energy Saving Companies) மூலம் 9 மாநகராட்சிகளிலும், தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மண்டலங்களின் 35 நகராட்சிகளிலும் செயலாக்கம் மற்றும் பராமரித்தல் உட்பட்ட மின்சார

சேமிப்பு நடவடிக்கைகள் ஒரு முன்மாதிரி திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மின் கட்டணம் 45% வரை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்திற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011-12, 2012-13, 2013-14 மற்றும் 2014-15-ஆம் ஆண்டுகளில் ₹ 183.63 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 3,13,507 தெரு விளக்குகளில் 2,16,680 தெருவிளக்குகளை மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி (LED) தெருவிளக்குகளாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதுவரை 1,66,230 தெருவிளக்குகள் மின் சிக்கனம் வாய்ந்த எல்இடி (LED) தெருவிளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மேலும் திண்டுக்கல் மாநகராட்சி மற்றும் எஞ்சியுள்ள 90 நகராட்சிகளில் உள்ள 3,07,300 அனைத்து வகையான தெரு விளக்குகளையும், மின்சார சேமிப்பு நிறுவனங்களின் 100 சதவிகிதம் முதலீட்டில், மின் சேமிப்பு விளக்குகளாக (LED) மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதலீட்டு தர தணிக்கை அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் மின்சார சேமிப்பு நிறுவனங்களின் நூறு சதவித முதலீட்டில் அனைத்து விதமான தெரு விளக்குகளையும் மாற்றி அமைத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 2.10 சிறப்பு உட்கட்டமைப்புத் திட்டம்

### 2.10.1 நவீன எரிவாயு தகன மேடை

சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையாக, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நவீன எரிவாயு தகனமேடைகள் அமைக்கப்படுகின்றன. இதன் மூலம் விறகுகளின் பயன்பாடு 50% குறைவது மட்டுமல்லாமல் எரியூட்டப்படும் நேரமும் குறைகிறது. மேலும் மழைக்காலங்களில் கூட திறன்பட எரியூட்ட முடியும்.

இதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 135 நகர்ப்புர உள்ளாட்சிகளில் 96 நகர்ப்புர உள்ளாட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ₹39.38 கோடி செலவில் 114 நவீன எரிவாயு

தகன மேடைகள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 95 தகன மேடைகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுநல சங்கங்களின் பராமரிப்பில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 19 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.10.2 நவீன இறைச்சிக் கூடங்கள்

சுகாதாரமான முறையில் இறைச்சிக் கூடங்கள் நடத்த நவீன இறைச்சி கூடங்களை அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அமைக்க முடிவு செய்ப்பட்டுள்ளது. இறைச்சி கூடங்களை நவீன படுத்திடவும், சுகாதாரமாகவும் சுற்றுச் சூழலுக்கு உகந்த வகையில் அவற்றை இயக்கவும், சுகாதார குறைபாடுகளிலிருந்து காக்கவும், கடந்த ஐந்தாண்டுகளில் பகுதி-2 திட்டம், உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி ஆகியவற்றின் கீழ், 8 மாநகராட்சிகள் மற்றும் 26 நகராட்சிகளில் ₹10.81 கோடி மதிப்பீட்டில் 38 நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணிகள்

எடுத்துக்கொள்ளப்பட்டு, அவற்றில் 31 நவீன இறைச்சிக் கூடங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நவீன இறைச்சிக் கூடம் ₹10.49 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் 50 விழுக்காடு நிதி உதவியுடன் 2 கூடங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒரு பணி முடிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ₹3.38 கோடி ஆகும்.

### 2.10.3. கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய எரிசக்தி பலகைகள் நிறுவுதல்

தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை, 2012-ன் படி, 2000 மெகா வாட் சூரிய மின்சக்தி திறன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கையானது மேற்கூரையில் சூரிய எரிசக்தி தகடுகள் அமைத்தல், சூரிய ஒளி மூலம் வெப்பநீர் தயாரித்தல் மற்றும் சூரிய ஒளி பூங்கா போன்றவற்றை உள்ளடக்கியது. நகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய ஒளி

மின் தகடுகள் பொருத்தி அதன் மூலம் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்து அன்றாட அலுவலக பயன்பாட்டிற்கு மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளவும், அடுத்த கட்டமாக சூரிய மின்சக்தியை நகராட்சி தெருவிளக்குகளுக்கும், குடிநீர் விநியோக பணிகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக 50 கிலோவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய சூரியசக்தி (போட்டோவோல்டிக்) தகடுகள் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நிறுவப்பட்டு, இதன் மூலம் தினசரி 250 கிலோவாட் மணி (KWh) மின்சக்தி அலுவலக நேரத்தில் உபயோகிக்கப்பட்டு மின் கட்டணம் கணிசமான அளவில் குறைந்துள்ளது. இதுவரை 445 நகராட்சி கட்டடங்களில் சூரிய சக்தி தகடுகள் அமைக்கப்பட்டு 2,198 கிலோ வாட் மணி (KWh) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர் முயற்சியாக கட்டட மேற்கூரையில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் தகடுகளை (போட்டோவோல்டிக்)

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கட்டடங்கள், குடிநீர் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் உரக் கிடங்குகளில் சேர்த்து அமைக்க வருங்காலத்தில் திட்டம் மேற்கொள்ளப்படும்.

அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் 53 மெகாவாட் திறனுடைய சூரிய எரிசக்தி பலகைகள் நிறுவிட சாத்தியக்கூறுகள் உள்ளன என்ற அறிக்கையின் அடிப்படையில் சூரிய ஒளி தகடுகள் மூலம் உள்ளாட்சிகளிலுள்ள 2,825 கட்டடங்களில் 11 மெகாவாட் சூரிய சக்தி திறன் உற்பத்தி செய்ய சாத்தியக் கூறு கண்டறியப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 2017-18-ம் ஆண்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 1,179 கட்டடங்களில் (திண்டுக்கல் தவிர 10 மாநகராட்சிகள்) சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்துவதன் மூலம் 4.45 மெகா வாட் சூரிய மின் சக்தி ஆற்றல் உற்பத்தி செய்வதற்கான திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மீதமுள்ள 1,646 கட்டடங்களில் 2018-19 ஆம் ஆண்டில்

பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 6.6 மெகாவாட் மின்னாற்றல் சூரிய ஒளி தகடு மூலம் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.11 மூலதன மானிய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (Capital Grant Fund and O&M Gap Filling Fund )

### 2.11.1 மூலதன மானிய நிதி (Capital Grant Fund)

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் பேரில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதிக்கு பதிலாக மூலதன மானிய நிதி உருவாக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு நிதியில் 7 % முதல் 15 % நிலை வாரியாக வழங்கப்படுகிறது. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் நிலைக்கு ஏற்றவாறு 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கான மூலதன பணிகளுக்காக வழங்கப்படுகிறது.

2018-19 ஆம் ஆண்டிற்கு மாநகராட்சிகளுக்கு ₹264.02 கோடியும், நகராட்சிகளுக்கு ₹ 191.41 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.11.2 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&M Gap Filling Fund)

இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியானது உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், பாதாள சாக்கடை திட்ட செயலாக்கம், பராமரிப்பு மற்றும் செலவிற்கும், நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணம் மற்றும் மின்கட்டணம் செலுத்தவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது, உள்ளாட்சிகளுக்குண்டான இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியானது 3 சதவிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக 4வது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ₹554.66 கோடி மதிப்பீட்டில் 502 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு,

அவற்றில் 436 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2018-19ம் ஆண்டிற்கு மாநகராட்சிகளுக்கு ₹88.01 கோடியும், நகராட்சிகளுக்கு ₹ 63.80 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.12 அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

பெரும்பாலான நகராட்சிகளில் போதுமான அலுவலக இட வசதி இல்லை. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் போதிய நிதி இன்மையால் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவது / ஏற்கனவே உள்ள வசதிகளை உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. பொது மக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு சிறந்த சூழலை உருவாக்கித்தரும் பொருட்டு கடந்த 2011-12 முதல் 2017-18 வரையில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி மற்றும் பகுதி-2 திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ்

76 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு (87 பணிகள்) ₹161.01 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 59 அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

### 2.13 துப்புரவு பணியாளர்கள் நலன்

நகர்ப்புர உள்ளாட்சிப் பணியாளர்களில் 70% துப்புரவு பணியாளர்கள் ஆவார் (43,089 பணியாளர்களில் 30,109 பணியாளர்கள் துப்புரவு பணியாளர்கள்) பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்துவது அவர்களின் முக்கிய பணியாகும்.

பாதுகாப்பான ஆரோக்கியமான பணிச்சூழலை நல்கி இவர்களின் பணிகளை கண்ணியம் மிக்கதாக மேம்படுத்திட அரசு உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி, இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி மற்றும் பகுதி-2 திட்டங்களின் நிதியிலிருந்து ₹49.61 கோடியினை கடந்த ஐந்து ஆண்டுகளில் துப்புரவு பணியாளர்களுக்கான 1,336

குடியிருப்புகளை கட்டுவதற்காக 46 நகர்ப்புர உள்ளாட்சிகளுக்கு பின்வருமாறு ஒதுக்கீடு செய்துள்ளது:

| வருடம் | உள்ளாட்சி களின் எண்ணிக்கை | எடுத்துக் கொள்ளப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011-12 | 3 | 72 |
| 2012-13 | 6 | 80 |
| 2013-14 | 11 | 336 |
| 2014-15 | 8 | 214 |
| 2015-16 | 5 | 200 |
| 2016-17 | 4 | 134 |
| 2017-18 | 9 | 300 |
| **மொத்தம்** | **46** | **1336** |

### 2.14 மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள்

#### 2.14.1 சீர்மிகு நகரங்கள் (Smart Cities)

சீர்மிகு நகரங்கள் என்னும் திட்டத்தை மத்திய அரசு 25.06.2015-ம் தேதியன்று துவக்கியது. மக்களுக்கு முக்கிய உட்கட்டமைப்பு சுத்தமான மற்றும் நிலையான சுற்றுச்சூழல் மற்றும் சீர்மிகு தீர்வுகளின் பயன்பாடு போன்றவற்றை வழங்கி உயர்தரமான வாழ்க்கை தரத்தை

உள்ளடக்கிய நகரமாக மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்ட செயலாக்க காலம் 2015 முதல் 2020 வரை ஆகும்.

சீர்மிகு நகரங்கள் திட்டம் இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது, அவை, பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) மற்றும் நகர முழுமைக்கும் திறன் வாய்ந்த தீர்வுகளை பயன்படுத்துதல் (PAN CITY) ஆகும்.

பகுதி சார்ந்த வளர்ச்சி (ABD) யின் கீழ் போதிய குடிநீர் வழங்கல், உறுதியளிக்கப்பட்ட மின்சார விநியோகம் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை உட்பட சுகாதாரம், நகர்ப்புர போக்குவரத்து ஆகியவற்றுக்கான செம்மையான ஏற்பாடு, மக்களுக்கு குறிப்பாக ஏழை மக்களின் பொருளாதார சக்திக்கு ஏற்ற குறைந்த விலையில் வீட்டுவசதி, வலுவான தகவல் தொழில் நுட்ப இணைப்பு வசதி மற்றும் டிஜிட்டல் மயமாக்கல், சிறந்த ஆளுகை குறிப்பாக மின் ஆளுகை (e-governance), நிலையான சுற்றுச்சூழல், மக்களின் குறிப்பாக பெண்கள், குழந்தைகள்

மற்றும் முதியோர்களின் பாதுகாப்பு, உடல்நலன் மற்றும் கல்வி போன்றவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

நகர முழுமைக்குமான வளர்ச்சி (Pan City Development) என்பது நகரம் முழுவதும் ஏற்கனவே அமைந்துள்ள உட்கட்டமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல் தொழில் நுட்பத் தீர்வுகளைப் பயன்படுத்தி கட்டமைப்புகளையும் சேவைகளையும் மேம்படுத்துதல் ஆகும்.

தமிழ்நாட்டில் 'நகரங்களுக்கிடையே சவால் போட்டி' அடிப்படையில் முதற்கட்டமாக சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டமாக மதுரை, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக, தூத்துக்குடி,

திருப்பூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

நான்காம் கட்டமாக ஈரோடு மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சீர்மிகு நகரங்களிலும், சிறப்பு தேவைக்கான அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. திட்டங்கள் அனுமதித்து செயல்படுத்த துவங்கப்பட்டு உள்ளது.

**2.14.2 அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (AMRUT)**

அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் மக்களுக்கு நேரடியாக சிறந்த சேவைகளை வழங்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு மத்திய அரசால் 25.06.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகையுள்ள 12 மாநகராட்சிகள்,

20 நகராட்சிகள் மற்றும் 1 பேருராட்சி இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2015-16-ஆம் ஆண்டில் 9 குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், 1 பாதாள சாக்கடை திட்டப்பணி மற்றும் 90 பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகள் 24 உள்ளாட்சிகளில் ₹2056.53 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2016-17-ஆம் ஆண்டில் கும்பகோணம் குடிநீர் மேம்பாட்டுப்பணிகள் மற்றும் கோயம்பத்தூர் 24x7 குடிநீர் மேம்பாட்டுப்பணிகள், 8 பாதாள சாக்கடை திட்டம் மற்றும் 24 உள்ளாட்சிகளில் 133 பூங்காக்கள் அமைத்தல் ஆகிய பணிகள் ₹2914.93 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

2017-20-ஆம் ஆண்டில் 3 குடிநீர் மேம்பாட்டுப்பணிகள், 4 பாதாள சாக்கடை திட்டம் மற்றும் 24 உள்ளாட்சிகளில் 135 பூங்காக்கள் அமைத்தல் ஆகிய பணிகள் ₹4472.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த

எடுத்துக்கொள்ளப்பட்டு ஆரம்ப கட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு கீழ்க்கண்டவாறு உள்ளது.

- மத்திய அரசின் பங்கு : ₹3833.56 கோடி
- மாநில அரசின் பங்கு : ₹1747.16 கோடி
- உள்ளாட்சிகளின் பங்கு : ₹3862.74 கோடி

மத்திய அரசின் பங்களிப்பில் ₹766.71 கோடி மற்றும் மாநில அரசின் பங்களிப்பில் ₹349.43 கோடி சம்மந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு விடுவிப்பதற்காக திட்ட இயக்குநரகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு தேவையான உள்ளாட்சி அமைப்பின் பங்களிப்பு, ஆசிய வளர்ச்சி வங்கி/ ஜெர்மன் வங்கி நிதி / தமிழ்நாடு நீடித்த உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் அனுமதி பெறப்பட்டு பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.14.3 தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா–தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (DAY - NULM)

தேசிய நகர்ப்புர வாழ்வாதாரம் இயக்கம் 7 குறுந்திட்டங்களை உள்ளடக்கியுள்ளதாகும். அவற்றை நகரப்புர வீடற்றோர்க்கு வீட்டு வசதி திட்டம் மற்றும் நகர்ப்புர நடைப்பாதை வியாபாரிகளுக்கான நலத்திட்டம் ஆகிய இரண்டு குறுந்திட்டங்கள் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் மூலம் இத்துறையினால் செயல்படுத்தப்படுகின்றன. நகர்ப்புர வீடற்றோர்க்கு இத்திட்டத்தின் கீழ் திட்ட அங்கீகார குழுவின் நான்கு கூட்டங்களின் மூலம் டிசம்பர் 2017 முடிய ₹68.12 கோடி திட்ட நிதியில் 184 உறைவிட அலகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி எண் 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட 35 அலகுகள் (20 சாதரண உறைவிடமும், குறுகிய கால உறைவிடமாக மாவட்ட மற்றும் வட்டார தலைமையிட மருத்துவமனைகளில் 15 சிறப்பு உறைவிடமும்) அடங்கும். இதுவரை 137 அலகுகள்

பணிநிறைவு பெற்று எஞ்சியுள்ள 47 உறைவிடங்களின் பணிகள் பல்வேறு முன்னேற்றமடைந்துள்ளன.

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நகர்ப்புர நடைபாதை வியாபாரிகளுக்கான நலத்திட்டத்தின் கீழ் 1,16,431 நடைபாதை வியாபாரிகள் கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்டு 80,667 நடைபாதை வியாபாரிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் நகர விற்பனைக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், 528 பேரூராட்சிகளில் 34 பேரூராட்சிகளில் நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டு எஞ்சியுள்ள பேரூராட்சிகளில் 2018-19 ஆம் ஆண்டில் நகர விற்பனைக் குழு அமைக்கப்படும்.

### 2.14.4 தூய்மை இந்தியா இயக்கம்

இந்திய நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகம் 02.10.2014 அன்று தூய்மை இந்தியா இயக்கத்தினை ஐந்து ஆண்டு காலத்திற்கு கீழ்க்கண்ட நோக்கங்களை செயல்படுத்தும் விதமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

- திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே ஒழித்தல்,
- மனித கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையினை ஒழித்தல்,
- நவீன மற்றும் அறிவியல் சார்ந்த திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளுதல்,
- ஆரோக்கியமான சுகாதார பழக்கங்களை உருவாக்குதல்,
- சுகாதாரம், மனித ஆரோக்கியம் தொடர்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல்,
- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் திறன் மேம்படுத்துதல் மற்றும் மூலதனச் செலவில் தனியார் துறை பங்களிப்பு ஈர்த்திடும் விதத்தில் நடவடிக்கை எடுத்தல்.

இத்திட்டத்தை தனிநபர் கழிப்பிடங்கள் அமைத்தல், சமுதாய கழிப்பிடங்கள் அமைத்தல், திடக்கழிவு

மேலாண்மை செயலாக்கம், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், திறன் மேம்படுத்துதல் போன்ற கூறுகளுடன் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த அரசு நிர்வாகம் அனுமதியளித்தது. இத்திட்டத்தினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் பணிகளைக் கண்காணிக்கவும் மாநில அளவிலான உயர்மட்ட குழு ஒன்று நகராட்சி நிர்வாக முதன்மை செயலர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

**2.14.4.1 தனிநபர் கழிப்பிடம்**

| ஆண்டு | இலக்கு | முடிக்கப்பட்டவை | கட்டப்பட்டு வருபவை |
|---|---|---|---|
| 2015-16 | 98,048 | 98,048 | 0 |
| 2016-17 | 1,02,569 | 79,705 | 22,864 |
| மொத்தம் | 2,00,617 | 1,77,753 | 22,864 |

தனிநபர் கழிப்பறை கட்டுவதற்கான மொத்த இலக்கு அக்டோபர் 2018-க்குள் முடிக்கப்படும்.

### 2.14.4.2 சமுதாயக் கழிப்பிடங்கள்

| ஆண்டு | கழிப்பறை எண்ணிக்கை | இருக்கைகள் | முடிக்கப் பட்டவை | கட்டப்பட்டு வருபவை |
|---|---|---|---|---|
| 2014-15 | 293 | 2,167 | 2,167 | 0 |
| 2015-16 | 415 | 3,961 | 3898 | 63 |
| 2016-17 | 136 | 1,287 | 826 | 461 |
| 2017-18 | 23 | 338 | 22 | 316 |
| **மொத்தம்** | **867** | **7,753** | **6,913** | **8400** |

### 2.14.4.3 திடக்கழிவு மேலாண்மை

தமிழக அரசினால் உருவாக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி ஆகியவற்றை கொண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சிகளில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை ₹612.05 கோடி மதிப்பீட்டில் 129 உள்ளாட்சிகளில் 1253 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 842 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

### 2.14.4.4 தகவல், கல்வி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் (IEC)

மக்கள் மத்தியில் சுத்தம், சுகாதாரம், தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் 3,046 பரப்புரையாளர்களை நியமித்து நடவடிக்கை எடுத்திட ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ₹154.20 கோடி செலவினத்தில் 2016-17 முதல் 2018-19 வரை 3 ஆண்டுகளுக்கு தகவல், கல்வி, எண்ண பரிமாற்றம் செய்து மக்களிடையே பழக்க வழக்கத்தில் மாறுதல் ஏற்படுத்தி திறந்தவெளியில் மலம் கழித்திடும் பழக்கத்தினை மாற்றிடவும், தினசரி இருப்பிடங்களில் உருவாகும் திடக்கழிவுகளை உயிரிகழிவு மற்றும் மறு சுழற்சிக்குட்படுத்தக் கூடிய கழிவுகளாக பிரித்தாளும் பழக்கத்தை உருவாக்கிடவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. இதற்காக 2016-17ம் ஆண்டிற்காக ₹27.69 கோடி ஒதுக்கப்பட்டு 11 மாநகராட்சிகளுக்கு மற்றும் 124 நகராட்சிகளில் 1264 பரப்புரையாளர்கள் 215 மேற்பார்வையாளர்கள், 11 ஒருங்கிணைப்பாளர்களை

நியமித்து, நகராட்சிகளில் கணக்கெடுப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பணிகள் மாநகராட்சிகளில் மே 2018ல் முடிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைக்கான தகவல், கல்வி விழிப்புணர்வு செயல்பாடுகள் எடுத்துக் கொள்ளப்படும்.

### 2.14.5. புராதன நகர மேம்பாடு மற்றும் புனரமைப்புத்திட்டம் (Heritage City Development & Augmentation Yojana—(HRIDAY)

இந்தியாவில் உள்ள புராதன நகரங்களின் முழுமையான வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக புராதன நகர மேம்பாடு மற்றும் புனரமைப்புத்திட்டம் மத்திய அரசின் நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகத்தால் துவக்கப்பட்டுள்ளது. புரதான நகரங்களின் கலாச்சாரம், கலை நயம் மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றை பாதுகாப்பதுடன், அவற்றின் தனித்தன்மை மாறாமல் மேலும் அழகுப்படுத்துவது பாதுக்காப்பான வாழ்வதற்கு ஏற்ற நீட்டித்த நிலைத்தன்மையுடன் மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்படி இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசு, தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதி முழுவதும் மத்திய அரசே வழங்கும். மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்தும் காலம் நான்கு வருடங்கள் (ஜனவரி, 2015 முதல் நவம்பர், 2018 வரை) ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்றாகும். எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களை தலைவராக கொண்ட 10 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனை மற்றும் கண்காணிப்புக்குழு (City Level Advisory Monitoring Committee) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதி மற்றும் பணியின் நிலை பின்வருமாறு:

| வ. எண் | பணி விவரம் | வேலையின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை ₹ இலட்சத்தில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் | 6 | 989.72 | 70 சதவீதப் பணிகள் முடிவுற்று உள்ளன. |
| 2. | அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் | 6 | 763.86 | 65 சதவீதப் பணிகள் முடிவுற்று உள்ளன. |
| 3. | அருள்மிகு காமாட்சி அம்மன் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் தெருக்களை மேம்படுத்துதல் | 7 | 246.00 | பணி துவங்கப் பட்டுள்ளது. |
| **மொத்தம்** | | **19** | **1999.58** | |

## 2.15 வெளிநாட்டு நிறுவன உதவித்திட்டங்கள்

தமிழக அரசு வெளிநாட்டு நிதியுதவியுடன் பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

### 2.15.1 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) நிதியுதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டம் (TNUIP)

9 உள்ளாட்சி அமைப்புகளில் 9 குடிநீர் மேம்பாட்டு பணிகள் இத்திட்டத்தின் நிதி உதவியுடன் ₹663.68 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 4 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 2.15.2 ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டம் (SMIF)

23 உள்ளாட்சி அமைப்புகளில் சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், பாதாளச் சாக்கடை திட்டம், நீர் நிலைகள் மேம்பாடு, விளையாட்டு திடல் மற்றும் பூங்காக்கள் மேம்பாடு போன்ற

30 பணிகள் ₹2931.27 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 11 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 19 பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன.

**2.15.3 தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP)**

உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டமானது (TNSUDP) ₹3831.00 கோடி செலவில் தற்போது செயலாக்கத்தில் உள்ளது.

இந்தத் திட்டம் நகர் ஆளுமை கூறு, நகர்ப்பகுதிக்கான தொழில்நுட்ப உதவி கூறு மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டு கூறு ஆகிய 3 துணைத் திட்டங்களைக் கொண்டதாகும்.

இத்திட்டத்தில் நகர்ப்புர ஆளுமை (மாதிரி நகரம்) கூறு மற்றும் நகர்பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக்கூறு (Urban Sector Technical Assistance Component) ஆகிய

இரண்டு துணைத் திட்டங்கள் நகராட்சி நிர்வாக ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலீட்டுக் கூறு என்ற துணைத் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.15.3.1 நகர்ப்புர ஆளுமை (மாதிரி நகரம்) கூறு**

ஈரோடு மாநகராட்சி, வேலூர் மாநகராட்சி மற்றும் ஓசூர் நகராட்சி ஆகியவை நகர்ப்புர ஆளுமை (மாதிரி நகரம்) கூற்றின் கீழ் மாதிரி நகரங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் மற்றும் கட்டமைப்புத் திறன்
- வளர்ச்சித் திட்டங்கள்
- நீடித்த நிலைத்த நிதி மற்றும்
- மின் ஆளுமை மற்றும் பொது தகவல் அமைப்பு

ஆகிய நான்கு இனங்களில் நகர் மேலாண்மையினை மேம்படுத்துவதற்கு நகர்ப்புர ஆளுமை கூற்றின் கீழ் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நகர் மேலாண்மை இனங்களில் மேற்கொள்ளப்படும் திருப்திகரமான செயல்பாடுகளின் அடிப்படையில் இந்நகரங்களுக்கு மான்யம் வழங்கப்படும். 2016-17 முதல் 2021-22 வரையிலான ஆண்டுகளில் நகர் மேலாண்மையில் எய்தப்படும் சாதனைகளின் அடிப்படையில் மான்யம் வழங்குவதற்காக ஈரோடு மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு தலா ₹ 153.24 கோடியும் ஓசூர் நகராட்சிக்கு ₹76.62 கோடியும் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014-15 மற்றும் 2015-16ஆம் ஆண்டுகளில் நகர் மேலாண்மையில் எய்தப்பட்ட சாதனைகளுக்காக 2016-17ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் வேலூர்

மாநகராட்சிகளுக்கு தலா ₹25.54 கோடியும், ஓசூர் நகராட்சிக்கு ₹12.77 கோடியும் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. நகர் மேலாண்மையில் இந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சாதனைகளின் அடிப்படையில் 2017-18 முதல் 2021-2022 வரையிலான ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் இதே அளவிலான மான்யம் வழங்கப்படும்.

### 2.15.3.2 நகர்ப்பகுதிக்கான தொழில் நுட்ப உதவிக்கூறு

இக்கூறின் கீழ், கீழ்க்கண்ட நான்கு துணைக்கூறுகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

| வ. எண் | துணைக்கூறு | மொத்த நிதி | உலக வங்கி நிதி |
|---|---|---|---|
| | | (₹ கோடியில்) | |
| 1. | நகராட்சி மின் ஆளுமை / பொது நிதி மேலாண்மை மற்றும் புவியியல் தகவல் அமைப்பு | 137.28 | 73.43 |

| | | | |
|---|---|---|---|
| 2. | திறன் மற்றும் நிறுவன மேம்பாடு | 44.69 | 38.31 |
| 3. | திட்ட தயாரிப்பு நிதி | 12.77 | 0.00 |
| 4. | திட்ட மேலாண்மை மற்றும் திட்ட செயல்பாட்டு செலவு | 22.35 | 22.35 |
| | மொத்தம் | 217.09 | 134.08 |

#### 2.15.3.3 நகர்ப்புரங்களில் மின் ஆளுமை

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணிகளை மின் ஆளுமை மூலம் கையாள்வதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நகர்ப்புரங்களில் வாழும் மக்களுக்கு விரைவாகவும் தரமாகவும் சேவைகளை செய்வதற்கு 29 எண்ணிக்கையிலான நகராட்சி மின் ஆளுமை சேவைகள் (e-governance modules) கண்டறியப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மையப்படுத்தப்பட்ட மின்னணு ஆளுமை முறை என்ற பெரிய திட்டம் ₹18.31 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்து

கொள்ளப்பட்டது. 2016-2017ஆம் ஆண்டில் 12 மின் ஆளுமை சேவைகள் 11 மாநகராட்சிகளிலும் 124 நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த மின் ஆளுமை சேவைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு நகராட்சி மற்றும் மாநகராட்சியில் பணிபுரியும் 12091 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பயன்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள 135 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் மீதமுள்ள 17 மின் ஆளுமை சேவைகளையும் நடைமுறைப்படுத்தும் பணிகள் விரைவில் முடிக்கப்படவுள்ளன.

### 2.15.3.4 திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாடு

"திறன் மேம்பாடு மற்றும் நிறுவன மேம்பாடு" துணைக்கூற்றின் கீழ் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்ட திறன் மேம்பாடு பயிற்சிகள் 2018-2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளன.

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள நகரமைப்பு பிரிவில் பணியாற்றும் 220 அலுவலர்கள் மற்றும் 100 பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும் 3 நாட்கள் பயிற்சி கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் ₹20.58 இலட்சம் செலவில் வழங்கப்பட உள்ளது.

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள பொது சுகாதார பிரிவில் பணியாற்றும் சுகாதார ஆய்வாளர்கள், சுகாதார அலுவலர்கள், நகர் நல அலுவலர்கள், மாநகர நல அலுவலர்கள் 526 நபர்களுக்கு 2 நாட்கள் கோயம்புத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் குறித்து ₹ 25.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

- உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்து நிலைகளிலும் பணியாற்றும் 15331 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 29 எண்ணிக்கையிலான நகராட்சி மின்

ஆளுமை சேவைகளை (e-governance modules) நடைமுறைப்படுத்துவதற்கான 3 நாட்கள் புத்தாக்க பயிற்சிகள் 5 பயிற்சி மையங்களில் ₹ 381.00 லட்சம் செலவில் வழங்கப்பட உள்ளன.

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணியாற்றும் 30,251 சுகாதார பணியாளர்கள் மற்றும் 9085 சுகாதார மேற்பார்வை யாளர்களுக்கு திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மை, தனிப்பட்ட மற்றும் சமுதாய சுகாதாரம் குறித்து 2 நாட்களுக்கான பயிற்சி ₹498.00 லட்சம் செலவில் நடத்தப்பட உள்ளன.

- மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் 170 பொறியாளர்களுக்கு திரவ அழுத்த சக்தியின் மூலம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுவதற்கான திட்ட மாதிரிகளை வடிவமைத்தல் குறித்தும், குடிநீர் விநியோக மேலாண்மை, கட்டணமில்லா குடிநீர் விநியோகக் குறைப்பு, நீர்க்கசிவு பரிசோதனைகள், கண்காணிப்பு கட்டுப்பாடு மற்றும் தகவல் கையக அமைப்பு பற்றியும்

சென்னையில் 5 நாட்கள் வகுப்பறை மற்றும் செய்முறைப் பயிற்சியும், பிலிப்பைன்ஸ் மனிலா நகரில் இத்திட்டங்களின் செயலாக்கம் குறித்து 4 நாள் களப்பயிற்சியும் ₹492.00 லட்சம் செலவில் நடத்தப்பட உள்ளது.

## 2.16 தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் (Tamil Nadu Institute of Urban Studies - TNIUS)

கோயம்புத்தூரில் அமைந்துள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட செயல்படுவதற்கான ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்திற்காக 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதன் நோக்கங்கள்:

- நகராட்சி நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளில் நவீன மேலாண்மை நுட்பங்களை பயன்படுத்துவதன் அவசியத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புர வளர்ச்சி குறித்த பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வெளியீடுகள் மூலமாக அறிவாற்றலை வளர்த்தல்.

- நகர்ப்புர மேம்பாடு, நகராட்சி நிர்வாகம் மற்றும் அவை சார்ந்த பிரிவுகளில், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகள் (Consultancy Services) மேற்கொள்ளுதல்.
- நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் அதற்கான உதவிகளை செய்தல்.

இப்பயிற்சி நிறுவனத்தால் 2017-18ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பயிற்சி திட்டங்களின் விவரங்கள் கீழ்க்காணுமாறு :

| வ. எண். | பயிற்சி | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் இளநிலை உதவியாளர்களுக்கான விரிவான பயிற்சிகள் (Comprehensive Training) | 62 |
| 2. | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் நகரமைப்பு அலுவலர் / நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோருக்கான புத்தாக்க பயிற்சி (Refresher Training) | 90 |

| வ. எண். | பயிற்சி | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 3. | மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான ஓய்வு காலத்திற்கான திட்டமிடல் மூன்று நாள் சிறப்புப் பயிற்சி | 411 |
| 4. | மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக் கான மையப்படுத்தப்பட்ட இணையதள மென்பொருள் தொகுப்பு குறித்த இரண்டு நாள் சிறப்பு பயிற்சி (Centralised Web based Software training) | 1012 |
| 5, | மாநகராட்சி மற்றும் நகராட்சி துப்புரவு அலுவலர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு நோய்த் தடுப்பு தொடர்பான மூன்று நாள் கூர் நோக்கு பயிற்சி. | 275 |
| 6. | புதியதாக பணிக்கு அமர்த்தப்பட்ட கர்நாடக மாநிலத்தை சார்ந்த உதவி நகர திட்ட அலுவலர்களுக்கு இரண்டு நாள் களப்பயிற்சி. | 102 |

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் வழங்கும் ஆண்டு பங்களிப்புத் தொகை இந்த பயிற்சி நிறுவனத்தின் முக்கிய நிதியாதாரம் ஆகும்.

இந்நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சிகளின் பணியாளர்களுக்கு பயிற்சிகளை அளிப்பதில் முன்னோடியாக திகழ்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான புத்தறிவுப் பயிற்சிகள் (OTP), நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கான விரிவான பயிற்சிகள் (Comprehensive Training) மற்றும் புத்தாக்க பயிற்சிகள் (Refresher Training) இந்நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், எர்த் மற்றும் அஸ் (Earth and Us) மற்றும் பாண்டிச்சேரி ஆரோவில் நிறுவனமும் இணைந்து 'பூஜ்யக் கழிவு பேரூராட்சிகள்' என்ற திட்டத்தின் கீழ் 6 தலைப்புகளில் பயிற்சிக் கையேடுகள் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு கையேடும்

25000 பிரதிகள் அச்சடிப்பதற்கு தற்போது அனுமதி பெறப்பட்டுள்ளது. இக்கையேடுகளைப் பயன்படுத்தி பேரூராட்சிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள 10 மண்டல பயிற்சி மையங்களில் பணிபுரியும் பேரூராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர்களுக்கு மார்ச் 2018லிருந்து தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்த நிறுவனம் நகர்ப்புர ஆளுகை தொடர்பான கூட்டு முயற்சிகளுக்கென, மாநில மற்றும் தேசிய அளவிலான கீழ்காணும் புகழ்பெற்ற பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது :

- இந்திய பொறியியல் பணியாளர் கல்லூரி (ESCI), ஹைதராபாத்.
- இந்தியன் இன்ஸ்ட்டிடியூட் ஆப் ஹுயுமன் செட்டில்மென்ட் (IIHS), பெங்களூரு.
- தமிழ்நாடு ஐசிடி அகடமி (ICT Academy), சென்னை.
- குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி, கோயமுத்தூர்.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் அம்ருத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு நடப்பாண்டில் சுமார் 3909 துப்புரவு பணியாளர்களுக்கு இரண்டு கட்டமாக திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், மண்டல மையங்களை வாடகை கட்டடம் அல்லது பிற அரசு பயிற்சி நிறுவனக் கட்டடங்களில் துவங்குவதற்காகவும் அரசு தனது அரசாணை எண். 84 நிதி (நிதி குழு-4) துறை, நாள் 31 மார்ச் 2017-ல் சிறப்பு மானியமாக ₹25 கோடி அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், மண்டல பயிற்சி நிறுவனங்களை தொடங்கவும் முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

## 2.17 நிதி குழு

### 2.17.1. 5வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரை மற்றும் மானிய ஒதுக்கீடு

73வது மற்றும் 74வது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் படி மற்றும் அரசமைப்புச் சட்டப்பிரிவு 243 I மற்றும் 243 Y மற்றும் அதனைத்தொடர்ந்து வந்த மாநிலச் சட்டங்களின் அடிப்படையில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு மாநிலமும் மாநில நிதி ஆணையத்தை அமைக்கவேண்டும். மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகளுடன் நிதி ஆதாரங்களை உரியவாறு பங்கிட்டுக்கொள்வது குறித்து பரிந்துரைப்பதற்கென மாநில நிதி ஆணையம் தோற்றுவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் 1.12.2014 அன்று தமிழ்நாடு அரசால் ஐந்தாவது மாநில நிதி ஆணையம் தோற்றுவிக்கப்பட்டு, ஆணையம் அதன் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை 27.12.2016 அன்று மாண்புமிகு தமிழக ஆளுநரிடமும் மாண்புமிகு முதலமைச்சரிடமும் அளித்தது. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் அறிக்கை

சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த முடிவுகள் அரசாணை எண். 84, நிதித்துறை (FC IV) நாள். 31.03.2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைக் காலம் ஐந்து ஆண்டுகள் (2017-18 முதல் 2021-22 வரை) ஆகும். அதாவது 2017 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 31.3.2022 வரையிலான ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள் மீது அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அரசால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பின்வருமாறு நிதிப் பகிர்மானங்கள் வழங்கப்படும். கீழ்க்காணும் பரிந்துரைகளின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப்பகிர்மானங்கள் வழங்கப்படுகிறது.

மாநில அரசின் மொத்த நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி நிதிப் பகிர்மானமாக (Vertical) 10 விழுக்காடு அளவு அளிக்கப்படுகிறது.

ஊரக மற்றும் நகர்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான வரிகளை கிடை

(Horizontal) நிலையாக 56:44 என்ற விகிதத்தில் நிதிப்பகிர்வு செய்ய ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தில் பரிந்துரை செய்யப்பட்டு இப்பரிந்துரை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் அடுக்குகளுக்கிடையே (Vertical) நிதி பகிர்மானத்திற்கும் ஒவ்வொரு அடுக்கின் உள்ளே நிதி பகிர்மானத்திற்கும் (Horizontal) கீழ்காணும் நிதி பகிர்மான கணக்கீட்டினை கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காரணி | நிறை மதிப்பீடு |
|---|---|---|
| 1. | 2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி மக்கள் தொகை | 65 % |
| 2. | பரப்பளவு | 15 % |
| 3. | தனிநபர் நுகர்வு செலவின இடைவெளி | 10 % |
| 4. | குடிசை வாழ் மக்கள் தொகை / விகிதம் | 10 % |
| மொத்தம் | | 100 % |

ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2017-2018 ஆம் ஆண்டில் மாநகராட்சிகள்

மற்றும் நகராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்ட மான்யத் தொகை மற்றும் 2018-2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

*(₹.கோடியில்)*

| வருடம் | 12 மாநகராட்சிகள் | மூலதன மானியத் தொகை | இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | மொத்தம் | நகராட்சிகள் | மூலதன மானியத் தொகை | இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை | மொத்தம் | பெரு மொத்தம் (5+9) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 2017-18 | 1215.82 | 227.96 | 75.99 | 1519.77 | 881.47 | 165.28 | 55.09 | 1101.84 | 2621.61 |
| 2018-19 | 1487.13 | 264.02 | 88.01 | 1839.16 | 1082.12 | 191.41 | 63.80 | 1337.33 | 3176.49 |

### 2.17.2. 14-வது மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் மான்ய ஒதுக்கீடு

14 வது மத்திய நிதிக்குழு தனது அறிக்கையினை மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களுக்கு சமர்பித்தது

14வது நிதிக்குழுவின் பரிந்துரையினை மத்திய அரசு ஏற்று அதனை மாநில அரசுகளுக்கு அனுப்பியுள்ளது. 14 வது நிதிக்குழுவின் கால அளவு 2015-16 முதல் 2019-2020 வரை ஆகும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை மான்யம் மற்றும் செயல்திறன் மான்யம் வழங்குவதற்கான 14வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் மான்யம் ஒதுக்கீடு விவரம் பின்வருமாறு:

- மாநிலங்களுக்கான மான்யம் 2011-ம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 90% மற்றும் பரப்பளவின் அடிப்படையில் 10% பகிர்ந்தளிக்கப்படவேண்டும். மேலும் மேற்படி மான்யம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் நகர மற்றும் ஊரக மக்கள் தொகையின் அடிப்படையில் கிராமங்களுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கு இரண்டாக பிரித்து அளிக்கப்படவேண்டும்.

- அடிப்படை மான்யம் மற்றும் செயல்திறன் மான்யம் என இரண்டு வகை மான்யம் உருவாக்கப்பட்டு கிராம பஞ்சாயத்துகளுக்கும் மற்றும் நகராட்சிகளுக்கும் வழங்கப்படவேண்டும். அவற்றில் கிராம பஞ்சாயத்துகளுக்கு 90% அடிப்படை மான்யமாகவும், 10% செயல்திறன் மான்யமாகவும் இருக்கவேண்டும். நகராட்சிகளை பொருத்தமட்டில் இவை 80:20 என்ற அடிப்படையில் இருக்கவேண்டும்.

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடிப்படை மான்யம் இரண்டாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அடுக்கிற்கும் அதாவது மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகர பஞ்சாயத்துகளுக்கு மாநில நிதிக்குழு ஆணையம் அளித்துள்ள விதிகள் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

மேலும் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகர பஞ்சாயத்துகளுக்கு ஆண்டு வாரியாக

பரிந்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் பின்வருமாறு: (2015-16 முதல் 2019-2020 வரை)

(₹. கோடியில்)

| ஆண்டு | அடிப்படை மான்யம் | செயல்திறன் மான்யம் | மொத்தம் |
|---|---|---|---|
| 2015 - 2016 | 790.04 | - | 790.04 |
| 2016 - 2017 | 1093.95 | 322.87 | 1416.82 |
| 2017 - 2018 | 1263.96 | 365.37 | 1629.33 |
| 2018 - 2019 | 1462.18 | 414.92 | 1877.10 |
| 2019 - 2020 | 1975.71 | 543.31 | 2519.02 |
| மொத்தம் | 6585.85 | 1646.46 | 8232.31 |

## 2.18 மாநகராட்சிகள்

### 2.18.1 மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியானது 01.05.1971 அன்று நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 15,61,129. 100 வார்டுகளைக் கொண்டுள்ள

இம்மாநகராட்சியின் பரப்பளவு 147.99 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு வருமானம் ₹412.32 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 104 லிட்டர் வீதம் சராசரி 2 நாட்களுக்கு ஒரு முறை என வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

- மதுரை நகரம் சீர்மிகு நகரங்களுக்கான சவால் போட்டியில் இரண்டாம் சுற்றில் சீர்மிகு நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. மீனாட்சி அம்மன் கோயில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 15 வார்டுகள் பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்து கொள்ளப்பட்டுள்ளன.

- மதுரை சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கானஅமைப்பு) உருவாக்கப்பட்டுள்ளது. ₹1000.00 கோடியில் 16 பணிகள் அனுமதிக்கப்பட்டு உள்ளன.

- இதுவரை ₹217.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன (விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், ஒப்பந்தபுள்ளி கோருதல் போன்றவை).

**அம்ருத் ( AMURT)**

**குடிநீர் வழங்கல்**

- முல்லை பெரியார் அணையினை நீராதாரமாக கொண்டு குடிநீர் மேம்பாட்டு பணி ₹1200.00 கோடி மதிப்பீட்டில் அம்ருத் 2017-2020 -ன் கீழ் 125 MLD என்ற அளவில் குடிநீர் அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

**பூங்காக்கள்**

- அம்ருத் 2015-2016 - 2017-2020-ன் கீழ் 16 பூங்காக்களை மேம்பாடு செய்யும் பணி ₹8.09 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக்

கொள்ளப்பட்டு, இதுவரை 5 பூங்காக்கள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தூய்மை இந்தியா திட்டம்**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை அறவே நீக்கும் பொருட்டு 6,183 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹4.95 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு இதுவரை 5250 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் 31.06.2018-க்குள் முடிவடையும். தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு இடவசதி இல்லாத பயனாளிகளின் கழிவறைத் தேவையினை பூர்த்தி செய்யும் விதமாக 56 பொது கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் ₹3.67 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 42 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் ஜுன் 2018-க்குள் முடிவடையும்.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சாரக் கூறின் படி, 50 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை

குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹ 3.88 கோடி திட்ட மதிப்பீட்டில் 15 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் 14 உறைவிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 602 வீடற்றோர்க்கு உறைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள ஒரு குறுகிய கால தங்கும் விடுதி கட்டட பணி அரசு இராஜாஜி மருத்துமனையில் முடிவுறும் தருவாயில் உள்ளது.

**திடக்கழிவு மேலாண்மைத்திட்டம்**

மதுரை நகரில் நாள் ஒன்றுக்கு 720 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வருகின்றது.

மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 28 வார்டுப் பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகளை சேகரிப்பு செய்ய 28 எண்ணங்கள் நுண் உரக் கூடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் 50 டன் கொள்ளளவிலான உருளை உயிரி எரிவாயுக் கூடம் (Bottling Plant) உருவாக்கப்படவுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP)**

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 2017-18 ஆம் ஆண்டில் 46.76 கி.மீ நீளத்திற்கு, பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டங்களினால் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

**துப்புரவு பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்**

மதுரை மாநகராட்சியில் 2000க்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதன் அடிப்படையில் மதுரை மாநகராட்சி, அவனியாபுரம்

எம்.எம்.சி. காலனி பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் 11156 சதுர அடி பரப்பளவில் ₹5.00 கோடி மதிப்பீட்டில் 54 குடியிருப்புகள் கட்டப்பட உள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்பட்டு உரிய காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள ₹5.15 கோடியில் பழைய ஆழ்துளைக் கிணறுகளை சரி செய்தல், ஆழ்துளைக் கிணறுகளின் அடைப்புகளை சரி செய்தல், பழுதடைந்துள்ள மின் மோட்டார்களை சரி செய்தல், குடிநீர் விநியோக லாரிகளை வாடகை அடிப்படையில் நியமித்தல், குடிநீர் பிளாஸ்டிக் தொட்டிகள் வாங்குதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

### 2.18.2 கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 01.05.1981 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 16,01,438 ஆகும். 100 வார்டுகளைக் கொண்டுள்ள மாநகராட்சியின் பரப்பளவு 265.36 சதுர கிலோ மீட்டராகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹662.71 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 146 லிட்டர் வீதம் சராசரி 5 நாட்களுக்கு ஒரு முறை என வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

கோயம்புத்தூர் மாநகராட்சி சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் முதல் சுற்றில் சீர்மிகு நகரமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. 14 வார்டுகளில் உள்ள 8 ஏரிகள் (வாலாங்குளம், பெரியகுளம், செல்வசிந்தாமணி, கிருஷ்ணம்பதி, நரசம்பதி, செல்வம்பதி, குமாரசாமி, சிங்காநல்லூர்) மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பகுதிசார்ந்த வளர்ச்சிக்கான பகுதிகளாகும்.

கோயம்புத்தூர் சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது ₹1127.72 கோடியில் 23 பணிகள் முன்மொழியப்பட்டுள்ளன.

இதுவரை ₹ 386.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. ₹43.07 கோடியில் 6 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்திலுள்ளன.

**<u>அம்ருத் (AMRUT)</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டு பணி ₹395.41 கோடியில் அம்ருத் 2015-2016ன் கீழ் அனுமதிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மாநகராட்சியின் பழைய மாநகராட்சிப்பகுதியில் ₹556.56 கோடியில் 24x7 குடிநீர் திட்டம் செயல்படுத்த அம்ருத் 2016-17ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தின் ஆய்வு பணிகள் ஒப்பந்ததாரரால் துவங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் ₹442.00 கோடியில் அம்ரூத் 2016-2017 ன் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்த புள்ளி நிலையில் உள்ளது.

அம்ரூத் 2017-20ன்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியின் விடுபட்ட பகுதிகளில் குடிநீர் வழங்குதலை மேம்படுத்த பில்லூர் அணையினை நீராதாரமாகக் கொண்டு ₹740.15 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அம்ரூத் 2015-2016 – 2017-20 கீழ் 21 பூங்காக்கள் மேம்படுத்தும் பணி ₹14.49 கோடி மதிப்பீட்டில் 3 கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு 11 பூங்காக்கள் முடிவுற்று பிற பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜெர்மன் வங்கி (Kfw)**

கோவை மாநகராட்சியுடன் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ள கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளுக்கு ₹108.16 கோடி மதிப்பீட்டில் ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் குடிநீர் அபிவிருத்தி திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை அறவே நீக்கும் பொருட்டு 6,056 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹4.84 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 4862 எண்ணம் முடிக்கப்பட்டு மீதமுள்ள இலக்கானது 31.06.2018-க்குள் முடிவடையும்.

தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கு இடவசதி இல்லாத பயனாளிகள் கழிவறைகளை உபயோகிக்கும் விதமாக 39 எண்ணம் பொது கழிப்பிடம் ₹4.44 கோடி மதிப்பீட்டில்

எடுக்கப்பட்டு 34 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 50 பரப்புரையாளர்கள், 5 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்புப் பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

இவ்வித முயற்சிகளின் வாயிலாக திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக கோயம்பத்தூர் மாநகராட்சி மத்திய நகர்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை எளிதாக்கும் வகையில் அறிவியல்

பூர்வமான செயலாக்க திட்டத்தினை ஏற்படுத்தும் நோக்கில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ₹10.36 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு கரிம கழிவுகளை சேகரிக்க தேவையான முதல் மற்றும் இரண்டாம் நிலை வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. கழிவுகள் சேகரிக்கும் மையங்கள் எற்படுத்துவதற்கான பணிகளும் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹1.96 கோடி திட்ட மதிப்பீட்டில் 5 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் 4 உறைவிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு உறைவிடத்தின் கட்டிட பணி ஜீன் 2018-ல் முடிக்கப்படும்.

**தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP)**

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 2017-18 ம் ஆண்டில் 69.42 கி.மீ நீளத்திற்கு,

பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டங்களினால் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.18.3 திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 01.06.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 9,16,857 ஆகும். 65 வார்டுகள் கொண்டுள்ள மாநகராட்சியின் பரப்பளவு 167.23 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹344.35 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 135 லிட்டர் வீதம் தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியின் 3 வது சுற்றில் திருச்சிராப்பள்ளி நகரம் சீர்மிகு நகரமாக மேம்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. மலைக்கோட்டை மற்றும் அதனைச்

சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய 19 வார்டுகள் பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹1193.08 கோடி மதிப்பீட்டில் 18 பணிகள் முன்மொழியப்பட்டுள்ளன. திட்ட அனுமதி மற்றும் செயல்பாடு துவங்கியுள்ளது.

**அம்ரூத் (AMRUT)**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் இணைக்கப்பட்ட மற்றும் பாதாள சாக்கடை விடுபட்ட பகுதிகளுக்கு இரண்டாம் கட்டமாக அம்ரூத் 2016-2017 ன் கீழ் ₹344.00 கோடி மதிப்பீட்டிலும், மூன்றாம் கட்டமாக அம்ரூத் 2017-20ன் கீழ் ₹312.14 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

அம்ரூத் 2015-2016 – 2017-2020ன் கீழ் 12 பூங்கா மேம்பாட்டுப் பணிகள் ₹8.64 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு 3 பூங்கா பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜெர்மன் வங்கி (Kfw)**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ள வார்டு எண்கள் 61-65க்கு ₹63.70 கோடி மதிப்பீட்டில் ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 135 லிட்டராக உயரும்.

**வறட்சி நிவாரணப் பணிகள்**

2017-2018 ஆம் ஆண்டுக்கான வறட்சி நிவாரண நிதியில் 4 பணிகள் ₹50 இலட்சம் ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழிக்கும் விதமாக இத்திட்டத்தின் கீழ் ₹3.24 கோடி மதிப்பீட்டில் 4048 தனிநபர் கழிப்பறை கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

கழிப்பறை கட்ட இடமில்லா வீடுகளின் கழிவறைத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக ₹4.06 கோடி மதிப்பீட்டில் 32 பொதுக் கழிப்பிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு 30 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 32 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டன. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால்

மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 29 இடங்களில் நுண் உரக்கிடங்குகள் மூலம் மக்கும் கழிவுகளை செயல்படுத்தும் விதமாக ₹26.83 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 23 இடங்களில் நுண் உரக்கூடங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலையிலுள்ளது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மத்திய நகர்ப்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் 2017 - 2018 ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹2.45 கோடி திட்ட மதிப்பீட்டில் 5 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் 3 உறைவிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள இரண்டு உறைவிடத்தின் கட்டிட பணி ஜீன் 2018-ல் முடிக்கப்படும்.

**நவீன ஆட்டிறைச்சி கூடம் கட்டும் பணி**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட காந்தி சந்தை மற்றும் பஞ்சப்பூர் ஆகிய 2 இடங்களில் நவீன ஆட்டிறைச்சி கூடம் கட்டும் பணிக்கு மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சத்தால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கீழ்கண்ட பணிகளில் வ.எண் 1ல் உள்ள பணி முடிக்கப்பட்டும், வ.எண் 2 ல் உள்ள பணி நடைபெற்றும் வருகிறது.

(₹. **கோடியில்**)

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.14க்குட்பட்ட காந்தி சந்தையில் நவீன ஆட்டிறைச்சி கூடம் கட்டும் பணி | 3.57 |
| 2 | வார்டு எண். 39க்குட்பட்ட பஞ்சப்பூர் பகுதியில் நவீன ஆட்டிறைச்சி கூடம் கட்டும் பணி | 6.92 |

**நவீன மீன் சந்தை கட்டும் பணி (Modern Fish Market)**

ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன் வளர்ச்சி வாரிய, நிறுவனத்தின் மானியம் ₹ 1.00 கோடி மற்றும் மாநகராட்சி பொது நிதி ₹2.32 கோடி ஆக மொத்தம் ₹3.32 கோடி மதிப்பீட்டில் K.அபிஷேகபுரம் மண்டலம், காசிவிளங்கி பகுதியில் நவீன மீன் சந்தை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ் நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP)**

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 2017-18 ஆண்டில் 11.35 கி.மீ நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டங்களினால் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2.18.4 சேலம் மாநகராட்சி**

சேலம் மாநகராட்சி 01.06.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு

கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,34,792 ஆகும். 60 வார்டுகள் கொண்டுள்ள மாநகராட்சியின் பரப்பளவு 91.34 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் 168.31 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 140 லிட்டர் வீதம் சராசரி 2 – 3 நாட்களுக்கு ஒரு முறை என வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் இரண்டாவது சுற்றில் சேலம் நகரம் சீர்மிகு நகரமாக மேம்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. 11 வார்டுகள் கொண்ட நகரின் மையப்பகுதி பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

சேலம் சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹1418.00 கோடியில் 22 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை ₹217.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. திட்ட அனுமதி மற்றும் செயல்பாடு துவங்கியுள்ளது.

**அம்ரூத் ( AMRUT)**

அம்ரூத் 2015-2020 ன் கீழ் ₹8.29 கோடியில் 17 பூங்காக்கள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப் பட்டதில் 4 பூங்காக்கள் முடிவடைந்து மீதமுள்ள 13 பூங்கா பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழிக்கும் நோக்கத்துடன் இத்திட்டத்தின் கீழ் 3905 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹3.12 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 3299 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் 526 இருக்கைகள் கொண்ட 46 பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் ₹7.62 கோடி மதிப்பீட்டில்

எடுக்கப்பட்டு 31 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகின்றன.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக சேலம் மாநகராட்சி மத்திய நகர்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 14 இடங்களில் நுண் உரக்கூடங்கள் மூலம் மக்கும்

கழிவுகளை செயல்படுத்தும் விதமாக ₹12.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹2.05 கோடி திட்ட மதிப்பீட்டில் 6 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. 6 உறைவிடங்களிலும் கட்டட பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

**தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP)**

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 2017-18 ஆண்டில் 27.086 கி.மீ நீளத்திற்கு சாலைகள் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசின் சிறப்பு நிதியின் கீழ் 157.24 கி.மீ நீளத்திற்கு சாலைகள் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.18.5 திருநெல்வேலி மாநகராட்சி

திருநெல்வேலி மாநகராட்சி, 01.06.1994 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,74,838 ஆகும். 55 வார்டுகள் கொண்ட மாநாகராட்சியின் பரப்பளவு 108.65 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹238.60 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 101 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை என வழங்கப்பட்டு வருகிறது.

#### சீர்மிகு நகரத் திட்டம்

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் மூன்றாவது சுற்றில் திருநெல்வேலி நகரம் சீர்மிகு நகரமாக மேம்பாடு செய்ய தெரிவு செய்யப்பட்டுள்ளது. நெல்லையப்பர் கோயில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹986.18 கோடியில் 30 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பணிகளின் செயலாக்கத்திற்கான திட்டமிடல் நடைபெற்று வருகிறது.

**அம்ரூத் ( AMRUT)**

திருநெல்வேலி மாநகராட்சியின் இணைக்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் 2016-2017 ன் கீழ் இரண்டாம் கட்டமாக ₹289.01 கோடி மதிப்பீட்டிலும், மூன்றாம் கட்டமாக ₹ 440.19 கோடி மதிப்பீட்டிலும் ஆசியா வளர்ச்சி வங்கி உதவியுடனும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்த புள்ளி நிலையில் உள்ளது.

அம்ரூத் 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2020 ஆம் ஆண்டு வரையிலான அம்ரூத் திட்டத்தின் கீழ் 14 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹8.04 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 9

பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜெர்மன் வங்கி (Kfw)**

ஜெர்மன் வங்கி நிதி உதவியுடன் 45 பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் ₹29.765 கோடி மதிப்பீட்டில் எடுத்துகொள்ளப்பட்டுள்ளன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 3926 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹3.14 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 3051 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் 153 இருக்கைகள் கொண்ட 19 பொதுக்கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் ₹1.55 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 28 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சராம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக திருநெல்வேலி மாநகராட்சி மத்திய நகர்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் 2017 - 2018 ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ₹12.36 கோடி மதிப்பீட்டில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனங்கள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் 37 இடங்களில் நுண் உரக்கூடங்கள் மூலம் மக்கும்

கழிவுகளை செயல்படுத்தும் விதமாக ₹6.63 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையிலுள்ளன.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹0.80 கோடி திட்ட மதிப்பீட்டில் 3 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. அனைத்து பணிகளும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

**சாலைகள்**

2017-18 ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 20.35 கி.மீ நீளத்திற்கு சாலை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**2.18.6 ஈரோடு மாநகராட்சி**

ஈரோடு மாநகராட்சி 01.01.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 4,98,121 ஆகும். 60 வார்டுகள் கொண்ட மாநகராட்சியின் பரப்பளவு 109.52 சதுர

கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹213.35 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 112 லிட்டர் வீதம் 2-3 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகரத் திட்டம்**

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியின் நான்காவது சுற்றில் ஈரோடு மாநகரம் சீர்மிகு நகரமாக மேம்பாடு செய்ய தெரிவு செய்யப்பட்டுள்ளது. நகரின் மையப்பகுதியில் உள்ள 16 வார்டுகள் பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஈரோடு சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டது. ₹934.94 கோடியில் 17 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பணிகளின் செயலாக்கத்திற்கான திட்டமிடல் நடைபெற்று வருகிறது.

**அம்ரூத் ( AMRUT)**

அம்ரூத் 2015-2016 ன் கீழ் ₹484.45 கோடியில் தனி குடிநீர் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

அம்ரூத் 2015-2016 முதல் 2017-2020 -ன் கீழ் 20 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹8.47 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 4 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 3554 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹2.84 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 3115 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

115 இருக்கைகளுடன், 11 பொதுக் கழிப்பிடங்கள், ₹2.10 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக ஈரோடு மாநகராட்சி மத்திய நகர்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் 2017 - 2018 ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ₹12.77 கோடி மதிப்பீட்டில் முதல் நிலை சேகரிப்பு மற்றும் திடக்கழிவுகளை செயலாக்கம் செய்ய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 12 பணிகள் எடுக்கப்பட்டு 5

பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹0.80 கோடி திட்ட மதிப்பீட்டில் 3 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் 2 கட்டட பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு பணி நடைபெற்று வருகிறது.

**சாலைகள்**

2017-18 ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் 5.45 கி.மீ நீளத்திற்கு சாலை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதி**

இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் ₹1.90 கோடி மதிப்பீட்டில் 4 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் திட்டத்தின் கீழ் ₹3.00 கோடி மதிப்பீட்டில் துப்புரவு பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டுதல் மற்றும் ₹0.75 கோடி மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடம் கட்டுதல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன.

**ஜெர்மன் மேம்பாட்டு வங்கி**

ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் பாதாள சாக்கடை திட்டம் ₹209.22 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**மத்திய நிதிக்குழு**

14வது மத்திய மற்றும் மாநில நிதிக்குழு ஆணைய மானியத்தின் கீழ் ₹8.01 கோடி மதிப்பீட்டில் 8.82 கி.மீ நீளசாலைகள் சீரமைக்க 15 பணிகள் எடுக்கப்பட்டு 4 பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலையில் செயலாக்கத்தில் உள்ளன. மாநில சமன்பாட்டு வளர்ச்சி நிதியின் கீழ் இரண்டு பணிகள் எடுத்துக்

கொள்ளப்பட்டு ஒரு பணி முடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பணி முன்னேற்றிலுள்ளது.

### 2.18.7 திருப்பூர் மாநகராட்சி

திருப்பூர் மாநகராட்சி, 01.01.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,77,778 ஆகும். 60 வார்டுகள் கொண்ட மாநகராட்சியின் பரப்பளவு 159.35 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹201.01 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 144 லிட்டர் வீதம் சராசரியாக 4-5 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.

### சீர்மிகு நகர திட்டம்

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் மூன்றாவது சுற்றில் திருப்பூர் நகரம் சீர்மிகு நகரமாக மேம்பாடு செய்ய தெரிவு செய்யப்பட்டுள்ளது. நொய்யல் ஆற்றினை ஒட்டியுள்ள 15 வார்டுகள் பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

திருப்பூர் சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹1003.98 கோடியில் 19 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. பணிகளின் செயலாக்கத்திற்கான திட்டமிடல் நடைபெற்று வருகிறது.

**அம்ரூத் ( AMRUT)**

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் மேம்பாட்டு பணி அம்ரூத் 2015-16ன் கீழ் ₹250.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அம்ரூத் 2015-2016ம் - 2017-2020 ன் கீழ் 18 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹10.91 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 3 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 4428 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹3.54 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 4353

பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுக் கழிப்பிடம் 44 எண்ணம் 384 இருக்கைகளுடன் ₹6.36 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 33 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக ஈரோடு மாநகராட்சி மத்திய நகர்ப்புர வீட்டு வசதி

அமைச்சகத்தால் 2017 – 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ₹19.46 கோடி மதிப்பீட்டில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனங்கள், மறுசுழற்சி பொருள் சேகரிப்பு மையம் மற்றும் கட்டுமான (ம) இடிப்பு கழிவு, செயலாக்க கூடம் அமைத்தல் போன்ற பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதில் 20 பணிகள் எடுக்கப்பட்டு 12 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**தேசிய நகர்ப்பு வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹1.52 கோடி திட்ட மதிப்பீட்டில் 5 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இவற்றில் 4 கட்டட பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு பணி முடியும் தருவாயில் உள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம்**

2017-18 ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டங்கள் மற்றும் குடிநீர்த் திட்டங்களால் பழுதடைந்த 37 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு 2 சாலை பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**நகர்ப்புர மற்றும் ஊரமைப்பு துறை நிதி (உட்கட்டமைப்பு வசதிகள் நிதி)**

15-வது மாநில உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு குழு 17.08.2017 ஆம் நாள் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் ₹13.70 கோடி மதிப்பீட்டில் 3 பாலங்கள் கட்டும் பணிக்கும், 20 முக்கிய சாலைகளைஅகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 2.18.8 வேலூர் மாநகராட்சி

வேலூர் மாநகராட்சி 01.08.2008 அன்று மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது 60 வார்டுகளை உள்ளடக்கியதாகவும் 87.915 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும் 2011-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 504079 மக்கள் தொகை கொண்டதாகவும் உள்ளது. சராசரி ஆண்டு வருமானம் ₹80.42 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 115 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் இரண்டாவது சுற்றில் வேலூர் நகரம் சீர்மிகு நகரமாக மேம்பாடு செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது. வேலூர் கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் (12 வார்டுகள்) பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வேலூர் சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹983.44 கோடியில் 21 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை ₹217.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. பணிகளின் செயலாக்கத்திற்கான திட்டமிடல் நடைபெற்று வருகிறது.

**அம்ரூத் (AMRUT)**

குடிநீர் மேம்பாட்டு பணிகள் அம்ரூத் 2015-16ன் கீழ் ₹240.92 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வேலூர் மாநகராட்சியின் இணைக்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் 2016-2017-ன் கீழ் இரண்டாம் கட்டமாக ₹343.69 கோடி மதிப்பீட்டிலும், மூன்றாம் கட்டமாக ₹293.77 கோடி மதிப்பீட்டிலும் ஆசியா வளர்ச்சி வங்கி உதவியுடனும் பாதாள சாக்கடைத் திட்டம்

செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டு ஒப்பந்த புள்ளி நிலையில் உள்ளது.

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2020 ஆம் ஆண்டு வரையிலான அம்ருத் திட்டத்தின் கீழ் 12 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹6.90 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 4 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறன்றன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 7250 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹5.80 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 5550 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் 230 இருக்கைகளுடன் 23 பொதுக்கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் ₹4.37 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிவுற்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக வேலூர் மாநகராட்சி மத்திய நகர்ப்புர வீட்டு வசதி அமைச்சகத்தால் 2017 – 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 42 இடங்களில் நுண் உரக்கிடங்கள் மூலம் மக்கும் கழிவுகளை உரமாக்கும் விதமாக ₹ 18.40 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு

அனைத்து நுண் உரக்கூடங்கள் மையங்களும் பயன்பாட்டில் உள்ளன.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹0.83 கோடி திட்ட மதிப்பீட்டில் 2 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் ஒரு கட்டட பணி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**2.18.9 தூத்துக்குடி மாநகராட்சி**

தூத்துக்குடி மாநகராட்சி, 05.08.2008 அன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 3,72,408 ஆகும். 60 வார்டுகள் கொண்ட மாநகராட்சியின் பரப்பளவு 90.66 சதுர கிலோ மீட்டர் மற்றும் ஆண்டு சராசரி வருமானம் ₹97.00 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 123 லிட்டர் வீதம் சராசரி 3 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

சீர்மிகு நகரங்களுக்கான சவாலான போட்டியில் மூன்றாவது சுற்றில் தூத்துக்குடி நகரம் சீர்மிகு நகரமாக மேம்பாடு செய்ய தெரிவு செய்யப்பட்டுள்ளது. பக்கிள் ஓடையை ஒட்டியுள்ள 15 வார்டுகள் பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தூத்துக்குடி சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹ 743.60 கோடியில் 21 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

பணிகளின் செயலாக்கத்திற்கான திட்டமிடல் நடைபெற்று வருகிறது.

**அம்ரூத் ( AMRUT)**

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2020 ஆம் ஆண்டு வரையிலான அம்ரூத் திட்டத்தின் கீழ் 9 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹6.72 கோடி மதிப்பீட்டில் மூன்று

கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 5 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 2961 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹2.37 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 1828 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

பொதுக் கழிப்பிடம் 21 எண்ணம் 118 இருக்கைகளுடன் ₹2.16 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 14 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 30 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் பொது மக்களிடையே ஏற்படுத்தப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு

பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக தூத்துக்குடி மாநகராட்சி மத்திய நகர்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் 2017-201 8 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 16 இடங்களில் நுண் உரக்கூடங்கள் மூலம் மக்கும் கழிவுகளை செயல்படுத்தும் விதமாக ₹20.08 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 3 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்திலுள்ளன.

**சாலைகள்**

தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் அபிவிருத்தி திட்டப்பணிகள் 2017-18 ஆண்டில் 19.40 கி.மீ நீளம் சாலைகள் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**2.18.10 தஞ்சாவூர் மாநகராட்சி**

தஞ்சாவூர் நகராட்சி 19.02.2014 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 128.02 சதுர கிலோ மீட்டர் மற்றும் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள்தொகை 3,51,655 ஆகும். 51 வார்டுகள் கொண்ட மாநகராட்சியின் ஆண்டு சராசரி வருவாய் ₹ 115.67 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 124 லிட்டர் வீதம் சராசரி தினமும் வழங்கப்பட்டு வருகிறது.

**சீர்மிகு நகர திட்டம்**

சீர்மிகு நகரங்களுக்கான போட்டியில் இரண்டாவது சுற்றில் தஞ்சாவூர் நகரம் சீர்மிகு நகரமாக மேம்பாடு செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது. பெரிய கோவில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் (11 வார்டுகள்) பகுதி சார்ந்த வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் சீர்மிகு நகர நிறுவனம் (சிறப்பு தேவைக்கான அமைப்பு) நிறுவப்பட்டுள்ளது. ₹955.01

கோடியில் 19 பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதுவரை ₹217.00 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

**அம்ரூத் ( AMRUT)**

குடிநீர் மேம்பாட்டு பணிகள் அம்ரூத் 2015-16ன் கீழ் ₹48.14 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2020 ஆம் ஆண்டு வரையிலான அம்ரூர் திட்டத்தின் கீழ் 13 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹7.87 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 3 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 1862 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹1.49 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 1446 எண்ணம் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுக் கழிப்பிடம் 63 எண்ணம் 224 இருக்கைகளுடன் ₹4.97 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 58 எண்ணங்கள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 26 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக தஞ்சாவூர் மாநகராட்சி மத்திய நகர்ப்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் 2017 - 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ₹11.85 கோடி மதிப்பீட்டில் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனங்கள் வாங்க மற்றும் திடக்கழிவு செயலாக்க பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ₹1.38 கோடி திட்ட மதிப்பீட்டில் 2 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் ஒரு கட்டட பணி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு பணி மே 2018-ல் முடிவடையும் .

## உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் இடைவெளி நிதி

உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2017-18ம் ஆண்டு ₹6.50 கோடி நிதி அலுவலகம் கட்டும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2017-18ம் ஆண்டு ₹1.00 கோடி மதிப்பீட்டில் மாரிகுளம் பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை கட்டுதல் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2.18.11 திண்டுக்கல் மாநகராட்சி**

திண்டுக்கல் மாநகராட்சி 19.2.2014 அன்று முதல் மாநகராட்சியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 2,07,225 ஆகும். 48 வார்டுகள் கொண்ட மாநகராட்சியின் பரப்பளவு 14.01 சதுர கிலோ மீட்டர் ஆகவும், ஆண்டு சராசரி வருமானம் ₹44.74 கோடியாகவும் உள்ளது. தனிநபர் குடிநீர் விநியோகம் நாள் ஒன்றுக்கு 80 லிட்டர் வீதம் சராசரி 5 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.

**அம்ரூத் ( AMRUT)**

2015-2016 ஆம் ஆண்டு முதல் 2017-2020 ஆம் ஆண்டு வரையிலான அம்ரூத் திட்டத்தின் கீழ் 16 பூங்கா மேம்பாட்டு பணிகள் ₹7.51 கோடி மதிப்பீட்டில் மூன்று கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் 1 பணி முடிவுற்று மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளது.

**தூய்மை இந்தியா திட்டம் (SBM)**

இத்திட்டத்தின் கீழ் 3265 தனிநபர் கழிப்பறை கட்டும் இலக்கு ₹2.61 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 2806 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுக் கழிப்பிடம் 12 எண்ணம் 170 இருக்கைகளுடன் ₹1.88 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 6 பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

தகவல் மற்றும் தொடர்பு விழிப்புணர்வு பிரச்சார கூறின் படி, 24 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 இணை ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான முதற்கட்ட கணக்கெடுப்பு பணி பரப்புரையாளர்களால் மேற்கொள்ளப்பட்டு விடுபட்டுள்ள கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகரமாக திண்டுக்கல் மாநகராட்சி மத்திய நகர்புர வீட்டுவசதி அமைச்சகத்தால் 2017 – 2018 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ₹8.35 கோடி மதிப்பீட்டில் 12 இடங்களில் நுண் உரக்கூடங்கள் மூலம் மக்கும் கழிவுகளை செயல்படுத்தும் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்**

வீடற்றோர்க்கு உறைவிடம் என்ற கூறின் கீழ் ரூ.0.80 கோடி திட்ட மதிப்பீட்டில் 2 உறைவிடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. இதில் ஒரு கட்டட பணி முடிக்கப்பட்டு எஞ்சியுள்ள ஒரு பணி முடியும் தருவாயில் உள்ளது

**தமிழ் நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டப்பணிகள்**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்டப்பணிகள் 2017-18 ஆண்டில் 20.80 கி.மீ நீளத்திற்கு, பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் திட்டங்களினால் பழுதடைந்த சாலைகளை சீரமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி**

இந்நகருக்கு தினசரி குடிநீர் வழங்கும் வகையில¦ குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற

வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் ₹70.50 கோடி மதிப்பீட்டில் தொடரப்பட்டு 98 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி**

உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ₹20.00 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் காமராஜர் சாகர் அணையில் நீர் தேக்க கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் நீர்த்தேக்கம் கட்டும் பணி மற்றும் தூர்வாரும் பணி நடைபெற்று வருகின்றது. இப்பணியில் 98 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

**மத்திய நிதிக் குழு**

14 வது மத்திய நிதிக்குழு பரிந்துரையின் கீழ் 2017-18 ஆம் நிதியாண்டிற்கு ₹3.00 கோடி நிதி சாலை பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.19 மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நகர்ப்புர உள்ளாட்சி விருது

சிறப்பான முறையில் செயலாற்றும் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு விருது வழங்க, 2012-13 -ஆம் ஆண்டில்

"மாண்புமிகு முதலமைச்சர் விருது" உருவாக்கப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டிற்கு திருநெல்வேலி மாநகராட்சி சிறந்த மாநகராட்சியாகவும் (பரிசு தொகை ₹ 25 இலட்சம்) மற்றும் நகராட்சிகளில், சத்தியமங்களம், பூந்தமல்லி மற்றும் திருமங்களம் நகராட்சிகள் முறையே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது சிறந்த நகராட்சிகளாகவும் (பரிசு தொகை முறையே ₹15 இலட்சம், ₹10 இலட்சம் மற்றும் ₹5 இலட்சம்) தேர்வு செய்யப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2017ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, மேற்படி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பரிசு தொகை மற்றும் பாராட்டு பத்திரங்களை வழங்கினார்.

## 3. பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ம் நாள் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, நாட்டின் மிகப் பழமையான நகராட்சி அமைப்பாகவும், உலகின் இரண்டாவது பழமையான நகராட்சி அமைப்பாகவும் உள்ளது. இந்த நகரம் வரலாற்று மற்றும் நவீன சமகால இந்திய கலாச்சாரத்தை சித்தரிக்கிறது. சென்னை நகரமானது தமிழ்நாட்டில் பெரிய மற்றும் முக்கிய மாநகரமாகும்.

330 வருட வரலாறு கொண்ட சென்னை மாநகராட்சி, தொன்மை வாய்ந்த மற்றும் நவீன உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டத்தின் மூலம் சென்னை மாநகராட்சி அதன் சட்டப்பூர்வமான அதிகாரங்களைப் பெறுகிறது. 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 67.27 இலட்சம் ஆகும்.

சென்னை மாநகராட்சியுடன், 2011 ஆம் ஆண்டு 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டதன் மூலம் மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரில் இருந்து 426 சதுர கிலோ மீட்டராக அதிகரித்து, நாட்டின் நான்காவது மிகப் பெரிய மாநகராட்சியாக திகழ்கிறது. மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.01.2016 அன்று முதல் சென்னை மாநகராட்சி "பெருநகர சென்னை மாநகராட்சி" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சென்னை மாநகராட்சியில் ஏற்கெனவே இருந்த 10 மண்டலங்கள் 7 மண்டலங்களாக மறுசீரமைக்கப்பட்டு, தற்போது இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகள் 8 புதிய மண்டலங்களாக வரையறுக்கப்பட்டு, மண்டலங்களின் மொத்த எண்ணிக்கை 10ல் இருந்து தற்போது 15-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்னர் இருந்த 155 வார்டுகள், 107 வார்டுகளாக மறுசீரமைக்கப்பட்டதுடன், புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புப்

பகுதிகள் 93 வார்டுகளாக வரையறுக்கப்பட்டு தற்போது மொத்தம் 200 வார்டுகளாக உருவாக்கப்பட்டுள்ளது. இம்மண்டலங்கள், நிர்வாக வசதிக்காக 3 வட்டாரங்களாக அதாவது, வடக்கு, மத்திய, தெற்கு வட்டாரம் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரமும் 5 மண்டலங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டு உள்ளது. இவ்வட்டாரங்கள் துணை / இணை ஆணையர் நிலையில், உள்ள அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

தமிழக அரசு, மாநகராட்சி விரிவாக்கத்திற்குப் பின்னர் கூடுதல் பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக, மனிதவள ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் கூடுதலாக 784 பணியிடங்களை உருவாக்கி அனுமதியளித்துள்ளது. இந்த நடவடிக்கை, முடிவுகளை துரிதமாக மேற்கொள்ளவும், பொதுமக்களின் குறைகளைக் களையவும் ஏதுவாக அமைந்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 12,14,823 ஆகவும்,

தொழில்வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1,21,439 ஆகவும் உள்ளது.

2017-18 ஆம் ஆண்டில் சொத்து வரி மூலம் ₹720.72 கோடி மற்றும் தொழில் வரியாக ₹339.78 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 2016-17 ஆம் ஆண்டின் மூலதன செலவினங்கள் ₹2033.76 கோடி ஆகும். மேலும், 2017-18 ஆம் ஆண்டின் மூலதன செலவினங்கள் ₹ 1616.00 கோடி ஆகும்.

### 3.1 அம்மா உணவகம்

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளிய மக்கள், தினக்கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள் போன்றவர்கள், சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் உணவு வழங்குவதற்காக, அம்மா

உணவகங்கள் துவக்க உத்தரவிட்டார்கள். இதன் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 400 அம்மா உணவகங்களும், சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும், மொத்தம் 407 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. அம்மா உணவகங்களில் காலையில் இட்லி மற்றும் பொங்கல், மதியத்தில் சாம்பார் சாதம், கறிவேப்பிலை சாதம், எலுமிச்சை சாதம் மற்றும் தயிர் சாதம் ஆகியவையும் மாலையில் சப்பாத்தி பருப்பு கடைசலும் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல் ஐந்து ரூபாய்க்கும், பலவகை சாதங்கள் (சாம்பார் சாதம், கறிவேப்பிலை சாதம், எலுமிச்சை சாதம்) ஐந்து ரூபாய்க்கும், தயிர் சாதம் மூன்று ரூபாய்க்கும் மற்றும் மாலை நேரத்தில் இரண்டு சப்பாத்தி பருப்பு கடைசலுடன் மூன்று ரூபாய்க்கும் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதுவரை, அம்மா உணவகங்களில் 51.65 கோடி இட்லிகளும், 18.28 கோடி பலவகை சாதங்களும், 23.26 கோடி சப்பாத்திகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு நாளும் சுமார் 3.5 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர். சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வரும் இத்திட்டத்தினை முன்மாதிரியாகக் கொண்டு அண்டை மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் இது போன்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

**3.2 அம்மா குடிநீர்**

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 13.02.2016 அன்று சென்னை பெருநகரில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தாங்களும் பருக வேண்டும் என்ற ஏழை எளிய மக்களின் விருப்பத்திற்கிணங்க

"அம்மா குடிநீர் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 50 இடங்களில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் ₹5.30 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மணிக்கு 2,000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு ஒரு நிலையத்தின் மூலம் 8000 லிட்டர் வழங்கப்பட்டு மே 2018 வரை மொத்தம் 10.68 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

### 3.3 தேசிய நகர்ப்புர சுகாதாரத்திட்டம்

தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தின் வழிகாட்டுதல்களின் படி பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் எனவும் 5,00,000 மக்கள் தொகைக்கு ஒரு மாநகர சமுதாய சுகாதார மையம் எனவும், செயல் படுத்தப்பட வேண்டும். இதன்படி சென்னை மாநகராட்சிக்கு 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களும், 15 நகர்ப்புர சமுதாய சுகாதார மையங்களும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, தற்சமயம் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களும், 14 மாநகர சமுதாய சுகாதார மையங்களும் வெற்றிகரமாக பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஒரு மாநகர சமுதாய சுகாதார மையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தேசிய நகர்ப்புர சுகாதார திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதற்காக சென்னை மாநகர சுகாதார திட்டம்

தொடங்கப்பட்டுள்ளது. 2013 – 2014 முதல் 2018-2019 முடிய தேசிய நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தின் பல்வேறு சேவைகளைச் செயல்படுத்துவதற்கு ₹273.62 கோடி சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

34 நகர்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், 8 நகர்ப்புர சமுதாய மாநகர சமூக சுகாதார மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், 100 ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களை புதுப்பிப்பதற்கும் 2013-2014 முதல் 2017-2018 முடிய ₹107.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மே 2018 முடிய ₹11.34 கோடி செலவில் 17 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகக் கட்டப்பட்டுள்ளன. மேலும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 8 மாநகர சமூக சுகாதார மையங்களிலும் கட்டடப்பணிகள் நடைப்பெற்று வருகின்றன. மே 2018 முடிய ₹13.43 கோடி செலவில் 85 மாநகர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது மக்களின் பல்வேறு வகைப்பட்ட நோய்களை முன்னதாகக் கண்டறிந்து மருத்துவ சிகிச்சை அளிக்க 2017-18ஆம் ஆண்டில் 19 சுகாதார மையங்களில் பல்நோக்கு மருத்துவமனைகள் (Poly Clinics) புதிதாகத் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவமனைகள் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை செயல்படுகின்றன. இந்த மருத்துவ மனைகளில் பொது மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவம், குழந்தை நலம், எலும்பு சார்ந்த நோய் சிகிச்சை மற்றும் இயன்முறை சிகிச்சை, பல் மருத்துவம் மற்றும் கண் மருத்துவம் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

### 3.4 ஆயுஷ் மருத்துவமனைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 4, 10 மற்றும் 13ல் 3 ஆயுஷ் மருத்துவமனைகள் (ஆயுர்வேதா, யோகா / இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) ஆரம்பிக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு

வருகின்றன. இங்கு ஐந்து வகையான இந்திய மாற்று மருத்துவ சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றன. இதற்கென ஐந்து இந்திய மருத்துவர்களைக் கொண்டு ஐந்து வகையான இந்திய மருத்துவ சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவமனைகளில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 200 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. 4,10,000 புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று பலன் அடைந்துள்ளனர்.

### 3.5 நகர்ப்புர வீடற்றோருக்கான காப்பகங்கள்

சென்னை மாநகராட்சியில் தற்சமயம் 36 வீடற்றோருக்கான காப்பகங்களும் மற்றும் மருத்துவமனைகளில் நோயாளிகளுடன் வருபவர்கள் தங்குவதற்கான 10 சிறப்பு காப்பகங்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு நடத்தப்பட்டு வருகின்றன.

### 3.5.1 சிறப்பு காப்பகங்கள் (மருத்துவமனை)

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் அறிவித்தபடி பின்வரும் அரசு மருத்துவமனைகளில் உள் நோயாளிகளுடன் வருபவர்கள் தங்குவதற்காக 10 சிறப்பு காப்பகங்கள் கீழ்கண்டவாறு மாநகராட்சியால் துவக்கப்பட்டன.

- ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை — 01
- கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை — 02
- அரசு தாய்சேய் நல மருத்துவமனை — 02
- அரசு குழந்தைகள் நல மருத்துவமனை — 01
- ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனை — 02
- ஸ்டான்லி அரசு மருத்துவமனை — 02

மேலும், கஸ்தூரிபாய் காந்தி அரசு பொதுமருத்துவமனையில் 2 காப்பகங்கள் மற்றும் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 1காப்பகமும் ஆக 3

சிறப்பு காப்பகங்கள் கட்ட திட்டமிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.5.2 இதர காப்பகங்களின் வகைகள்

மேற்குறிப்பிட்ட சிறப்பு காப்பகங்கள் தவிர, சமுதாயத்தில் கீழ்த்தட்டில் உள்ள மக்களுக்கான காப்பகங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகின்றன.

| வ. எண். | காப்பகத்தின் வகை | மொத்தம் |
|---|---|---|
| 1 | சிறுமியர்கள் | 4 |
| 2 | சிறுவர்கள் | 5 |
| 3 | அறிவு திறன் குறைவுள்ள (MR) சிறுவர்கள் | 1 |
| 4 | பெண்கள் | 8 |
| 5 | ஆண்கள் | 11 |
| 6 | ஆண்கள் மற்றும் பெண்கள் | 1 |
| 7 | முதியோர்கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) | 2 |
| 8 | மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் | 1 |
| 9 | மனநலம் பாதிக்கப்பட்ட ஆண்கள் | 2 |
| 10 | மாற்றுத்திறனாளி பெண்கள் | 1 |
| | **மொத்தம்** | **36** |

இந்த காப்பகங்களின் மூலம் பயனடைந்த மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 6,439 ஆகும். மேலும் தற்போது 1,733 பயனாளிகள் தங்கி பயனடைந்து வருகிறார்கள்.

**3.6. பொது சுகாதார தடுப்பு நடவடிக்கைகள்**

**3.6.1 தெரு நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல்**

பெருநகர சென்னை மாநகராட்சி தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த 3 இனக்கட்டுப்பாட்டு மையங்களை நடத்தி வருகிறது.

சென்னை மாநகராட்சி கால்நடைப்பிரிவின் மூலம் பொதுமக்களின் புகார்களின் அடிப்படையிலும், சுயமாகவும் தெரு நாய்களின் தொல்லை அதிகமாக உள்ள பகுதிகளில் உள்ள தெரு நாய்கள் பிடித்து வரப்பட்டு, விலங்குகள் இன கட்டுப்பாட்டு விதிகளின்படி நாய் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டும், வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டும், அடையாளக் குறியிடப்பட்டும், அவைகள் பிடிக்கப்பட்ட இடங்களிலேயே மீண்டும் விடப்படுகின்றன.

2017-18ம் நிதி ஆண்டு மற்றும் ஏப்ரல் 2018 வரை 14,206 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 16 நாய் பிடிக்கும் வாகனங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், தனியார் நாய் பிடிப்போர் தெரு நாய்களை பிடிப்பதற்கும், இனகட்டுபாட்டு அறுவை சிகிச்சைக்கு பிறகு திரும்ப கொண்டு போய் விடுவதற்குமான பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒரு முறை சிறப்பு திட்டமாக ஆகஸ்ட் 2016-ல் 60,826 தெருநாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

### 3.6.2 பூச்சி தடுப்பு நடவடிக்கைகள்

கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்கு முதிர்கொசு மற்றும் கொசுப்புழு தடுப்பு நடவடிக்கைகளான கொசுப்புழுக் கொல்லி தெளித்தல் மற்றும் புகைபரப்புதல் போன்ற பணிகளை சென்னை மாநகராட்சி செவ்வனே மேற்கொண்டு வருகின்றது.

வாகனத்தில் எடுத்துச்செல்லும் புகை பரப்பும் இயந்திரங்கள் 39-ம், கையினால் எடுத்துச்செல்லும் புகை பரப்பும் இயந்திரங்கள் 246-ம், சிறிய புகை பரப்பும் இயந்திரங்கள் 25-ம் புகை பரப்பும் பணியில் உபயோகப்படுத்தப்பட்டு முதிர் கொசுக்கள் கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனுடன் 445 கைத்தெளிப்பான்கள் மற்றும் 15 அதிவேக திறன் கொண்ட கைத்தெளிப்பான்களை கொண்டு மழைநீர் வடிகால்வாய்களிலும் திறந்தவெளி கால்வாய்களிலும் கொசுப்புழு மருந்துகள் தெளிக்கப்பட்டு கொசுபுழுக்கள் கட்டுப்படுத்தப் படுகின்றன. இதனுடன் கொசுப்புழுக்களை உண்ணும் கம்புஃசியா என்னும் மீன்கள் நீர்நிலைகளில் விடப்பட்டு கொசுப்புழுக்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், நீரிலும் நிலத்திலும் இயங்கும் உயர் தொழில்நுட்பம் கொண்ட வாகனம் (Amphibian vehicle) ஒன்று பின்லாந்து நாட்டிலிருந்து ₹4.44 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் கேப்டன் காட்டன் கால்வாய் ஆகியவைகளில் தூர்வாரவும்,

ஆகாயத்தாமரை அகற்றும் பணி மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது. கேப்டன் காட்டன் கால்வாயிலிருந்து இதுவரையில் 89,270 சதுர மீட்டர் பரப்பளவிற்கு ஆகாயத்தாமரைகளும் தோராயமாக 24,732 கன மீட்டர் வண்டல் / உபரி மண் அகற்றப்பட்டுள்ளது. இதேபோல, பக்கிங்காம் கால்வாயிலிருந்து இதுவரையில் 1,44,000 சதுர மீட்டர் பரப்பளவிற்கு ஆகாயத்தாமரைகளும் தோராயமாக 29,250 கன மீட்டர் வண்டல் / உபரி மண் அகற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நீர்நிலைகள் ஆழப்படுத்தப்பட்டு, இந்த கால்வாய்களில் சீரான நீரோட்டம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சென்னை மாநகரில், குறிப்பாக ஆர்.கே. நகர், தண்டையார்பேட்டை, கொருக்குப்பேட்டை, வியாசர்பாடி, இராயபுரம், மயிலாப்பூர் மற்றும் பிற பகுதிகளில் கொசுவின் தாக்கம் குறைந்துள்ளது. குறைந்த அகலம் கொண்ட சிறிய கால்வாய்களில் வண்டல்களை அகற்ற 3 எண்ணிக்கை ரோபாட்டிக் மண் தோண்டும் இயந்திரங்கள் (Robatic

Excavator Machines) சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்து ₹19.64 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து 30 சிறிய கால்வாய்களிலும் இந்த ரோபாட்டிக் மண்தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி முறையான கால இடைவெளியில் வண்டல்களையும் ஆகாயத்தாமரைகளையும் உபரிமண்ணையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2016-17ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரில் ஓடும் கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், ஆகாயத்தாமரை மற்றும் மிதக்கும் பொருட்களை அகற்றவும் 11 ஃபைபர் படகுகள் ₹3.19 லட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டன. சென்னை மாநகரில் உள்ள கால்வாய்களில் உள்ள ஆகாயத்தாமரை செடிகள் மற்றும் தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு, நீரோட்டம் சீராக்கப்பட்டதின் மூலம் கொசு வளரும் மூலங்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன.

### 3.7 பொதுசுகாதாரத் துறையின் இதர சேவைகள்

#### 3.7.1 இறைச்சிக்கூடங்கள்

பொது மக்களுக்கு சுகாதாரமான இறைச்சியை அளிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் 4 இறைச்சிக்கூடங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு ஆடுகள் / மாடுகள் கால்நடை உதவி மருத்துவர்களால் மருத்துவ பரிசோதனை செய்த பிறகு, வெட்டப்பட்டு இறைச்சி ஆய்வுசெய்யப்பட்டு, விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்த இறைச்சி கூடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதல்களின்படி நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

#### 3.7.2 பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள்

சென்னை மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் பிறப்பு இறப்பு பதிவாளர்களால் (சுகாதார

ஆய்வாளர்கள்) அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளும் சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் பொது மக்கள் முற்றிலும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு வருகிறது. பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களை இணைய தளம் மூலமாக வழங்கும் திட்டம் தொடங்கிய நாளிலிருந்து இந்நாள் வரை 1,75,46,278 பிறப்பு சான்றிதழ்களும், 42,06,249 இறப்பு சான்றிதழ்களும் இணைய தளம் வழியாக பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 3.7.3 மயான பூமிகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் உள்ள 206 மயான பூமிகளில் 88 மயான பூமிகளை சென்னை மநாகராட்சி பராமரித்து வருகிறது. இவற்றில் நவீன முறையில் 28 எரிவாயு தகனமேடை மற்றும் 8 மின்சார தகனமேடை வசதிகள் பொது மக்களின் பயன்பாட்டுக்கு முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

### 3.8 கல்வித்துறை

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின்கீழ் 119 தொடக்கப்பள்ளிகள், 92 நடுநிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள் ஆக மொத்தம் 281 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 200 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகள் தொடங்கப்பட்டு அவற்றில் 11,569 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். சென்னை பள்ளிகளில், 2017 – 2018 ஆம் கல்வியாண்டில் மொத்தம் 85,910 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முழுமையான மற்றும் தரமான கல்வி, ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையோடு சென்னைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, மருத்துவம், பொறியியல், கலை, சட்டம்

போன்ற மேல்படிப்புகளைப் படிப்பதற்கு அவர்கள் படித்து முடிக்கும் காலம் வரை பொறியியலில் 150 மாணவர்கள், கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பில் 150 மாணவர்கள், பட்டயப் படிப்பில் 50 மாணவர்கள், ஆசிரியப் படிப்பு மற்றும் செவிலியர் படிப்பில் 50 மாணவர்கள், சட்டப் படிப்பில் 15 மாணவர்கள் மற்றும் உயர்படிப்பு (Integrated Course) 10 மாணவர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி ஊக்கத்தொகை வழங்குகின்றது. 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் விலையில்லா சீருடைகளும், சென்னை மழலையர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ-மாணவியருக்கும் விலையில்லா சீருடை மற்றும் நோட்டுப்புத்தகங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு, மாணவ மாணவியருக்கு மாலை நேர சிறப்பு வகுப்பின்போது ஊட்டச்சத்தினை அதிகரிக்க 100 கிராம் சுவையான “சுண்டல்" வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு ஓவியம், இசை மற்றும்

நடனம் ஆகியவற்றிற்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்க கலை ஆய்வகங்கள் அமைக்கப் பட்டுள்ளன. மாணவர்கள் கற்றல் செயல்பாட்டில் மிகவும் ஆர்வமுடன் ஈடுபடுவதற்கு ஏதுவாக அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் 84 வள வகுப்பறைகள் (Smart Classes) நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் தொடங்கப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் மாணவர்கள் தாங்களாகவே கணினியினை இயக்கி கடினமான பாடங்களை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. மேலும், 28 சென்னைப் பள்ளிகளில் 20 மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் 8 நடுநிலைப்பள்ளிகள் மேம்படுத்தப்பட்ட வளவகுப்பறைகள், துவங்கப்பட்டுள்ளன. மேற்படி பள்ளிகளில் 40 கணிப்பலகைகள் (Tablets) வழங்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் மாணவ மாணவிகளின் பொது அறிவை வளர்க்கும் வகையில் அனைத்து வகுப்புகளுக்கும் தமிழ் மற்றும்

ஆங்கில நாளேடுகள் வழங்கப்பட்டு செய்தித்தாள் படிக்கும் வழக்கம் ஊக்குவிக்கப்படுகிறது.

70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், கற்றல்-கற்பித்தல் தொய்வின்றி சிறந்து விளங்க மின்னாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆய்வகங்களுக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு கற்றல்-கற்பித்தல் சூழ்நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. தகுந்த குடும்பச் சூழ்நிலை மற்றும் சமுதாயச் சூழ்நிலை இல்லாத மாணவ மாணவியர்கள் நலனுக்காக சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை மற்றும் சென்னை மேல்நிலைப் பள்ளி, சுப்பராயன் தெரு, அமைந்தகரை ஆகிய இரண்டு பள்ளிகளில் அம்மா உண்டு உறைவிடப் பள்ளி தொடங்கப்பட்டு, அவற்றில் பயின்ற மாணவர்கள் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளனர்.

Spark ஒருங்கிணைந்த திட்டம் (Spark Integrated Programme) என்ற மீத்திறன் வாய்ந்த மாணவர்களுக்கான

சிறப்புத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, அம்மாணவர்கள் உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்க வைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு அதிகபட்ச மதிப்பெண்களுடன் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுவதற்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிகபட்ச மதிப்பெண்கள் பெற்று பல்வேறு தொழிற்பயிற்சி பிரிவுகளில் (Professional Courses) சேர்ந்து பயின்று வருகின்றனர். கடந்த கல்வியாண்டில் ஒரு மாணவர் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 1177/1200 மதிப்பெண்கள் பெற்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகபட்ச மதிப்பெண்களை பதிவு செய்து பெருமை சேர்த்தார். மேலும் 2016-2017 ஆம் ஆண்டில் 12-ம் வகுப்பு படித்த மாணவர்களில், 179 மாணவர்கள் பொறியியல், 11 மாணவர்கள் மருத்துவம், 3,138 மாணவர்கள் கலை மற்றும்

அறிவியல், 37 மாணவர்கள் செவிலியர் பயிற்சி, 6 மாணவர்கள் சட்டப்படிப்பு மற்றும் 135 மாணவர்கள் தொழில் நுட்ப கல்லூரிகளில் சேர்ந்து பயின்று வருகின்றனர்.

இந்த ஆண்டு நடைபெற்ற 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 5,788 மாணவ மாணவியர் தேர்வு எழுதினர். இதில் மாணவர்கள் 2,199, மாணவியர்கள் 3,589 ஆவர். தேர்வு எழுதியோரில் 5,139 மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவர்கள் 1782, மாணவியர்கள் 3,357 ஆவர். தேர்ச்சி சதவீதம் 88.79 ஆகும். கடந்த ஆண்டை விட 0.05 சதவீதம் அதிகமாகும். மேலும் 200/200 மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்கள் 69 நபர்கள், 1,100க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் 74 நபர்கள், 1000 க்கும் அதிகமான மதிப்பெண் பெற்றவர்கள் 326 நபர்கள் ஆவர். சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 3 பள்ளிகள் 100 சதவீத விழுக்காடு தேர்ச்சி பெற்றுள்ளன.

இந்த ஆண்டு நடைபெற்ற அரசு 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 5,908 மாணவ மாணவியர் தேர்வு எழுதினர். இதில் மாணவர்கள் 2,765 மாணவியர்கள் 3,143 ஆவர். தேர்வு எழுதியோரில் 5,516 மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் மாணவர்கள் 2,502, மாணவியர்கள் 3,014 ஆவர். தேர்ச்சி சதவீதம் 93.36 ஆகும். கடந்த ஆண்டை விட 0.26 சதவீதம் அதிகமாகும். மேலும் ஒரு மாணவர் 100/100 மதிப்பெண் பெற்றுள்ளார். 450க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் 40 பேர், 400க்கு அதிகமான மதிப்பெண் பெற்றவர்கள் 416 நபர்கள், சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் 30 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காடு பெற்றுள்ளது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் மண்டலம் 9-ல் தொழிற்பயிற்சி நிலையமானது இயங்கி வருகிறது. இதில் மத்திய அரசின் NCVT (National Council of Vocational Training) அனுமதியுடன் பல்வேறு பாடப்பிரிவுகளான கணினி இயக்குபவர் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பாளர், குழாய்

பொருத்துபவர், பிட்டர், கம்மியர் (மோட்டார் வாகனம்), மின் பணியாளர், கம்மியர் (மின்னணுவியல்) ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்து செல்லும் அனைத்து மாணாக்கர்களுக்கும் பல்வேறு தொழில்துறைகளில் வேலை வாய்ப்புகள் இத்தொழில் பயிற்சி நிலையம் மூலம் ஏற்படுத்தி தரப்படுகிறது.

மாணவர்கள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க மற்றும் தனிக்கவனம் செலுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்படும் சென்னைப் பள்ளிகளுடையேயான விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் உற்சாகமாக நடத்தப்பட்டு மாணாக்கர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் பயனாக, தேசிய அளவில் இந்திய ஆசிய விளையாட்டு கூட்டமைப்பால் நடத்தப்பட்ட மாரத்தான் போட்டியிலும் மற்றும் அனைத்து இந்திய கேரம் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட கேரம் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளனர். மாநில அளவில் பள்ளிக்கல்வித்துறை மூலம் நடத்தப்பட்ட போட்டிகளில் 2 மாணவிகள் 19 வயதிற்குட்பட்ட பிரிவிலும்,

ஒரு மாணவி, 17 வயதிற்குட்பட்ட பிரிவிலும் குத்துச்சண்டை போட்டியில் முதலிடம் பெற்றுள்ளனர். 14 வயதிற்குட்பட்ட பிரிவில் ஜூடோ போட்டியில் 1 மாணவியும் எப்பே (Epee Individual) போட்டியில் 17 வயதிற்குட்பட்ட ஒரு மாணவியும், 14 வயதிற்குட்பட்ட 1 மாணவியும் முதலிடம் பெற்றுள்ளனர். மேலும் ஒரு மாணவி, 17 வயதிற்குட்பட்ட பிரிவில் சாபர் (Sabre Team) போட்டியில் முதலிடம் பெற்றார். மாநில அளவிலான மாரத்தான் போட்டியில் 8 மாணவர்கள் பங்கு பெற்று பரிசு பெற்றுள்ளனர்.

பள்ளிகளின் செயல்பாடுகளின் ஒரு அங்கமாக தேசிய மாணவர் படை செயல்பட்டு வருகின்றது. மேற்படி தேசிய மாணவர் படையைச் சேர்ந்த, சென்னை பள்ளி மாணவி புதுதில்லியில் நடைப்பெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பு கலை நிகழ்ச்சியில் 26.01.2018 ல் கலந்து கொண்டு வெற்றி பெற்று மேதகு குடியரசு தலைவர் மற்றும் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் பாராட்டினைப் பெற்றுள்ளார்.

"Wings to Fly" என்ற திட்டத்தின் மூலம் நடத்தப்பட்ட அறிவியல் போட்டியில் சென்னை பள்ளி மாணவ-மாணவியர் கலந்து கொண்டு இறுதி சுற்றில் 8 மாணவ மாணவியர்கள் வெற்றி பெற்று கல்விச் சுற்றுலாவிற்காக NASA செல்ல தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

SNF @ School என்பது உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச் சத்து உணவு ஊக்குவிப்பு திட்டம் ஆகும். இது FSSAI ஆல் அறிமுகப்படுத்தப்பட்டு மாநில உணவு பாதுகாப்பு துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 50 ஆசிரியர்கள் உடல் நலம் மற்றும் ஆரோக்கிய ஒருங்கிணைப்பாளராக பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் வாயிலாக 281 சென்னை பள்ளிகளில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறை மற்றும் வேலூர் கிருத்துவ மருத்துவ கல்லூரி இணைந்து சென்னை பள்ளிகளில் மாணவர்களின் உளவியல்

தேவைகளை பூர்த்தி செய்ய சென்னை பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட 300 ஆசிரியர்களை அப்பள்ளியின் "மாணவர் ஆலோசகர்" (Students Counsellor) என்று அழைக்கப்படுவர். மேலும் அவர்களுக்கு கையேடு / வழிகாட்டியும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழங்கப்பட்டுள்ளது.

### 3.9 பூங்கா மற்றும் அரங்கத்துறை

#### 3.9.1 பூங்கா

பெருநகர சென்னை மாநகராட்சியில் 569 பூங்காக்கள், 123 சாலை மையத்தடுப்புக்கள், 111 போக்குவரத்து தீவுத்திட்டு பூங்காக்கள் மற்றும் 163 சாலையோர பூங்காக்கள் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன.

இப்பூங்காக்களின் மொத்தப் பரப்பில் 70% பசுமைக்கும், மீதமுள்ள 30% பூங்கா தொடர்பான பிற பணிகளுக்கும் பயன்படுத்தலாமென முக்கிய கொள்கை

முடிவெடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் பசுமையை நல்ல முறையில் தொடர்ந்து பராமரிக்க புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நீர் தெளிப்பு பாசன சாதனங்கள் பொருத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நிதி ஆண்டுகளான 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ல், மூலதன நிதியின் கீழ் ₹18.77 கோடி மதிப்பீட்டில் 20 எண்ணிக்கையிலான பூங்காக்கள் புதிதாக உருவாக்கப்பட்டன. மேலும், இந்நிதியின் கீழ் 10 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைக்க ₹18.22 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

மேலும், சென்னை நகரில் உள்ள 4 பூங்காக்களில் பரிட்சார்த்த முறையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கப்பட்டு அருகில் இருக்கும் கழிவுநீர் குழாய்களில் உள்ள கழிவுநீரை சுத்திகரித்து பூங்காவில் இருக்கும் செடிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதனால் கோடை

காலத்தில் நிலத்தடி நீர் வீணாகாமலும், லாரிகளில் நீர் கொண்டு வந்து ஊற்றுவதை தவிர்க்கவும் உதவுகிறது.

இதன் தொடர்ச்சியாக, சீர்மிகு நகர திட்டத்தின் (Smart City Scheme) கீழ் தியாகராயநகர் பகுதியில் உள்ள 8 பூங்காக்களை மறுசீரமைப்பு செய்ய ₹9.96 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பூங்காக்களிலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்க 4 பூங்காக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 30.06.2018-க்குள் முடிக்கப்படும்.

### 3.9.2 அரங்கத்துறை

பெருநகர சென்னை மாநகராட்சி அரங்கத்துறையின் கீழ் 212 விளையாட்டுத் திடல்கள், 96 நவீன உடற்பயிற்சி கூடங்கள், 1 உள்விளையாட்டரங்கம், 3 நீச்சல் குளங்கள், 8 டென்னிஸ் ஆடுகளங்கள், 11 ஸ்கேட்டிங் தளங்கள் போன்றவை செயல்பட்டு வருகின்றன. இவற்றினை நாளொன்றுக்கு சுமார் 10,000க்கு மேற்பட்ட பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்துகின்றனர்.

இதன் காரணமாக உள்ளூர் விளையாட்டு வீரர்கள் குறிப்பாக கால்பந்து, பளுதூக்குதல், உடல்கட்டமைப்பு, கைப்பந்து மற்றும் கூடைபந்து ஆகியவற்றில் இலவசமாக சிறந்த பயிற்சி பெற்று தேசிய மற்றும் உலகளவில் சிறந்த விளையாட்டு வீரராக உருவாகி வருகிறார்கள். குறிப்பாக, மண்டலம் 10 கோட்டம்-136, தி.நகர், வெங்கட் நாராயணா சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி கூடைப்பந்து மைதானத்தில் பயிற்சி பெற்ற உள்ளூர் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் தமிழ்நாடு சார்பாக தேசிய அளவிலும், இந்தியா சார்பில் தென்கிழக்கு ஆசிய விளையாட்டு போட்டி மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்களைப் பெற்றுள்ளனர். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி உடற்பயிற்சி கூடங்களில் பயிற்சி பெற்ற விளையாட்டு வீரர்கள் பளுதூக்குதல், உடற்கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் உலகளவில் இந்தியா சார்பில் கலந்து கொண்டு பல பதக்கங்களைக் குவித்துள்ளனர்.

கடந்த மூன்று நிதி ஆண்டுகளான 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ன்கீழ் ₹ 4.54 கோடி திட்ட மதிப்பீட்டில் 3 விளையாட்டு திடல்கள் அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்படும்.

### 3.10 சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM)

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் உட்கட்டமைப்பை உலகதரத்திற்கு இணையாக மேம்படுத்த மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட சிறப்பான திட்டம் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டமாகும். இந்த சிறப்பு திட்டத்தின் கீழ் கடந்த 2011 -2016 ஆண்டுகளில் தமிழக அரசினால் ₹1488 கோடி நிதி சென்னை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் சுமார் 1,146.67 கி.மீ. நீளமுடைய சாலை, 170.69 கி.மீ. நீளமுடைய மழைநீர் வடிகால்வாய், 238.83 கி.மீ. நீளமுடைய நடைபாதை பணிகளும், 12,952 எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைக்கும் பணிகளும், ₹1451.74 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டு

பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினால் விரிவாக்கப்பட்ட சென்னை பகுதி மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் பெருமளவிற்கு நிறைவேற்றப்பட்டது.

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சாலைப்பணிகள் பின்வருமாறு :-

**<u>சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம்</u>**

| ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கீ.மீ) | செலவீனத் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 2011-12 | 1,367 | 344.53 | 331.06 |
| 2012-13 | 1,932 | 353.67 | 404.74 |
| 2013-14 | 1,215 | 254.80 | 388.05 |
| 2015-16 | 446 | 193.67 | 327.89 |
| | 4,960 | 1,146.67 | 1,451.74 |

### 3.11 சாலை பராமரிப்பு திட்டங்கள்

### 3.11.1 பேருந்து தட சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியால் 387 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தடசாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பேருந்து சாலை பணிகள் யாவும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்ப்புர சாலை

உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

சாலைப் பணியினை ஆரம்பம் முதல் முடியும் வரை கண்காணிக்கவும், தரத்தினை உறுதி செய்யவும் புகழ்பெற்ற திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் (Project Management Consultant) நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாலையின் உயரம் அதிகமாகாமல் இருக்கவும், சாலைகளின் மேற்பரப்பு சீராக இருக்கவும் அனைத்து சாலைகளிலும் நவீன மில்லிங் இயந்திரம் கொண்டு சாலையினை அகழ்ந்தெடுத்து சாலைகள் அமைக்கப்படுகிறது. சாலைகள் தளம் சரி செய்தல் (CAMBER), டி.பி.எம். (Dense Bituminous Macadam) மற்றும் பி.சி. (Bituminous Concrete) ஆகிய மூன்று அடுக்குகளாக அமைக்கப்படுகின்றன.

அனைத்து பேருந்து தட சாலைகளிலும் 9 மீட்டர் (30 அடி) அகலம் கொண்ட மின்னணு உணரி இயந்திரம் மூலம் அமைக்கப்படுவதால் சாலைகளின் மேற்பரப்பு சீராகவும், வாகன போக்குவரத்திற்கு இலகுவாகவும் அமைகிறது. அனைத்து சாலைகளும் 5 அடுக்கு தர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

அனைத்து பேருந்து தட சாலைகளும் சாலை பயன்படுத்துவோரின் பாதுகாப்பிற்காக தெர்மோ பிளாஸ்டிக் வண்ணக்கோடுகளும், இரவில் மிளிரும் மிளிர்வான்களும் (studs) அமைக்கப்படுகின்றன. மேலும், மரங்களை சுற்றிலும் மழைநீர் செல்லும் வகையில் கான்கிரீட் ஜாலிகள், மழைநீர் செல்லும் வகையில் சாலைகளின் இரு ஓரங்களிலும் நீர் தடம் (water table) அமைத்தல், வேகத்தடைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் அமைத்தல் போன்ற போக்குவரத்து மேம்பாட்டு பணிகளும் ஒட்டுமொத்தமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான, சிறந்த தொழில் நுட்பத்தில் அனைத்து பேருந்து தட சாலைகளும் மற்றும் 18 சிறிய பேருந்துகள் செல்லும் சாலைகளும் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளன.

| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | செலவினத் தொகை (₹கோடியில்) |
|---|---|---|---|---|
| TURIP | 2013-14 | 42 | 29.35 | 43.78 |
| TURIP | 2014-15 | 54 | 46.56 | 88.07 |
| CMCDM | 2015-16 | 198 | 152.56 | 285.19 |
| TURIP | 2015-16 | 92 | 76.61 | 117.36 |
| SDRF | 2015-16 | 103 | 40.83 | 55.70 |
| TURIP | 2016-17 | 40 | 24.17 | 18.30 |
| TURIP | 2016-17 (saving) | 8 | 4.43 | 4.31 |
| TURIP | 2017-18 | 7 | 5.68 | 9.70 |
| **மொத்தம்** | | **544** | **380.19** | **622.41** |

இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் கடந்த 100 ஆண்டுகளில் சென்னை மாநகரம் கண்டிராத அளவில் 2015ம் ஆண்டு ஏற்பட்ட முன் எப்போதும் கண்டிராத மழை மற்றும் வெள்ளத்திலும் சேதமடையவில்லை. மேலும் 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் பருவ மழையின்போதும்

எவ்வித சேதமும் அடையாமல் உள்ளன. சிறந்த முறையில் சாலைப்பணிகள் செய்ததற்கு இதுவே சான்றாகும்.

### 3.11.2 உட்புறச் சாலைகள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 33,374 உட்புறசாலைகள் 5,525 கி.மீ நீளத்திற்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. உட்புறச்சாலை பணிகள் யாவும் மூலதன நிதி மற்றும் தமிழக அரசு மானிய நிதியான தமிழ்நாடு நகர்புர சாலை உட்கட்டமைப்பு திட்ட நிதி (TURIP), தமிழ்நாடு நகர்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதி (CMCDM) ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்வேறு திட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட உட்புறச் சாலைகள் மேம்படுத்துதல் பணிகள் தொடர்பான அட்டவனை:-

| உட்புறச்சாலைகள் பராமரித்தல் | | | | |
|---|---|---|---|---|
| திட்டம் | ஆண்டு | சாலைகளின் எண்ணிக்கை | சாலைகளின் நீளம் (கி.மீ) | செலவினத் தொகை (₹ கோடியில்) |
| CMCDM | 2011-12 | 1,367 | 344.53 | 331.06 |
| | 2012-13 | 1,932 | 353.67 | 404.74 |
| | 2013-14 | 1,215 | 254.80 | 388.05 |
| | 2015-16 | 248 | 41.00 | 42.70 |
| MIDF Phase I | 2015-16 | 3,807 | 624.98 | 373.53 |
| MIDF Phase II | 2015-16 | 1,615 | 257.44 | 168.68 |
| TURIP | 2016-17 | 1,643 | 294.94 | 157.21 |
| | 2017-18 | 2,902 | 222 | 202.47 |
| மொத்தம் | | 14,729 | 2,171.36 | 1,865.97 |
| GCC Capital Fund | 2011-12 | 896 | 176.23 | 39.40 |
| | 2012-13 | 1,174 | 240.40 | 81.37 |
| | 2013-14 | 2,224 | 295.09 | 166.34 |
| | 2014-15 | 7,510 | 1,180.41 | 923.94 |
| | 2015-16 | 1,010 | 267.87 | 228.94 |
| மொத்தம் | | 12,814 | 2,160.00 | 1,439.99 |
| ஆக மொத்தம் | | 27,543 | 4,331.36 | 3,305.96 |

## 3.12 இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தை ஊக்குவித்தல்

இந்தியாவிலேயே முதல் முறையாக இயந்திர வாகனம் சாரா போக்குவரத்து திட்டத்தை (Non-Motorised Transport) ஏற்று செயல்படுத்தும் முதல் மாநகராட்சியாக பெருநகர சென்னை மாநகராட்சி விளங்குகிறது. பாதசாரிகளின் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மாசுபடுதல் மற்றும் வாகன நெருக்கடி போன்றவற்றை கருத்தில்கொண்டு இயந்திர வாகனம் சாரா போக்குவரத்தினை (Non Motorised Transport) ஊக்குவிப்பதற்காக நடைபாதைகளை உலகதரத்திற்கு இணையாக 5 அடியிலிருந்து 10 அடியாக அகலப்படுத்தும் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படுகிறது. பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, குறிப்பாக சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரான முதியோர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவியர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோர்களின் வசதிக்காக 56

பேருந்து தட சாலைகளில் நடைபாதை மேம்பாட்டு பணிகள் தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டம் 2012-13 நிதியின் கீழ் ₹49.30 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டது பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

முதன்முறையாக, 56 நடைபாதைகள் பாதசாரிகளும், மாற்றுதிறனாளிகள் பயன்படுத்தும் நாற்காலி சக்கரங்களும் செல்வதற்கு ஏதுவாக அமைக்கப்பட்டது. சாலைகளின் சந்திப்புக்களில் இதே அளவில் இருக்கும் வகையில் டேபிள் டாப் (Table Top) முறையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டு அவை வேகத்தடைகளாகவும் பயன்படுகின்றன. அனைத்து கட்டடங்களின் முகப்பிலும் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சி செலவிலேயே சாய்தளங்கள் (Ramp) அமைக்கப்படுகின்றன. நடைபாதைகளில் இடையூறாக அமைந்துள்ள சேவை நிறுவனங்களின் பெட்டகங்கள், மின் மாற்றிகள் ஆகியவை நடைபாதை ஓரத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்துவதை தவிர்க்கும்

பொருட்டு கிரானைட் தடுப்பான்கள் நடைபாதையின் குறுக்கே அமைக்கப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்படும் நடைபாதைகள் பாதசாரிகள் மிகவும் பாதுகாப்பாக செல்லும் வகையில் உள்ளதால் இப்பணிகளுக்கு பொதுமக்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. மேலும், இவ்வகையான நடைபாதை பணிகளை மாற்று திறனாளிகளின் அமைப்பு வரவேற்றுள்ளது.

மேலும் இப்பணிகளுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 5 தேசிய அளவிலான விருதுகள் மற்றும் ஒரு சர்வதேச விருதும் கிடைத்துள்ளது.

போக்குவரத்து மற்றும் மேம்பாட்டு கொள்கை நிறுவனம் பல்வேறு சாலைகளின் தன்மையை கருத்தில் கொண்டு வடிவமைப்புகளைத் தொகுத்துள்ளனர். சாலைகளில் வாகனம் செல்வதற்கான ஒவ்வொரு வழியின் (Lane) அகலம் 3.75 மீ என நிர்ணயம் செய்தும்

வாகனங்கள் நேராக செல்வதற்காக வழிவகை செய்தும் மற்றும் பாதசாரிகள் செல்வதற்கு நடைபாதையினை அகலப்படுத்தியும், சாலைகளின் அகலம் அதிகமாக உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு வழிவகை செய்தும் வடிவமைத்துள்ளார்கள். இந்த சாலை வடிவமைப்பு பேருந்து சாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

### 3.13 மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம்

மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, காமராஜர் சாலை மேற்கு பகுதியில் உள்ள வெவ்வேறு கட்டடங்களின் மதில் சுவர்கள் மற்றும் நடைபாதையை ஒரே மாதிரியாக சீரமைக்க திட்டமிடப்பட்டது. இதில் புதைந்த நிலையில் மற்றும் சேதமடைந்த கல்தூண்களை மாற்றி, புதிய கல்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கல்தூண்களுக்கிடையே கலைநயம் மிக்க துருபிடிக்காத, வார்த்தெடுக்கப்பட்ட இரும்பாலான கிரில்கள் அமைக்கப்பட்டன. இதற்காக

மொத்தம் ₹33.10 கோடி மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

### 3.14 சிறப்பு திட்டங்கள்

#### 3.14.1 சீர்மிகு நகரம் (Smart City)

சென்னை ஸ்மார்ட் சிட்டி திட்டத்திற்கான நிதி ஆதாரம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்கீடாக முறையே ₹500 கோடி என்று ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சீர்மிகு நகரத் திட்டம் பணிகளின் தற்போதைய நிலை.

(i) ₹5.29 கோடி மதிப்பீட்டில், 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ii) ₹143.34 கோடி மதிப்பீட்டில் 15 பணிகள் நடைபெற்று வருகின்றன.

(iii) ₹216.23 கோடி மதிப்பீட்டில் 6 பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது .

(iv) ₹293.26 கோடி தோரய மதிப்பீட்டில் 7 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(v) ₹369.92 கோடி தோராய மதிப்பீட்டில் 5 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க உதேசிக்கப்பட்டுள்ளது.

### 3.14.2 அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

பசுமை இடங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் திறந்தவெளிகளில் பசுமையை மேம்படுத்தி பராமரிப்பதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு பிரிவுகள் அமைத்து நகரங்களின் உன்னதமான மதிப்பை அதிகரிக்க செய்வது அட்டல் புனரமைப்பு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT Scheme) நோக்கங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியானது 50 % இந்திய அரசிடமிருந்தும் 20% தமிழ்நாடு அரசிடமிருந்தும் மீதமுள்ள 30% நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பிடமிருந்தும் பெறப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், மக்களின் நலன் கருதி பசுமை பகுதிகளை உருவாக்க 51 பூங்காக்கள் அமைக்கும் பணி

₹34.74 கோடி திட்ட மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**3.15 பாலங்கள்**

தங்குதடையற்ற போக்குவரத்தினை உறுதி செய்யும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியால், ஆறுகள் மற்றும் கால்வாய்களின் குறுக்கே உள்ள பாலங்கள், தரைமட்ட பாலங்கள் மற்றும் நடை பாலங்கள், பேருந்து சாலை சந்திப்புகளில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே உள்ள மேம்பாலங்கள் என மொத்தம் 278 பாலங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இரயில்வே சந்திக்கடவுகளின் குறுக்கே 16 சுரங்கப்பாதைகளும் மற்றும் முக்கிய பேருந்து சாலைகளில் 6 பாதசாரிகள் சுரங்கப்பாதைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் சிறந்த முறையில் பராமாரிக்கப்பட்டு வருகின்றன.

2017-18 ஆம் ஆண்டில் ₹3.10 கோடி மதிப்பீட்டில், 8 பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 1 பணி வடக்கு வட்டாரம் (மண்டலம் 1-5) உள்ள பாலங்கள் / சுரங்கப்பாதைகள் / பெட்டக வடிவ பாலங்கள் / நடைபாலங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 2 பணிகள் மத்திய மற்றும் தெற்கு வட்டாரங்களில் (மண்டலம் 6-15) உள்ள பாலங்கள் / சுரங்கப்பாதைகள் / பெட்டக வடிவ பாலங்கள் / நடைபாலங்கள் ஆகியவற்றை பராமரிக்கும் பணி மற்றும் வேளச்சேரி ஏரியின் குறுக்கே தற்போதுள்ள கக்கன் பாலத்தினை மேம்படுத்தும் பணி மற்றும் இரண்டு பெட்டக வடிவ பாலங்கள் ஆகிய 5 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ஒரு பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி மற்றும் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே ஸ்டரான்ஸ் சாலை, செங்கற்சூளை சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை மற்றும் குக்ஸ் சாலையை இணைக்கும் தற்போதுள்ள பாலத்தினை மேம்படுத்தும் பணி ஆகிய இரண்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 3.16 தெருவிளக்கு

பெருநகர சென்னை மாநகராட்சி 2,77,662 தெரு விளக்குகளைப் பராமரித்து வருகிறது. இவற்றில் 1,82,775 விளக்குகள் குறைந்த அளவு மின்சாரத்தில் ஒளிரும் எல்.இ.டி. தெரு விளக்குகளாகும். 71,005 சோடியம் ஆவி விளக்குகளாகும். எஞ்சிய 23,882 விளக்குகள் சி.எப்.எல். மெட்டல் அலைடு, இன்டக்ஷன் மற்றும் பிற விளக்குகளாகும். சோடியம் ஆவி விளக்குகள் குறைந்த அளவு மின்சாரத்தில் ஒளிரும் எல்.இ.டி. தெரு விளக்குகளாக படிப்படியாக மாற்றப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மகளிர், வயதானவர்கள் மற்றும் சாலைகளை பயன்படுத்துவோரின் பாதுகாப்பு கருதி உட்புற மற்றும் பேருந்து சாலைகளில் சீரான வெளிச்சம் தரும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரே சீரான வெளிச்சம் தரும் தெரு விளக்குகள் அமைக்கும் நோக்கத்துடன், மின் சக்தி சேமிக்கும் எல்.இ.டி தெரு விளக்குகள்

அமைக்கப்படுகின்றன. சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் மெட்டல் அலைடு விளக்குகளோடு ஒப்பிடும்போது எல்.இ.டி தெரு விளக்குகள் 45% குறைவாக மின்சாரம் உபயோகிக்கும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் 1,10,000 எண்ணிக்கையில் மின்சகதி சேமிப்பு எல்.இ.டி. விளக்குகள் அமைக்கும் பணி ₹322 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் விடுபட்ட இடங்களில் 17,301 எண்ணிக்கையிலான புதிய தெரு மின் விளக்கு கம்பங்களுடன் கூடிய மின் சக்தி சேமிப்பு எல்.இ.டி விளக்குகள் ₹80.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின் சக்தி சேமிப்பு தரும் எல்.இ.டி தெரு விளக்குகள் அதிக அளவில் அமைக்கப்பட்டுள்ள மாநகராட்சிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியும் ஒன்றாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி ஒவ்வொரு மாதமும் தெருவிளக்கு மின்கட்டணமாக ₹6 கோடி

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தி வந்தது. புதியதாக எல்.இ.டி விளக்குகளாக மாற்றி அமைத்ததால் மின்கட்டணம் மாதத்திற்கு ₹4.50 கோடியாக குறைந்துள்ளது. இதனால் மின்கட்டணம் செலுத்துவதில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதத்திற்கு ₹ 1.50 கோடியும் வருடத்திற்கு ₹ 18 கோடியும் சேமிப்பாகிறது.

### 3.17 மழைநீர் வடிகால்

பெருநகர சென்னை மாநகராட்சி, மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க, 1,894 கி.மீ. நீளத்திற்கு 7,351 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் கட்டமைப்பை உருவாக்கி பராமரித்து வருகிறது. அதேபோன்று, 48.80 கி.மீ. நீளத்திற்கு 30 நீர்வழிக்கால்வாய்களையும் பராமரித்து வருகிறது. இதில் கொடுங்கையூர் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், பாடிகுப்பம் கால்வாய் போன்ற சில கால்வாய்களும் அடங்கும்.

விரிவாக்கத்திற்கு முன்பு இருந்த சென்னை மாநகரின் கட்டமைப்பு வசதிகளுக்கு இணையான வசதிகளை விரிவாக்கப்பட்ட பகுதிகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற பெருநகர சென்னை மாநகராட்சியின் கொள்கையின்படி, மழைக்காலங்களில் மழைநீர் தேங்காத வண்ணம் மழைநீரை பாதுகாப்பாகச் சேகரித்து, குளம் மற்றும் ஏரிகளில் சென்றடையும்வண்ணம் இணைப்புகள் ஏற்படுத்துதல், நிலத்தடி நீரை பாதுகாக்க மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான சுத்தமான சூழ்நிலைகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் வடிநிலப்பகுதிகளில் 1,069.40 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் கட்டமைப்பை ஏற்படுத்த ₹4034.30 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக அடையாறு மற்றும் கூவம் வடி நிலப்பகுதிகளில் ₹1261.50 கோடி மதிப்பீட்டில் மழைநீர்

வடிகால்கள் கட்டும் பணிக்கு உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 39 சிப்பங்களாக பணிகள் வடிவமைக்கப்பட்டன. 35 சிப்பங்களில் 378 கி.மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மழைநீர் வடிகால்கள் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் செப்டம்பர் 2018-க்குள் முடிக்கப்படும். மீதமுள்ள நான்கு சிப்ப பணிகளான அம்பத்தூர்-சிட்கோ, நொளம்பூர், நந்தம்பாக்கம் மற்றும் பாடிகுப்பம் ஆகிய நீர்வழிக்கால்வாய் பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவளம் வடிநிலப்பகுதியில் 326 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுவதற்கு ₹1243.15 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கே.எப்.டபிள்யூ (KfW) வங்கி என்ற ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதி உதவியால் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த வடிநிலப்பகுதி முழுவதும் 3 துணை வடிநிலங்களாக M1, M2 மற்றும்

M3 என திட்டக்கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. M3 திட்டக்கூறு பணிக்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. இத்திட்ட பணிகள் மேற்கொள்ள நிதி ஆதாரம் மற்றும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படும். மேலும், கோவளம் வடிநிலப்பகுதியில் (M1) மற்றும் (M2) திட்டக்கூறுகளுக்கு திருத்திய விரிவான திட்ட அறிக்கையினை அளிக்க கலந்தாலோசகரை நியமித்துள்ளது. இப்பணி ஜுன் மாதம் 2019ல் முடிவடையும். மூன்று திட்டக்கூறுகளுக்கும் சேர்த்து ஒரே நேரத்தில் நிதி ஆதாரம் வழங்க கே.எப்.டபிள்யூ வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் 765 கி.மீ நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியை ₹1784.54 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு நிதி வேண்டி நிதி அயோக் (NITI Aayog) மற்றும் மத்திய நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகம் (MoHUA) ஆகிவற்றிற்கு நிதி பெற கடிதங்கள்

அனுப்பபட்டு, அங்கிருந்து நிதி ஆதாரங்கள் இல்லை என்று கடிதம் பெறப்பட்டது, இத்திட்டத்திற்கு நிதி வேண்டி பலவகைகளில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு, தற்போழுது உலக வங்கியிடம் நிதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3.18 திடக்கழிவு மேலாண்மை

பெருநகர சென்னை மாநகராட்சியில் தினந்தோறும் 5400 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் கையாளப்பட்டு வருவது பிரதான குடிமை பொறுப்புகளில் ஒன்றாகும்

15 மண்டலங்களைக் கொண்ட இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் 12 மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டும், இதர 3 மண்டலங்களின் திடக்கழிவு மேலாண்மை தனியார் நிறுவனம் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திடக்கழிவுகள் நிர்வாகம் பின்வரும் வழிகளில் செயல்பட்டு வருகிறது.

### 3.18.1 முதல்நிலை திடக்கழிவு சேகரிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது முதல்நிலை திடக்கழிவு சேகரிப்பு செயல்பாட்டில் திடக்கழிவுகள் உருவாகும் இடமான வீடுகள் தோறும் சென்று 5678 மூன்று சக்கர மிதிவண்டிகள் மூலம் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இப்பணியை அன்றாடம் செவ்வனே மேற்கொள்ளும் பொருட்டு சுமார் 19,343 மாநகராட்சி மற்றும் தனியார் நிறுவன துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணியாளர்களின் வருகைப் பதிவினை பயோமெட்ரிக் எனும் ரேகை பதிக்கும் மின்னணு இயந்திரம் மூலம் பதியப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

மேலும் இம்முதல் நிலை திடக்கழிவு மேலாண்மையை சிறப்பாக செய்திட கனரக / இலகுரக காம்ப்பாக்டர் வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர மிதிவண்டிகள் திடக்கழிவுகளை சேகரிப்பதற்காக செல்லும் வழித்தடங்களுக்கான வரைபடம் தயாரித்து, செயல்பாடுகள் சிறப்பாக கண்காணித்தும், செயல்படுத்தப்பட்டும் வருகிறது. துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணிச்சூழலை உறுதி செய்யும் பொருட்டு அவர்களுக்கு மூக்குக்கவசம், கையுறை மற்றும் இரவில் ஒளிரும் மேலாடை மற்றும் இதர நலப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.18.2 திடக்கழிவு உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல்

பெருநகர சென்னை மாநகராட்சியானது திடக்கழிவுகளை தரம் பிரித்து கையாள்வதில் தனிச் சிறப்பு கவனம் கொண்டு செயல்படுத்தி வருகிறது. பொது மக்கள் இதற்கான விழிப்புணர்வையும், உள்நோக்கத்தினையும்

புரிந்து செயல்படவும், மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு நிகழ்வாக, 05.06.2017 உலக சுற்றுச் சூழல் பாதுகாப்பு தினத்தன்று, இவ்விழிப்புணர்வு பொது மக்களை சேருகின்ற வகையிலும், ஈரமான மக்கும் திடக்கழிவுகள் பச்சை நிற தொட்டிகளிலும், உலர்ந்த மக்காத திடக்கழிவுகளை நீல நிற பின்களிலும் சேகரிப்பது குறித்தும் விளக்கப்பட்டது.

மாநகராட்சியில் உருவாகும் திடக்கழிவுகளை குறைக்கும் நோக்கத்துடன், அடிப்படை கொள்கைகளான உருவாகும் குப்பைகளை குறைத்தல், மறு பயன்பாட்டிற்கு கொண்டு செல்லுதல் மற்றும் மறு சுழற்சிக்கு கொண்டு செல்லுதல் ஆகிய அனைத்தும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-க்கு இணங்க, குப்பையை உருவாக்கும் ஒவ்வொருவரும் திடக்கழிவுகளை கையாளவேண்டும் என்ற நோக்கில் 02.10.2017 மகாத்மா காந்தியின் பிறந்த நாளன்று பெருமை சேர்க்கும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் புதன்கிழமைதோறும் மக்காத

திடக்கழிவு மற்றும் பிளாஸ்டிக் போன்ற உலர் திடக்கழிவுகளைத் தனியாக பெற்று கையாளப்பட்டு வருகிறது.

### 3.18.3 இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகரமும், போக்குவரத்தும்

இரண்டாம் கட்ட திடக்கழிவு சேகர நிலையில், திடக்கழிவு சேகர தொட்டிகளிலிருந்து 140 கனரக குப்பை நெருக்கும் இயந்திரங்கள், 169 இலகுரக குப்பை நெருக்கும் இயந்திரங்கள், 22 ஹாலேஜ் டிப்பர் டிரக்குகள், 114 கனரக டிப்பர்கள் மற்றும் 36 இலகுரக டிப்பர் வாகனங்கள் பயன்பட்டு வருகின்றன. மேலும் பேருந்து தடச்சாலைகள் மற்றும் இதர முக்கிய சாலைகளை 12 எண்ணிக்கையிலான இயந்திரப் பெருக்கிகள் மூலம் சுத்தப்படுத்தப்படுகின்றன. 57 சக்கர தடை வாகனங்கள் மற்றும் 23 முன் பின் பளு தூக்கிகள் ஆகியவற்றை பயன்படுத்தி திடக்கழிவுகள் மற்றும் கட்டுமான மற்றும் இடிபாட்டு கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. போக்குவரத்து தட வரைபடத்தின்படி திடக்கழிவுகள்

குப்பை மாற்று வளாகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு களையப்பட்டு வருகிறது.

இப்பணிக்காக 2011-12 முதல் 2015-16 ஆண்டு வரை நவீன குப்பை நெருக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கனரக / இலகுரக வாகனங்கள், டிப்பர் வாகனங்கள், இயந்திரப் பெருக்கிகள், சக்கரத்தடை வாகனங்கள், முன்பின் பளு தூக்கிகள், ஹைட்ராலிக் எக்ஸ்வேட்டர்கள் மற்றும் புல்டோசர்கள் என மொத்தம் 295 வாகனங்கள் சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் மூலமும் ₹62.25 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் 2017-18 ல் ₹14.56 கோடி செலவில் 8253 காம்பேக்டர் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது 9 மண்டலங்களில் வாகன இயக்கூர்தி நிலையங்கள் இயங்கி வரும் நிலையில், 2017-2018 ம் நிதியாண்டில்

மேலும் இரண்டு வாகன இயக்கூர்தி நிலையங்கள் மணலி மற்றும் சோழிங்கநல்லூரில் ₹7.59 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் மண்டலம் 1, 3 மற்றும் 7-க்காக மூன்று வாகன இயக்கூர்தி நிலையங்கள் கட்டும் பணி ₹15.89 கோடி செலவில் நடைபெற்று வருகின்றன. இப்பணி ஆகஸ்டு மாதம் 2018-ல் முடிவடையும் தருவாயில் உள்ளன.

### 3.18. 4 பரவலாக்கப்பட்ட திடக்கழிவு பதனிடுதல்

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திடக்கழிவு கொட்டும் வளாகங்களில் சேர்க்கும் குப்பையை குறைக்கும் பொருட்டு மாநகரின் மண்டலங்களில் சிறிய அளவிலான பதனிடுதல் திட்டங்களாக மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் கிடங்குகள் மற்றும் உயிரி எரிவாயு கலன்கள் செயல்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்கும் கிடங்குகள் | - | 136 சாதாரண உரக்கிடங்கு, 3 மண்புழு உரக்கிடங்கு மொத்த உள்ளீடு திறன் நாளொன்றுக்கு 69.42 மெ.டன் |

| | | | |
|---|---|---|---|
| 2 | மீத்தேன் எரிவாயு தயாரிக்கும் கலன்கள் | - | 30 எண்ணிக்கை - உள்ளீடு திறன் நாளொன்றுக்கு 9.79 மெ.டன் |

3. BARC தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உள்ளீடு திறன் 7.97 மெட்ரிக் டன் கொண்ட 5 மீத்தேன் எரிவாயு தயாரிக்கும் கலன்கள் செயல்பாட்டில் உள்ளன. அதில் நாளொன்றுக்கு பெறப்படும் 24.6 Kwh மின்சாரம் தெருவிளக்குகளுக்கும் மற்றும் உயர் மின் கோபுர விளக்குகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இதே முறையில் பெரம்பூர் பகுதியில் உள்ள ஆட்டு இறைச்சிக் கூடத்தில் 2 எண்ணிக்கையில், கழிவுகளை பயன்படுத்தி மின்சார தயாரிக்கும் நிலையம் ₹1.8 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஆகஸ்டு மாதம் 2018ல் முடிவு பெறும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் குப்பை பதனிடும் முறைகள் மூலம் நாளொன்றுக்கு 25 மெ.டன் உரம் தயாரிக்கப்பட்டு சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களுக்கு பயன்படுத்தப்படுவதுடன் பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எரி வாயுவை சந்தையிலிருந்து கொள்முதல் செய்வதை குறைக்கும் பொருட்டு மீத்தேன் எரிவாயு அம்மா உணவகங்களுக்கு சமையல் எரிவாயுவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3.18.5 திடக்கழிவுகளைக் களைதல்**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 8 குப்பை மாற்று வளாகங்களும், 2 குப்பைகளை கொட்டி நிரவும் வளாகங்களான 269 ஏக்கர் பரப்பளவு கொண்ட கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் மற்றும் 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் திடக்கழிவுகளை களைதலுக்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**3.18.6 திடக்கழிவு மேலாண்மை திட்டங்களுக்கான பணியின் விவரம்**

மண்டலம் - 1, 2, 3 மற்றும் 7ன் துப்புரவு பணிகளான குப்பை சேகரித்தல் மற்றும் குப்பைகளை வளாகத்திற்கு கொண்டு சேர்த்தல் (திட்டக்கூறு 1) மற்றும் மண்டலம் - 11, 12, 14, 15 (திட்டக்கூறு 2) இவ்விரு திட்டக்கூறுகளுக்கும்

TNIDB- ன் ஒப்புதலுக்கு பிறகு அரசாணை எண்கள். 33 மற்றும் 34, நாள். 02.04.2018 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகளை பதனிடுதல், விஞ்ஞான ரீதியாக குப்பைகளை நிரப்புதல் (Sanitary Land Fill) மற்றும் அறிவியல் ரீதியாக மறு சீரமைத்தல் பணி (மண்டலம் 1 முதல் 8 வரை திட்டக்கூறு 3) மற்றும் பெருங்குடி (மண்டலம் 9 முதல் 15 வரை திட்டக்கூறு 4 ) இவ்விரு திட்டக்கூறுகளுக்கு விரிவான சாத்திய கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு நிபுணர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திட்டக்கூறுகள் (3 மற்றும் 4) ஒவ்வொன்றும் கொடுங்கையூர் வளாகம் 3(அ), 3(ஆ) எனவும் பெருங்குடி 4(அ), 4(ஆ) எனவும் இரண்டாக பிரிக்கப்பட்டு முறையே அறிவியல் ரீதியாக மறுசீரமைத்தல் மற்றும் விஞ்ஞான ரீதியாக குப்பைகளை நிரப்புதல் -

பதனிடுதல் என பிரிக்கப்பட்டு, அது தொடர்பான பணிகள் தீவிர நடவடிக்கையில் உள்ளது.

### 3.19 தூய்மை இந்தியா திட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சி "திறந்த வெளி மலம் கழித்தலற்ற" மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சியில் 1,003 சமுதாய கழிவறை இருக்கைகள் ₹14.86 கோடி செலவிலும் மற்றும் கழிப்பறை வசதி இல்லாதவர்களுக்கு 6,424 தனி நபர் கழிப்பறைகள் ₹4.21 கோடி செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுவரும் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்திட தூய்மை இந்தியா திட்டத்தில் 2,060 மூன்று சக்கர மிதிவண்டிகளும், 29,406 மூன்று சக்கர மிதிவண்டிகளுக்கான குப்பை தொட்டிகளும், 12,283 காம்ப்பாக்டர் குப்பைத் தொட்டிகளும், 2,765 ரோட்டோ மோல்டு குப்பைத்

தொட்டிகளும், ₹27.93 கோடி செலவினத்தில் கொள்முதல் செய்யப்பட்டன. மேலும் தூய்மை இந்தியா திட்டத்தில் ₹0.30 கோடி மதிப்பீட்டில் 50 மூன்று சக்கர மிதிவண்டிகளும் மற்றும் 2,000 மூன்று சக்கர மிதிவண்டிகளுக்கான குப்பை தொட்டிகளும் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா திட்ட நிதியின் கீழ், 4 இயந்திர பெருக்கி வாகனங்கள் 7 வருட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியுடன் ₹5.60 கோடி முதலீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பரவலாக்கப்பட்ட முறைப்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ₹5.35 கோடி மதிப்பீட்டில் 3 மண் புழு உரம் தயாரிக்கும் உரக்கிடங்குகளும், 39 சாதாரண உரம் தயாரிக்கும் கிடங்குகளும், 6 வளங்கள் மீட்பு மையங்கள், 3 திடக்கழிவுகளை நொறுக்கும் இயந்திரம் மற்றும் 8 உயிரி எரிவாயு தயாரிக்கும் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 47 வளங்கள் மீட்பு மையங்கள், 34 உரக்கிடங்குகள் மற்றும் 11 உயிரி எரிவாயு தயாரிக்கும் கலன்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ₹8.26 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் "ஸ்வச்சத்தா செயலி" உருவாக்கப்பட்டு அந்த செயலியின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் சுகாதார சம்பந்தப்பட்ட குறைகள் தீர்வு செய்யப்பட்டு வருகிறது. இது வரை பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட 10,645 முறையீடுகள் நிர்ணயிக்கப்பட்ட 12 மணி நேரத்திற்குள் திறம்பட தீர்க்கப்பட்டுள்ளன. மேலும், இச்செயல்பாடு பெருநகர சென்னை மாநகராட்சியால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

# 4. பேரூராட்சிகளின் இயக்குநரகம்

பேரூராட்சிகள் என்பது, மூன்றாம் அடுக்கு உள்ளாட்சி அமைப்பாகவும், கிராம மற்றும் நகர்ப்புர கூறுகளை கொண்ட உள்ளாட்சி அமைப்பாகவும் உள்ளது. வளர்ந்து வரும் நகர்புர மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்திற்கொண்டு, மேம்பட்ட சேவையினை வழங்கிடவும், பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும் பேரூராட்சிகள் நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

## 4.1 நிர்வாக அமைப்பு

1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் பேரூராட்சிகள் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் மொத்தம் 528 பேரூராட்சிகள் உள்ளன.

| வ.எண் | பேரூராட்சி களின் நிலை | ஆண்டு வருவாய் | பேரூராட்சி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 200 இலட்சத்திற்கு மேல் | 64 |

| வ.எண் | பேரூராட்சி களின் நிலை | ஆண்டு வருவாய் | பேரூராட்சி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2 | தேர்வு நிலை | 100 இலட்சத்திற்கு மேல் 200 இலட்சம் வரை | 202 |
| 3 | முதல் நிலை | 50 இலட்சத்திற்கு மேல் 100 இலட்சம் வரை | 200 |
| 4 | இரண்டாம் நிலை | 50 இலட்சத்திற்குள் | 62 |
| மொத்தம் | | | 528 |

பேரூராட்சிகளின் இயக்குநர் இத்துறையின் தலைவராவர். மொத்தமுள்ள 17 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலமும் ஒரு உதவி இயக்குநரின் தலைமையில் இயங்குகிறது. மேலும் மாவட்டங்களைப் பொறுத்தவரை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் பேரூராட்சிகளின் நிர்வாகம் செயல்பட்டு வருகிறது.

### 4.2 செயல்பாடுகள் மற்றும் முக்கிய சேவைகள்

பேரூராட்சிகள் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள் பராமரித்தல், பொது சுகாதாரம் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் சீரமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகள் மற்றும் இறைச்சிக் கூடங்கள் பராமரித்தல், போன்ற அடிப்படை வசதிகள் வழங்குவதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. மேலும் பேருந்து நிலையங்கள், சமுதாயக் கூடங்கள் மற்றும் சந்தைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிப் பராமரிக்கும் பணிகளையும் பேரூராட்சிகள் மேற்கொள்கின்றன. பேரூராட்சிகள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் மற்றும் வணிக உரிமங்கள் ஆகியவற்றை வழங்குகின்றன. மேலும், சொத்துவரி, தொழில்வரி, கட்டிட அனுமதி அளித்தல் போன்ற வரி மற்றும் வரியில்லா இனங்களை விதித்து வசூலித்து வருகின்றன.

### 4.3 உட்கட்டமைப்பு மேம்பாடு

கிராமப்புரங்களிலிருந்து நகர்ப்புரங்களுக்கு மக்கள் இடம் பெயர்வதால், நகர்ப்புர மக்கள் தொகை பெருகி வருவதன் காரணமாக பேரூராட்சிகளில் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி மேம்படுத்துதல் அவசியமாகிறது. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த நிதி ஆதாரத்தினை உயர்த்தியும், மாநில அரசினால் வழங்கப்படும் மாநில நிதி ஆணையத்தின் நிதிப் பகிர்வின் கீழ் வரும் நிதி ஆதாரத்தினைக் கொண்டும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் நபார்டு கடன் உதவி போன்ற முன்னோடித் திட்டங்களின் மூலமும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.4 ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM)

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்காக,

முன்னோடித் திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தினை மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2011 ஆம் ஆண்டு துவக்கி வைத்தார்கள்.

பேரூராட்சிகளுக்குத் தேவையான அனைத்து வகையான உட்கட்டமைப்பு பணிகளும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாடு, மற்றும் மழைநீர் வடிகால்கள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ₹1309.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 7,174 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 6,952 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 222 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 4.5 குடிநீர் வழங்கல்

அரசு, அனைத்து பேரூராட்சிகளிலும் உள்ள மக்களுக்கு குறைந்தபட்ச அளவான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உறுதி பூண்டுள்ளது. பேரூராட்சிகள் மூலம் 48 தனி குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 323 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளிலும், நாளொன்றிற்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்கு குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

பேரூராட்சிகளில் ஆண்டு வாரியாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு மற்றும் ஆண்டு தோறும் நிலைமைக்கேற்ப கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீர் அளவு பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | பேரூராட்சிகளின் எண்ணிக்கை | குடிநீர் தேவை (மில்லியன் லிட்டரில்) | குடிநீர் விநியோகம் (மில்லியன் லிட்டரில்) | கூடுதலாக வழங்கப்பட்ட குடிநீரின் அளவு (மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 2016-17 | 528 | 602 | 686.00 | 84.00 |
| 2 | 2017-18 | 528 | 611 | 728.00 | 117.00 |

2011-12 முதல் 2017-18 வரை பல்வேறு திட்டங்களின் கீழ், பேரூராட்சிகளில் 9012 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றுள் 8977 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 35 பணிகள் பல்வேறு நிலைகளில் பேரூராட்சிகள் அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயலாக்கத்தில் உள்ளன.

2017 ஆம் ஆண்டில் மாநில பேரிடர் நிவாரண நிதி தலைப்பின் கீழ் ₹16.38 கோடி மதிப்பீட்டில் 1515 பணிகளும் மற்றும் பேரூராட்சிகள் பொது நிதியின் கீழ் ₹26.44 கோடி மதிப்பீட்டில் 1951 பணிகளும் ஆக மொத்தம் ₹42.82 கோடி மதிப்பீட்டில் 3466 குடிநீர் அபிவிருத்தி

பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அனைத்துப்பணிகளும் முடிக்கப்பட்டு உள்ளன.

## 4.6 சுகாதாரம்

### 4.6.1 பாதாள சாக்கடைத் திட்டம்

9 பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் ₹322.76 கோடி மதிப்பீட்டில், எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் மூன்று பேரூராட்சிகளில் ₹41.45 கோடி மதிப்பீட்டில் திட்டங்கள் முழுமையாக பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. திருமழிசை, திருப்பெரும்புதூர், உளுந்தூர்பேட்டை, பெருந்துறை பழனிச்செட்டிப்பட்டி மற்றும் வேளாங்கண்ணி ஆகிய 6 பேரூராட்சிகளில் ₹281.31 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

₹131.29 கோடி மதிப்பீட்டில் பொன்னேரி, திருப்போரூர் பேரூராட்சிகளில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. வல்லம் பேரூராட்சியில்

ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஆய்வில் உள்ளது. மண்ணச்சநல்லூர் மற்றும் எஸ்.கண்ணனூர் ஆகிய பேரூராட்சிகளுக்கு ₹49.56 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடவடிக்கையில் உள்ளது. ஆயக்குடி மற்றும் கன்னியாகுமரி பேரூராட்சியில் கழிவுநீர் சேகரிப்பு மற்றும் உந்துநிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்ய நடவடிக்கையில் உள்ளது.

### 4.6.2 கசடு கழிவு மேலாண்மை

கசடு கழிவு என்பது கழிவுநீர் தொட்டியில் பகுதி சுத்திகரிக்கப்பட்டு, மீதம் தேங்கும் கழிவுகளே ஆகும். இதில் திரவ, திட, கொழுப்பு, எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியன மிகையாக காணப்படும். கசடு கழிவு உற்பத்தியின் அடிப்படையில், முழு செயல்முறை வடிவமைப்பு, சேகரிப்பு, பாதுகாப்பான சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றுதல் ஆகியன கசடு கழிவு மேலாண்மையில்

அடங்கும். குறிப்பிட்ட காலங்களில் நச்சுத் தொட்டியினை சுத்தம் செய்தல், கசடுகளை வாகனத்தின் மூலம் இடமாற்றுதல், சுத்திகரிப்பு, மறு பயன்பாடு மற்றும் வெளியேற்றம் செய்வதற்கு ஓர் ஒருங்கிணைந்த முழுமையான திட்டம் அவசியமாகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கருங்குழி பேரூராட்சியில் ₹5.18 கோடி மதிப்பீட்டில் முன்னோடித் திட்டமாக கசடு கழிவு அகற்றும் மேலாண்மைத் திட்டம் நவீன தொழில்நுட்பத்தில் பணி முடிக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தினை 17 பேரூராட்சிகளில் விரிவுபடுத்திட முடிவு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சியில் ₹2.02 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ்

பவுண்டேசன் என்ற தொண்டு நிறுவனம் மூலம் நடைபெற்று வருகிறது.

### 4.6.3 திறந்தவெளியில் மலம் கழிப்பதை ஒழித்தல்

தமிழகத்தை திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளில் 2,16,523 புதிய தனிநபர் குடியிருப்பு கழிப்பிடம் கட்டுதல், 7,794 சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் மற்றும் 10,604 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை தமிழ்நாடு அரசு மானியம் மற்றும் தூய்மை இந்தியா திட்டத்துடன் சேர்த்து பேரூராட்சிகளில் செயல்படுத்திட இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு 100 % பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

| வ. எண் | பணிகளின் விபரம் | மொத்த இலக்கீடு | முடிவுற்றவை |
|---|---|---|---|
| 1 | தனிநபர் குடியிருப்பு கழிப்பிடம் | 2,16,523 | 2,16,523 |
| 2 | சுகாதாரமற்ற கழிப்பிடத்தினை மாற்றி சுகாதாரமான கழிப்பிடம் கட்டுதல் | 7,794 | 7,794 |
| 3 | சமுதாயக் கழிப்பிடம் (இருக்கைகள்) | 10,604 | 10,604 |

155 பேரூராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக மத்திய அரசின் நகர்புர மேம்பாட்டு அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதர பேரூராட்சிகளையும், திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகரங்களாக அறிவிக்கை செய்திட மத்திய நகர்ப்புர மேம்பாட்டு அமைச்சகத்திற்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 363 பேரூராட்சிகளில் மத்திய அரசின் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. அவை திறந்தவெளியில் மலம்

கழித்தல் இல்லாத நகரங்களாக விரைவில் அறிவிக்கப்படும்.

#### 4.6.3.1 பரப்புரையாளர்கள்

பேரூராட்சிகளை திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லா நகரமாக மாற்றிடவும், குப்பைகள் இல்லாத உள்ளாட்சிகளாக உருவாக்கிடவும், மக்களிடம் மனமாற்றம் ஏற்படுத்திட தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலம் 1382 பரப்புரையாளர்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு பேரூராட்சியிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர். மேலும் பரப்புரையாளர்களின் திறனை மேம்படுத்திட அனைத்து பரப்புரையாளர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி பேரூராட்சிகளின் இயக்ககம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 4.7 சாலைகள்

பல்வேறு வகையிலான சாலைகள் பேரூராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மொத்த சாலைகளின் நீளம் கீழ்வருமாறு :-

| வ. எண் | வகைபாடு | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | தார் சாலைகள் | 11,861 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 5,413 |
| 3 | சிமெண்ட் கற்சாலைகள் ( Paver block ) | 1,269 |
| 4 | கருங்கல் ஜல்லி சாலை | 941 |
| 5 | செம்மண் சாலை | 368 |
| 6 | மண் சாலை | 4,891 |
| **மொத்தம்** | | **24,743** |

பேரூராட்சிகளில் 2011-12 முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களின் கீழ் ₹2022.79 கோடி ஒதுக்கீட்டில், 5915 சாலைப் பணிகள் 6296 கி.மீ நீளத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அதில் 5527 பணிகள் 5652 கி.மீ நீளத்திற்கு முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. எஞ்சிய 388 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.7.1 தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) - ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி – (RIDF)

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ் 2626 சாலை மேம்பாடு

பணிகள் ₹891.51 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 2491 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 135 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (₹ கோடியில்) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2016-17 | 2459 | 761.51 | அனைத்து பணிகளும் முடிக்கப் பட்டுள்ளன. |
| 2 | 2017-18 | 167 | 130.00 | 167 பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, 32 பணிகள் முடிக்கப் பட்டு, எஞ்சிய 135 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. |
| **மொத்தம்** | | **2626** | **891.51** | |

## 4.7.2 தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்புத் திட்டம் (TURIP)

தமிழ்நாடு நகர்ப்புர சாலை கட்டமைப்பு திட்டத்தின் கீழ், உலக தரத்திற்கு நகர்ப்புர சாலைகளை உயர்த்தும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டிலிருந்து, பேரூராட்சிகளில் சாலைகள் மேம்படுத்தப்படுவதுடன் கூடுதலாக மழைநீர் வடிகால் வசதி மற்றும் நடைபாதை வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2011-2012 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் 1771 எண்ணிக்கையிலான சாலை மேம்பாட்டுப் பணிகள், மொத்தம் 1718 கி.மீ. நீளத்திற்கு ₹469.16 கோடி மதிப்பீட்டில் எடுத்துகொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 1627 பணிகள் 1527 கி.மீட்டர் நீளத்திற்கு முடிவுற்று, எஞ்சிய 144 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (₹ கோடியில்) | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2016-17 | 1562 | 391.91 | 1438.86 |
| 2 | 2017-18 | 209 | 77.25 | 279.54 |
| மொத்தம் | | 1771 | 469.16 | 1718.40 |

### 4.8 திடக்கழிவு மேலாண்மை

ஒவ்வொரு தனிநபர் மூலமும் தினமும் சராசரியாக 250 கிராம் முதல் 300 கிராம் வரை குப்பைகள் உருவாகின்றன. 528 பேரூராட்சிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 2100 மெட்ரிக் டன் குப்பைகள் உருவாகின்றன.

இவற்றில், மக்கும் குப்பைகள் 966 மெட்ரிக் டன், மக்காத குப்பைகள் 747 மெட்ரிக் டன், வடிகால் மற்றும் இதர மண் கழிவுகள் 387 மெட்ரிக் டன் ஆகும்.

6686 பேரூராட்சி சுகாதார பணியாளர்களும், 10,759 சுய உதவிக் குழு உறுப்பினர்களும், குப்பைகளை சேகரிப்பதற்கும், தரம் பிரிப்பதற்கும், தெருக்களை சுத்தம் செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டு பேரூராட்சிகளில், திடக்கழிவு மேலாண்மை சீரிய முறையில் செயல்படுத்தப்படுகிறது.

#### 4.8.1 இயற்கை / மண்புழு உரமாக்குதல்

தற்பொழுது 501 பேரூராட்சிகளில் நாள்தோறும் 107.26 மெட்ரிக் டன் அளவிற்கு இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இயற்கை உரத்தினை விற்பதன் மூலம் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ₹39.42 இலட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது. தற்போதைய நிலையில் 1314 மெட்ரிக் டன் அளவில் இயற்கை உரம் இருப்பில் உள்ளது.

இத்துடன் மண்புழு உரம் தயாரிக்கும் பணி 188 பேரூராட்சிகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாள்தோறும் 16.21 மெட்ரிக் டன் அளவிற்கு மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மண்புழு உரத்தினை விற்பதன் மூலம் பேரூராட்சிகளில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ₹10.29 இலட்சம் வருமானம் ஈட்டப்படுகிறது.

### 4.8.2 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம்

2013-14 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆண்டு வரை, ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளில் வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், வளம் மீட்பு பூங்காவிற்கு எடுத்துச் செல்லுதல், உரமாக்குதல், தகவல், கல்வி மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகள் பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளவாறு மேற் கொள்ளப்பட்டுள்ளன:-

| வ. எ ண் | வருடம் | பேரூராட்சி களின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ கோடியில்) | எடுத்துக் கொள்ளப் பட்ட பணிகள் |
|---|---|---|---|---|
| 1 | 2013-14 | 77 | 48.57 | 794 |
| 2 | 2014-15 | 214 | 54.57 | 1058 |
| 3 | 2015-16 | 104 | 53.75 | 530 |
| 4 | 2017-18 | 249 | 52.20 | 774 |
| | மொத்தம் | | 209.09 | 3156 |

### 4.8.3 உயிரி எரிவாயு

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 5 பேரூராட்சிகளில், ₹1.00 கோடி மதிப்பீட்டில் (ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ₹20.00 இலட்சம் வீதம்) காய்கறி கழிவு மற்றும் உணவுக் கழிவிலிருந்து, உயிரி எரிவாயு கலன் மூலம் எரிவாயு தயாரிக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இவை தவிர கூடுதலாக 11 பேரூராட்சிகளில் சிறிய அளவிலான உயிரி எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

## 4.9 உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி / மூலதன மானிய நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, இத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2016-17 ஆம் ஆண்டு வரை உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி திட்டத்தின் கீழ் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல், குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், இறைச்சிக் கூடம், நவீன எரிவாயு தகனமேடை, சமுதாயக் கூடம் மற்றும் சந்தை அமைத்தல், பேருந்து நிலைய மேம்பாடு, மயான மேம்பாடு மற்றும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்களுக்கான பேரூராட்சி பங்குத் தொகை செலுத்துதல் உள்ளிட்ட 805 பணிகள் ₹327.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் 794 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2017-18 ஆம் ஆண்டில் மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் 79 பணிகள் ₹176.67 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2016-17 வரை | 805 | 327.30 |
| 2 | 2017-18 | 79 | 176.67 |
| | மொத்தம் | 884 | 503.97 |

### 4.10 இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளிநிரப்பும் நிதி

பேரூராட்சிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பதில் ஏற்படும் நிதி இடைவெளியை நிரப்புவதற்கு, மாநில நிதி பகிர்வு மானியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2011-12 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ் 694 பணிகள் ₹184.63 கோடி ஒதுக்கீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 603 பணிகள்

முடிக்கப்பட்டு, எஞ்சிய 91 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

| வ. எண் | ஆண்டு | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | 2011-12 முதல் 2015-16 வரை | 603 | 125.74 |
| 2 | 2017-18 | 91 | 58.89 |
| | மொத்தம் | 694 | 184.63 |

**4.11 14-வது மத்திய நிதி குழு மானியம்**

பேரூராட்சிகளுக்கு 2015-2016 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை பதினான்காவது நிதிக்குழு மானியம் ஆண்டு தோறும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த ஒதுக்கீடு, அடிப்படை மானியம் மற்றும் செயல்திறன் மானியம் என இரண்டு கூறுகளாக வழங்கப்படும். 2015-2016 ஆம் ஆண்டு, அடிப்படை மானியமாக ₹229.11 கோடி ஒதுக்கப்பட்டு, அத்தொகை இரு தவணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளது. அதே போன்று 2016-17ம் ஆண்டு அடிப்படை மானியம் ₹317.25 கோடி இரு

தவணைகளாகவும் மற்றும் செயல்திறன் மானியம் ₹93.63 கோடியும் விடுவிக்கப்பட்டுள்ளன. அதே போன்று 2017-18 ஆண்டு அடிப்படை மானியம் ₹391.82 கோடி ஒதுக்கப்பட்டு முதல் தவணையாக பேரூராட்சிகளுக்கு ₹183.27 கோடி விடுவிக்கப்பட்டும், செயல்திறன் மானியம் ₹ 113.267 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டும் உள்ளன. மேற்படி மானியத் தொகை குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டடக்ளுக்கான பங்குத் தொகை, மின் வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்துதல், குடிநீர் கட்டணம் செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிகள், சாலைகள் மற்றும் நடைபாதைகள் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல், பூங்காக்களை மேம்படுத்துதல், போன்றவற்றிக்குப் பயன்படுத்தப் படுகிறது.

### 4.12 மழைநீர் சேகரிப்பு

2001 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டமானது, நிலத்தடி நீரை செறிவூட்டுவதில்,

குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 215 (a) மற்றும் 1973-ஆம் ஆண்டு கட்டட விதிகளில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின் மூலம், அனைத்து புதிய கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டு உள்ளது. மேற்படி திட்டத்தின் பயனை ஒருங்கிணைக்க, புதிதாக ஏற்படுத்தப்படும் கட்டமைப்புகள் தவிர, தனியார் மற்றும் பொதுக் கட்டடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேரூராட்சிகளில், இத்திட்டத்தினை தொய்வின்றி உத்வேகப்படுத்திட அனைவருக்கும் இது தொடர்பான செய்தி, கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ் கீழ்கண்டவாறு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண். | கட்டடத்தின் வகைப்பாடு | கட்டடங் களின் எண்ணிக்கை | மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட கட்டடங்கள் |
|---|---|---|---|
| 1. | அரசுக் கட்டடங்கள் | 24,226 | 23,926 |
| 2. | குடியிருப்புக் கட்டடங்கள் | 24,47,555 | 23,81,066 |
| 3. | வணிகக் கட்டடங்கள் | 1,54,800 | 1,53,221 |
| 4. | தொழிற்சாலைக் கட்டடங்கள் | 11,932 | 11,932 |
| மொத்தம் | | 26,38,513 | 25,70,145 |

பேரூராட்சிகளில் மொத்தமுள்ள 1,916 நீர்நிலைகளில் 1,215 நீர்நிலைகள் பல்வேறு திட்டங்களின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

### 4.13 துணை நகரம்

துணை நகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெருநகர இணைப்புகளில் ஏற்படும் நெரிசலை குறைப்பது மற்றும் துணை நகரங்களில் அவர்களை நிலை நிறுத்துவது ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதற்கென மின்னாற்றல் தணிக்கை, குடிநீர் தணிக்கை, செலவு

குறைந்த தொழிற்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இயக்கம் & பராமரிப்பதில் மேம்பட்ட திறன் வளர்ப்பு போன்ற சீர்திருத்தங்களை துணை நகரங்களில் மேற்கொள்ள இத்திட்டம் வழி வகை செய்கிறது. வீட்டு மனைகளில் 10 முதல் 15 விழுக்காடு வரை நகர்ப்புர ஏழை மக்களுக்கு ஒதுக்குவதும், உள்ளாட்சி அமைப்புகள் அளவில் மாற்றங்களைக் கொண்டு வருவதும் இத்திட்டத்தின் பிற நோக்கங்களாகும். இத்திட்டத்தின் கீழ் திருப்பெரும்புதூர் பேரூராட்சியில் குடிநீர், பாதாள சாக்கடை மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய மூன்று திட்டப்பணிகள் ₹123.75 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

| வ. எண். | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) | பணிகளின் முன்னேற்ற நிலை |
|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள் | 4.44 | பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. |
| 2. | ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் | 42.20 | பணிகள் செப்டம்பர் 2018-க்குள் முடிக்கப்படும் |
| 3. | ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் | 77.11 | பணிகள் செப்டம்பர் 2018-க்குள் முடிக்கப்படும் |
| மொத்தம் | | 123.75 | |

## 4.14 அனைவருக்கும் வீடு வழங்கும் நகர்ப்புர திட்டம்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்கு திட்டம் 2023-ல் குடிசை இல்லா நகரங்கள் என்ற உயர்ந்த இலட்சியத் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, பசுமை வீடுகள் திட்டத்தினை பேரூராட்சிகளில் செயல்படுத்தும் விதமாக, பொருளாதார ரீதியாக நலிவுற்ற நிலையில் வாழும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பசுமை வீடுகளாக மாற்றுவதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்தது. மத்திய அரசின் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்துடன் இத்திட்டம் இணைக்கப்பட்டு, நாளது வரை 1,34,283 தகுதி வாய்ந்த பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு பயனாளிகளுக்கு தலா ₹2.10 இலட்சம் நிதியுதவியுடன் (மத்திய அரசு மானியம் ₹1.50 இலட்சம் மற்றும் மாநில அரசு மானியம் ₹ 0.60 இலட்சம்) வீடுகள் கட்டப்பட்ட மத்திய கண்காணிப்பு

மற்றும் ஒப்புதல் அளிக்கும் குழு ₹2819.94 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மாநில அளவிலான திட்ட முகமையாகும். இத்திட்டத்தின் கீழ் நாளது வரை 16,882 பணிகள் முடிக்கப்பட்டு, எஞ்சிய 1,17,401 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

### 4.15 தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (NULM)

தீன் தயாள் அந்யோதயா யோஜனா – தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தினை பேரூராட்சிகளில் செயல்படுத்திடும் விதமாக 2017–2018–ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் வீரவநல்லூர் பேரூராட்சியில் வீடற்ற நகர்ப்புற ஏழைகள் தங்குமிடம் ஒன்றும் சிட்லபாக்கம், பொன்னேரி, நாட்றாம்பள்ளி, போளூர், பர்கூர், தேன்கனிக்கோட்டை மற்றும் ஊத்தங்கரை ஆகிய 7 பேரூராட்சிகளில் அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளுக்கான உதவியாளர்கள் தங்குவதற்கு

சிறப்பு தங்குமிடங்களும் ₹5.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

### 4.16 தெரு விளக்குகள்

பேரூராட்சிகளில், 1357 உயர்கோபுர விளக்குகள், 3093 மெர்க்குரி விளக்குகள், 34,540 சோடியம் விளக்குகள், 2,54,249 குழல் விளக்குகள், 1,00,263 சி.எப்.எல் விளக்குகள் 3,183 சோலார் விளக்குகள் மற்றும் 42,658 ஆற்றல் மிகு தெரு மின்விளக்குகள் (எல்.இ.டி) உள்ளிட்ட 4,39,343 தெருவிளக்குகள் பராமரிக்கப்படுகின்றன. அனைத்து தெரு விளக்குகளையும் ஆற்றல் மிகு மின்விளக்குகளாக (எல்.இ.டி) படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 4.17 சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் (ஸ்வதேஷ் தர்சன்)

மத்திய அரசு நிதி உதவியுடன் சுற்றுலா மேம்பாட்டு ("ஸ்வதேஷ் தர்சன் ") திட்டத்தின் கீழ் ₹11.21 கோடி தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி கன்னியாகுமரி

பேரூராட்சியில் 9 பணிகளும், கணபதிபுரம் பேரூராட்சியில் 4 பணிகளும் எடுக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளன.

**4.18 சென்னை நதி மறு சீரமைப்பு அறக்கட்டளை (CRRT)**

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட பேரூராட்சி பகுதிகளில் செல்லும் அடையாறு ஆற்றில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-1) துறை, நாள்.12.07.2017-ன்படி குன்றத்தூர், பெருங்களத்தூர் மற்றும் திருநீர்மலை பேரூராட்சிகளுக்கு ₹41.73 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளன.

**4.19 புராதான நகர மேம்பாட்டு திட்டம் (HRIDAY)**

மத்திய அரசின் நிதி உதவியுடன் புரதான நகர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணி பேரூராட்சியில் ₹20.00 கோடி

மதிப்பீட்டிலான வளர்ச்சிப்பணிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதைத் தொடந்து முதற்கட்டமாக ஒப்புதல் வழங்கப்பட்ட ₹97.00 லட்சம் மதிப்பீட்டில், 3 பணிகள் முதலாவதாக எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக ₹10.37 கோடி மதிப்பிலான 12 திட்டப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் இரண்டாம் கட்டமாக ஒப்புதல் வழங்கப்பட்ட ₹8.66 கோடி மதிப்பீட்டில் 8 திட்டப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 4.20 விருது

பேரூராட்சிகளில் சுகாதாரம், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, தெருவிளக்குகளைப் பராமரித்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிப் பணிகளை சிறப்புடன் செயல்படுத்தும் பேரூராட்சிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், மூன்று சிறந்த பேரூராட்சிகளுக்கான விருதுகளை அரசு

ஏற்படுத்தியுள்ளது. இதற்கான விருது தொகை முறையே ₹10.00 லட்சம், ₹5.00 லட்சம் மற்றும் ₹3.00 லட்சம் ஆகும்.

2016-2017 ஆண்டிற்கான முதல் மூன்று பரிசுகள் முறையே திருச்சிராப்பள்ளி மாவட்டம் பொன்னம்பட்டி பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம் இருகூர் பேரூராட்சி மற்றும் ஈரோடு மாவட்டம் நம்பியூர் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டன.

# 5. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது, 1978-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. சென்னைக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வாரிய சட்டத்தின்படி இவ்வாரியமானது சென்னைப் பெருநகர் பகுதியின் தேவைக்கேற்ப பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் ஆகிய பணிகளை செய்து வருகின்றது. இப்பணிகளை செயல்படுத்துவதற்காக சென்னை குடிநீர் வாரியம் இருக்கும் ஆதாரங்களைக் கொண்டும் புதிய ஆதாரங்களை உருவாக்கியும் திட்டமிடப்பட்ட குடிநீர் வழங்கல் மேம்பாட்டு பணிகளையும் கழிவுநீரகற்றல் சுத்திகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டும் பராமரித்தும் வருகின்றது.

தற்சமயம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், 200 பணிமனைகள் வாயிலாக 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் 74.38 இலட்சம் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவு நீரகற்றும் பணிகளை வழங்கி வருகிறது. மேலும்

அருகாமையிலுள்ள சில உள்ளாட்சி அமைப்புகளுக்கும், பெரு நுகர்வு தொழிற்சாலைகளுக்கும் குடிநீர் வழங்கும் சேவையை செய்து வருகிறது.

### 5.1 சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

நில மேற்பரப்பு நீர், கடல் நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர் மூலம் சென்னை மாநகரின் குடிநீர் தேவையானது பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

#### 5.1.1 நில மேற்பரப்பு நீர் ஆதாரங்கள்

சென்னைக்கு அருகாமையிலுள்ள பூண்டி, சோழவரம், புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்தும், கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து 2004-ஆம் ஆண்டு முதல் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீரும் மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவற்றிலிருந்து நில மேற்பரப்பு நீர் பெறப்படுகிறது.

ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி சென்னையின் குடிநீர்

தேவைக்கு ஆந்திரபிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீர் ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் பெறப்பட வேண்டும். முந்தைய வருடங்களில் அதிக பட்சமாக ஓராண்டில் (2011-12) 8.2 ஆயிரம் மில்லியன் கன அடி வரை மட்டுமே நீர் கிடைக்கப் பெற்றது. 2017-18 ஆம் ஆண்டில், பெறப்பட்ட நீரின் அளவு 2.22 ஆயிரம் மில்லியன் கன அடி ஆகும்.

**சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள்**

| வ. எண் | நீர்த்தேக்கங்கள் | மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்) |
|---|---|---|
| 1 | பூண்டி | 3,231 |
| 2 | செங்குன்றம் (புழல்) | 3,300 |
| 3 | செம்பரம்பாக்கம் | 3,645 |
| 4 | சோழவரம் | 1081* |
| 5 | வீராணம் | 1,465 |
| மொத்தம் | | 12,722 |

*சோழவரம் நீர் தேக்கத்தினுடைய கரையின் உயரத்தை 1 அடி உயர்த்தியதன் மூலம் கடந்த வருடங்களை விட நீரின் சேகரிப்பு அளவு 200 மில்லியன் கன அடி உயர்த்தப்பட்டுள்ளது.

**சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு**

| வருடம் | மழையின் அளவு (மி.மீ) | | வித்தியாசம் % |
|---|---|---|---|
| | இயல்பான அளவு (30 வருட சராசரி) | பெய்த அளவு | |
| 2012 | 1293.42 | 981.80 | -24.09 |
| 2013 | 1297.50 | 1064.87 | -17.93 |
| 2014 | 1286.21 | 1025.80 | -20.25 |
| 2015 | 1273.17 | 2155.23 | +69.28 |
| 2016 | 1308.05 | 837.00 | -36.03 |
| 2017 | 1305.82 | 1388.00 | +6.30 |

### 5.1.2 கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

சென்னை மாநகரம் தனது நில மேற்பரப்பு நீர் சேகரிப்பிற்கு பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை பொய்க்கும்பொழுது நீர்த்தேக்கங்களுக்கு

கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்படுவதனால் சென்னை நகரில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு வளர்ந்து வரும் சென்னை மாநகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய 2003-04 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்கு பார்வை கொண்டு மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை அமைப்பதாக அறிவித்தார்கள். அவ்வாறே அரசு நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் முதல் நிலையத்தினை மீஞ்சூரில் நிறுவியது. இதன் தொடர்ச்சியாக நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையத்தினை நெம்மேலியில் நிறுவி இயக்கி வருவதன் மூலம் சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தில் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

### 5.1.2.1 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் - மீஞ்சூர்

மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் (DBOOT) ஜூலை 2010 முதல் இயங்கி வருவதால் வட சென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளில் உள்ள சுமார் 12 இலட்சம் மக்கள் பயன்பெறுகிறார்கள்.

### 5.1.2.2 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் - நெம்மேலி

நெம்மேலியில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் மற்றொரு நிலையம் ₹805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன்

அமைக்கப்பட்டு மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 22.02.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டு இயங்கி வருகிறது. 2017-2018ஆம் ஆண்டில் இந்நிலையத்தின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளிலுள்ள சுமார் 7 இலட்சம் மக்கள் பயனடைகிறார்கள்.

2012-2014 மற்றும் 2016-2017 ஆண்டுகளில், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாத நிலையில் கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை சார்ந்து இருக்க வேண்டிய

சூழ்நிலை அதிகரித்ததுடன் நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தன.

### 5.1.3 நிலத்தடி நீர்

தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் நெய்வேலி ஆகிய நிலத்தடி நீராதாரங்களில் இருந்து சுமார் நாளொன்றுக்கு 65 மில்லியன் லிட்டர் வரை குடிநீர் எடுக்கப்படுகின்றது.

### 5.1.4 குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னைக் குடிநீர் வாரியம், நாளொன்றுக்கு 1504 மில்லியன் லிட்டர் சுத்தரிக்கும் திறன் கொண்ட கீழ்ப்பாக்கம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், சூரப்பட்டு மற்றும் வடக்குத்து ஆகிய இடங்களிலுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் மூலம் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கி வருகிறது.

1978-ல் வாரியம் துவங்கப்பட்டபொழுது பயன்பாட்டில் இருந்த குடிநீர் வழங்குதல் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தற்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளன. இதன் விளைவாக 1978ல் இருந்த நுகர்வோரின் எண்ணிக்கையான 1,16,000 தற்பொழுது 7,05,091 ஆக உயர்ந்துள்ளது. 2017-2018ஆம் ஆண்டில் 11,057 புதிய வீட்டு குடிநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டுள்ளன.

**5.2. குடிநீர் வழங்கல் - புதிய திட்டங்கள்**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு, குடிநீர் வழங்கும் பொருட்டு சென்னைக் குடிநீர் வாரியமானது பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

திருவொற்றியூர், கத்திவாக்கம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ஆலந்தூர், மீனம்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், நந்தம்பாக்கம், நொளம்பூர் மற்றும் காரம்பாக்கம் போன்ற புதிதாக இணைக்கப்பட்ட

12 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன. இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மணலி, சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், சின்னசேக்காடு, மாதவரம், ராமாபுரம், மணப்பாக்கம், முகலிவாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய புதிதாக இணைக்கப்பட்ட 23 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாத்தூர், ஜல்லடம்பேட்டை, மடிப்பாக்கம், உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் நெற்குன்றத்தில் முடிக்கப்படாத பணிகளுக்கும் ஒப்பந்தம் கோரப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன. நீலாங்கரை, செம்மஞ்சேரி ஆகிய பகுதிகளில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

### 5.2.1 சென்னை, கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்.

மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், சட்டப் பேரவையில் விதி எண் 110ன் கீழ் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மற்றுமொரு கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் நெம்மேலியில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் அதன் திட்ட மதிப்பீடான ₹1259.38 கோடியை அம்ரூட் (AMRUT) திட்டத்தின் கீழ் மானியமாகவும், ஜெர்மானிய நிதி நிறுவனத்திடமிருந்து (KfW) கடனுதவியாகவும் பெற்று செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன. இந்நிலையத்தை செயல்படுத்த, கடல்சார் ஒழுங்குமுறை ஆணையத்தின் தடையின்மை சான்றிதழ் வழங்கிட, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும்

பருவ மாற்றங்கள் அமைச்சகத்தின் வல்லுனர் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீரால் தென் சென்னை பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் தகவல் தொழில் நுட்ப பூங்கா பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவர்.

**5.2.2 சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்**

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தென் சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்

அமைக்கப்படும் என்று விதி எண் 110ன் கீழ் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற அமைச்சகத்தின் கீழ் வரும் மத்திய பொது சுகாதாரப் பொறியியல் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பானது (CPHEEO) ₹3912.20 கோடிக்கு இத்திட்டத்திற்கான திருத்திய விரிவான திட்ட அறிக்கையை மதிப்பீடு செய்தது. இதனிடையில் அக்டோபர் 2017ல் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) இத்திட்டத்திற்கு ₹6078.40 கோடி மதிப்பில் திருத்திய மதிப்பீடு அளித்துள்ளது. இத்தொகையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை ₹4267.70 கோடி மதிப்பிற்கு முழு நிதியுதவி வழங்க இசைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக முதல் தவணையாக ₹1744 கோடி மதிப்பிற்கு கடன் ஒப்பந்த பத்திரத்தில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, இந்திய அரசுடன் 29.03.2018 அன்று கையெழுத்திட்டுள்ளது. மீதித் தொகையான ₹1810.70 கோடி தமிழக அரசால் வழங்கப்படும். இந்நிலையத்தை செயல்படுத்த, கடல்சார் ஒழுங்குமுறை

ஆணையத்தின் தடையின்மை சான்றிதழ் வழங்கிட, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவமாற்றங்கள் அமைச்சகத்தின் வல்லுனர் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் குடிநீர் சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தாம்பரம், பல்லாவரம், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பீர்க்கண்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, குன்றத்தூர், காட்டங்குளத்தூர் மற்றும் மாங்காடு ஆகிய பகுதிகளில் வசிக்கும் சுமார் 22.67 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட உள்ளது.

### 5.2.3 செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதித்தல்

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு வழங்க ஏதுவாக 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, ₹43.75 கோடி

மதிப்பீட்டில் செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2018க்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.2.4 புதியதாக அமைக்கப்பட்டு வரும் கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி**

புதிதாக அமைக்கப்பட்டுவரும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ நீளத்திற்கு 900 மி.மீ விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ₹93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் செப்டம்பர் 2018–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.5 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (CMCDM) குடிநீர் திட்டப் பணிகள்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சென்னை மாநகரின் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தவும் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2011-12 ஆண்டு ₹56.50 கோடி திட்ட மதிப்பீட்டில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல், புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் மற்றும் அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. 2012-13ஆம் ஆண்டு ₹66.86 கோடி திட்ட மதிப்பீட்டில் நொளம்பூர், நந்தம்பாக்கம், காரம்பாக்கம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் போன்ற பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகள்

முடிவுற்றன. இராமாபுரம், மணப்பாக்கம் ஒக்கியம்-துரைபாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர்- காரப்பாக்கம் ஆகிய பகுதிகளில் ₹125.16 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளும் மார்ச் 2019க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2013-14ஆம் ஆண்டு ₹335.34 கோடி திட்ட மதிப்பீட்டில் சடையான்குப்பம், இடையான்சாவடி, கடப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, வடபெரும்பாக்கம், தீயம்பாக்கம், கொட்டிவாக்கம், பெருங்குடி, பாலவாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், பள்ளிக்கரணை மற்றும் முகலிவாக்கம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் செப்டம்பர் 2018 க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.6. இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள்

ஆவடி, அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் திருப்பெரும்புதூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் ₹160.01 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வரும் குடிநீர்

திட்டப் பணிகள் மார்ச் 2019 க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.7 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) கீழ் குடிநீர் திட்டப் பணிகள்

மாதவரம் பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்ட பணிகள் ₹55 கோடி மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் ஆகஸ்ட் 2018 க்குள் முடிவடையும்.

### 5.2.8 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-III (TNUDP-III) ன்கீழ் குடிநீர் திட்டப் பணிகள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்-IIIன் கீழ் பம்மல் மற்றும் பல்லாவரம் பகுதிகளில் ₹143.05 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்டப் பணிகள் செப்டம்பர் 2018 க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5.2.9 உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியின் (I&AF) கீழ் சென்னை மாநகரில் பழுதடைந்த குடிநீர் விநியோக குழாய்களை மாற்றி அமைக்கும் திட்டம்**

சென்னை மாநகரின் பிரதான பகுதிகளில் 30 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான குடிநீர் குழாய்கள் 914 கிலோமீட்டர் நீளத்திற்கு கண்டறியப்பட்டுள்ளன. இக்குடிநீர் குழாய்கள் பல்வேறு திட்டத்தின் கீழ் படிப்படியாக புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரின் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், பழமையான குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் பதிக்கும் பணிகள், குடிநீர் கொண்டு செல்லும் புதிய பிரதான குழாய்கள் மற்றும் விடுபட்ட தெருக்களுக்கு புதிய குழாய்கள் பதிக்கும் பணிகள் என 310 கி.மீ. நீளத்திற்கு ₹116.04 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு நடைபெற்று வரும் இப்பணிகள் ஜூலை 2018ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 5.3 கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சென்னை மாநகரில் கழிவு நீர் சேகரித்தல், சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை செய்து வருகிறது. கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடி ஆகிய பகுதிகளிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும்.

சென்னை மாநகரின் கழிவுநீர் கட்டமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, தனி மண்டல சேகரிப்பு அமைப்புகளாக உள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் 4500 கி.மீட்டர் நீளம் கொண்டதாகும். குடியிருப்புகளிலிருந்தும், பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 253 கழிவுநீரேற்றும் நிலையங்களின் மூலம்

சேகரிக்கப்பட்டு 12 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு மறு பயன்பாட்டிற்கும் மீதம் உள்ள சுத்திகரிக்கப்பட்ட நீர் பாதுகாப்பாக வெளியேற்றப்படுகின்றது.

### 5.3.1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்

சென்னை குடிநீர் வாரியம் நெசப்பாக்கம் (3 அலகுகள்), கொடுங்கையூர் (3 அலகுகள்) கோயம்பேடு (3 அலகுகள்) மற்றும் பெருங்குடி (3 அலகுகள் ) ஆகிய இடங்களில் மொத்தமாக நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை கொண்டு உள்ளது.

### 5.3. 2 கட்டுமானத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

திருவொற்றியூர், சோழிங்கநல்லூர்-I மற்றும் சோழிங்கநல்லூர்-II ஆகிய இடங்களில் ₹126.01 கோடி திட்ட மதிப்பீட்டில் மொத்தமாக நாளொன்றுக்கு 103 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு

நிலையங்களின் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளும் ஜனவரி 2019 க்குள் முடிக்கப்படும்.

### 5.3.3. கழிவுநீர் இணைப்புகள்

1978ல் வாரியம் துவங்கப்பட்ட பொழுது பயன்பாட்டில் இருந்த கழிவு நீரகற்றல் அமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தற்பொழுது பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக 1978ல் இருந்த நுகர்வோர்களின் எண்ணிக்கையான 1,14,000 தற்பொழுது 8,43,623 ஆக உயர்ந்துள்ளது. 2017-2018ஆம் ஆண்டில் 11,961 புதிய வீட்டு கழிவுநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

### 5.4 கழிவுநீர் அகற்றுதல் - புதிய திட்டங்கள்

சென்னை மாநகருடன் இணைக்கப்பட்ட 42 பகுதி வாழ் மக்களின் வாழ்க்கை தரம், சுற்று சூழல் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றினை, சென்னை மாநகருக்கு இணையாக மேம்படுத்த பாதாள சாக்கடை திட்டங்களை

சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள சென்னை குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிதியின் கீழ் சென்னை பெருநகர மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், மீனம்பாக்கம், மதுரவாயல் மற்றும் நொளம்பூர் ஆகிய 6 பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள் முடிவுற்றுள்ளன.

திருவொற்றியூர், கத்திவாக்கம், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, அம்பத்தூர், போரூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ராமாபுரம், பெருங்குடி, சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகிய 13 பகுதிகளில் பாதாள சாக்கடைதிட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நெற்குன்றம், முகலிவாக்கம், மணலி, சின்னசேக்காடு, மணப்பாக்கம் மற்றும் காரம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கான

பாதாளசாக்கடை திட்டப் பணிகளுக்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வில் உள்ளன.

### 5.4.1 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் (CMCDM) கீழ் கழிவு நீரகற்று பணிகள்

இடையான்சாவடி, சடையன்குப்பம், கடப்பாக்கம், ஒக்கியம்-துரைப்பாக்கம் ஆகிய 4 பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத்திட்டத்திற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இணைக்கப்பட்ட 13 பகுதிகளான புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, ஜல்லடம்பேட்டை மற்றும் ஈஞ்சம்பாக்கம் ஆகிய பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2011-12ஆம் ஆண்டில் ₹96.05 கோடி திட்ட மதிப்பீட்டில் கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையே உந்து குழாய் பதித்தல், கழிவுநீரேற்று நிலையங்களுக்கு உந்து குழாய்களை பெரிதாக்குதல், முகப்பேரில் பாதாள சாக்கடை கட்டமைப்பில் நுழைவு

வாயில்கள் அமைத்தல், நீர்மூழ்கி மின் இயந்திரத்துடன் கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல், தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவுநீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல், கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல், கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொள்ள இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. வேளச்சேரி பகுதியில் பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் அதன் தொடர்புப் பணிகள் ₹36.55 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஜூலை 2018-க்குள் முடிக்கப்படும்.

2012-13ஆம் ஆண்டு ₹15.20 கோடி திட்ட மதிப்பீட்டில் கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளன. மேலும், கத்திவாக்கம், சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் மற்றும் இராமாபுரம் ஆகிய பகுதிகளில் ₹245.55 கோடி திட்ட

மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அக்டோபர் 2018 க்குள் முடிக்கப்படும்.

2013-14ஆம் ஆண்டு ₹34.52 கோடி திட்ட மதிப்பீட்டில் திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) மற்றும் நொளம்பூர் பகுதியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்றன. சூரப்பட்டு, புத்தகரம் மற்றும் கதிர்வேடு ஆகிய பகுதிகளில் ₹95.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் அனைத்தும் ஆகஸ்ட் 2018 க்குள் முடிக்கப்படும். முகலிவாக்கம் பகுதிக்கு ₹75.24 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த புள்ளி பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது.

### 5.4.2 இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள்

திருமழிசை பேரூராட்சியில் ₹20.47 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளும்

முடிவுற்றன. ஆவடி நகராட்சியில் ₹158.05 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கழிவுநீர் சேகரிப்பு திட்டப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2018-க்குள் முடிக்கப்படும். மேலும், தாம்பரம் நகராட்சி மற்றும் திருப்பெரும்புதூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் ரூ. 238.08 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் டிசம்பர் 2018க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.4.3 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் III - (TNUDP-III) –ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் IIIன் கீழ் மாதவரம், அம்பத்தூர் ( பகுதி –I) ஆகிய பகுதிகளில் ₹115.97 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவடைந்தது. திருவொற்றியூர் பாதாள சாக்கடைத் திட்ட பணிகள் ₹87.63 கோடி மதிப்பீட்டில்

மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் ஜூலை 2018-க்குள் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**5.4.4. தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட கூடுதல் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம்**

விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகரத்தின் தெற்கு பகுதிகளிலிருந்து பெறப்படும் கழிவுநீரை நவீன தொழிநுட்பத்தில் சுத்திகரிப்பு செய்வதற்கு, சோழிங்கநல்லூரில் கூடுதலாக நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மின்சாரம் தயாரிக்கும் வசதியுடன் கூடிய புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ₹65.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் அனைத்தும் ஜனவரி 2019ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**5.4.5 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரமயமாக்குதல்**

மனித கழிவுகளை மனிதனே அகற்றும் நிலையினை ஒழிக்க சென்னை மாநகரின் கழிவுநீர் அகற்றும்

அமைப்பை சுத்தம் செய்யும் பணிகளை ஆட்கள் மேற்கொள்வதை தவிர்க்க இயந்திரமயமாக்கலுக்கு 112 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 245 தூர்வாரும் இயந்திரங்கள், 30 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சு இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக உறிஞ்சு இயந்திரங்கள் ஆகியவைகொள்முதல் செய்யப்பட்டு கழிவு நீர் அமைப்பினை சிறப்பான முறையில் பராமரித்திட வகை செய்யப்பட்டுள்ளது.

**5.4.6 கழிவு நீரகற்ற முன்தடுப்பு பராமரிப்பு பணிகள்**

சென்னைக் குடிநீர் வாரியம், நுகர்வோரின் பயன்பாட்டிற்காக 8,43,623 கழிவுநீரகற்று இணைப்புள்ள 4500 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் சேகரிக்கும் குழாய்களை பராமரித்து வருகிறது. சென்னை நகரில் பெறப்படும் கழிவுநீரை பாதுகாப்பான முறையில் அகற்ற சென்னைக் குடிநீர் வாரியம் கழிவுநீர் அமைப்புகளில் முன்தடுப்பு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதை நடைமுறைபடுத்தி வருகிறது. பெறப்படும் புகார்களின்

அடிப்படையில் கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு காலம் வகைப்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது. மேற்கண்ட முன்தடுப்பு பராமரிப்புப் பணியினால் மாநகரில் கழிவுநீர் அடைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

### 5.4.7 நீர்வழிப்பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவு நீர் கலப்பதை நிறுத்த 2012-2013 ஆம் ஆண்டு ₹300 கோடி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்கவும் மற்றும் கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றவும் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இதன் முதல் கட்டமாக நகர நீர் வழி பாதையில் மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகளுக்கு உட்கட்டமைப்பு

மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து (I&A F) ₹150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஜூலை 2018ல் முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது கட்டமாக சென்னை மாநகரின் நீர் வழி தடங்களில் மீதமுள்ள 158 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் 7 சிப்பங்களாக மேற்கொள்ள ₹163 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவற்றில், 6 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 1 சிப்பத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மதிப்பாய்வில் உள்ளன.

### 5.4.8. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு மறு பயன்பாட்டிற்கு அளித்தல்

கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை நாளொன்றுக்கு 28.53 மில்லியன் லிட்டர் அளவிற்கு சென்னை பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட் மற்றும் சென்னை

உரத்தொழிற்சாலை லிமிடெட் ஆகிய தொழிற் சாலைகளுக்கு 1989ஆம் ஆண்டு முதலும் மற்றும் மணலி பெட்ரோ இராசயன பொருட்கள் தொழிற்சாலைக்கு 2005ஆம் ஆண்டு முதலும் வழங்கி வருகிறது. இதன் மூலம் வாரியத்திற்கு 2017-2018ஆம் ஆண்டில் ₹18.98 கோடி வருமானம் கிடைத்துள்ளது.

### 5.4.8.1 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

கழிவுநீர் மறுசுழற்சி என்பது சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை வேளாண்மை, இயற்கைப் பாசனம், தொழில் துறை செயல்பாடுகள், கழிப்பறை பயன்பாடு மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டம் போன்ற நன்மை பயக்கும் நோக்கங்களுக்காக பயன்படுத்துதலாகும். கழிவுநீர் மறுசுழற்சி செய்வதால் நிலத்தடி நீர் பயன்பாடு – குறைவதோடு கூடுதல் வருவாயும் கிடைக்கும். தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீருக்கு பதிலாக சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை மறுசுழற்சி மூலம் பயன்படுத்தும் திட்டத்தினை, மறைந்த மாண்புமிகு

தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தார்கள்.

### 5.4.8. 2 கோயம்பேட்டில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO)

இருங்காட்டுக் கோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வழங்கும் பொருட்டு கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ₹ 486.21 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, இத்தொகையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டு திட்டத்தின் கீழ் (TNIPP) ₹ 231.50 கோடியை கடனாகவும் ₹ 208.82 கோடியை அம்ருத் திட்டத்தின்கீழ் மத்திய மற்றும்

மாநில அரசின் மானியமாகவும் பெறப்பட்டு நடைபெற்று வரும் பணிகள் ஏப்ரல் 2019-ல் முடிவடையும்.

**5.4.8.3. தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (TTRO)**

வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களுக்காக, கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ₹330 கோடி மதிப்பீட்டில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு நீடித்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின்கீழ் (TNSUDP) ₹ 229.50 கோடியை கடனாகவும் ₹118.67 கோடியை அம்ரூத் திட்டத்தின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் மானியமாகவும் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை ஏப்ரல் 2019ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 5.5 நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கம்

மறைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்னை நகருக்கு நீடித்த பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவும் நீர் மேலாண்மையில் நீடித்த செயல்முறைகளை ஊக்குவிப்பதற்காகவும் நீடித்த குடிநீர் ஆதார பாதுகாப்பு இயக்கத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் பெருவளாகங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை நிறுவி அதன் மூலம் மழைநீரை சேமித்தல், மழைநீர் வடிகால்களில் இருந்து பெறப்படும் மழைநீரை சேகரித்தல் மற்றும் மறுசுழற்சி மூலம் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை குடிநீரல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளன. நீர் நிலைகளின் எல்லைகளை வரையறை செய்து நீர்நிலைகளின் நீராதாரங்களை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் நோக்கமானது நீர்மேலாண்மையில் நல்ல செயல்முறைகளை சோதனை முறையில்

செயல்படுத்துவதன் மூலம் பொதுமக்களும் தங்களது இருப்பிடங்களில் இவற்றை செயல்படுத்த முன் மாதிரியாக அமையும்.

## 5.6 சென்னை சீர்மிகு நகரம்

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சீர்மீகு நகரங்களில் சென்னை நகரமும் ஒன்றாகும். சீர்மிகு நகர திட்டத்தின்கீழ், பகுதி சார்ந்த மேம்பாட்டுப் பணிகளுக்காக சென்னை நகரில் தியாகராயநகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளான தேனாம்பேட்டை, ஆயிரம்விளக்கு, நந்தனம், மேற்கு மாம்பலம் மற்றும் சி.ஐ.டி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள 452 தெருக்கள் தேர்வு செய்யப்பட்டு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் மேம்பாட்டு பணிகள் கீழ்கண்டவாறு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் (24x7) குடிநீர் வழங்குதல் மற்றும் குடிநீர் அளவுமானி 100 சதவிகிதம் பொருத்தி குடிநீர் வழங்கும் பணிகளை மேம்படுத்தல்.

- தற்போதுள்ள குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகளை புனரமைத்து மேம்படுத்துதல்.
- குடிநீரின் தரம், அழுத்தம் மற்றும் குடிநீர் அளவு ஆகியவற்றை மேம்படுத்த கணிணிமயமாக்கி வலைதளம் மூலம் கண்காணிக்க வகை செய்தல்.

இது தவிர சென்னை மாநகரத்திலுள்ள அனைத்து 200 பணிமனைகளிலும் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளாவன.

- கணிப்பொறி தீர்வுகள் மற்றும் குடிமக்களின் சேவைகளை மேம்படுத்த ₹16 கோடியில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்த நிதி ஆதாரம் கோரப்பட்டுள்ளன.

- சென்னை மாநகரத்திலுள்ள வணிக வளாகம் மற்றும் குடிநீர் அதிக அளவில் பயன்படுத்தும் வளாகங்களில் 12,708 AMR குடிநீர் அளவுமானிகள் பொருத்தும் பணிகளுக்காக ₹9.50 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஆய்வில் உள்ளது.

- சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள அனைத்து குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் பகிர்மான நிலையங்களில் 251 மின்காந்த குடிநீர் வழங்கல் அளவுமானி பொருத்தும் பணிகளுக்காக ₹11.63 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஆய்வில் உள்ளது.

- சென்னை குடிநீர் வாரியத்திலுள்ள குடிநீர் லாரிகளில் நீர் நிரப்பும் 41 நிலையங்களில் உள்ள 191 குடிநீர் நிரப்பும் கம்பங்களில் கட்டுப்பாட்டு கருவி பொருத்தி மிடுக்கு அட்டைகள் (Smart Card) பயன்படுத்தி வலைதளம் மூலம் கண்காணிக்கும் பணிக்காக ₹11.75 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது.

### 5.7 மழை நீர் சேகரிப்பு

மழைநீர் சேகரிப்பு என்பது மழைநீர் வீணாதலை தடுத்து சேகரித்து உரிய முறையில் சேமித்தலாகும்.

அதன்படி கட்டிட மேற்கூரைகள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து பெறப்படும் மழைநீரை தடுத்து பூமியில் ஆழமான குழி அமைத்தோ அல்லது குழாய் பதித்தோ அல்லது கிணற்றிற்கோ ஊடுருவல் செய்து சேமித்தலாகும். இவ்வாறு சேமிக்கப்பட்ட நீர் தோட்டங்களுக்கான நீர்பாசனம், குடிநீர் பயன்பாடு, விவசாயம் மற்றும் நிலத்தடி நீர்மட்ட உயர்வுக்கும் பயனுள்ளதாக இருக்கும். மழைநீர் சேகரிப்பில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

மழைநீர் சேகரிப்பு அமைப்பினை புதிய மற்றும் பழைய கட்டடங்களில் கட்டாயமாக செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மற்றும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. சென்னை நகரின் இவ்வெற்றி சரிதம் நாடெங்கும் பிரதிபலித்து வருகிறது.

மழைநீர் சேகரிப்பினை சென்னைக் குடிநீர் வாரியம் 2002 முதல் நடைமுறைப்படுத்தியதன் மூலம் சென்னை மாநகர் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக உள்ளது. சென்னைக் குடிநீர் வாரியம் ஒவ்வொரு ஆண்டும் பருவ

காலத்திற்கு முன் மழைநீர் திட்டம் குறித்து சென்னை மாநகர மக்களிடையே கையேடுகள், குறிப்பேடுகள், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் ஆகியன மூலம் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை புனரமைக்க விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் புது இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டடங்களுக்கும் அளவு மற்றும் பரப்பு, வித்தியாசம் இல்லாமல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது உள்ள சுமார் 8,03,228 கட்டடங்களில், மொத்தம் 8,73,700 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2017-2018ஆம் ஆண்டு 11,000 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் புதிய குடிநீர்/கழிவு நீர் இணைப்புகளின் போதும், இணைப்புகளை புதுப்பிக்கும் போதும் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம் பெறப்படும் நன்மைகள் நகரின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள

தேர்வு செய்யப்பட்ட 145 கண்காணிப்பு கிணறுகளின் மூலம் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டமும் தரமும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழைநீர் சேகரிப்பு திட்டம் நிறைவேற்றப்பட்டதனால், நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீர்தன்மை ஒவ்வொரு வருடமும், குறிப்பாக பருவமழை காலங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டு திறன் 2.75 ஆயிரம் மில்லியன் கனஅடி (TMC) ஆக உள்ளது. சென்னை நகரில் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பகுதிப் பொறியாளர்களும், பணிமனை பொறியாளர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

மழைநீர் சேகரிப்பு திட்டத்தால் நிலத்தடி நீர்மட்டமும், தரமும் ஆண்டுதோறும் குறிப்பாக பருவ காலங்களில் உயர்ந்து வருகிறது.

**5.8 நிதி நிலைமை**

2017-18 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் படி மொத்த வருவாய் செலவினமானது ₹1107.84 கோடி ஆகும். வாரியத்தின் மொத்த வருமானம் வரவு செலவு திட்ட மதிப்பீட்டின் படி ₹754.50 கோடி ஆகும். இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் ₹170.34 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின் மூலம் ₹288.87 கோடியும், இதர வருவாய் மூலம் ₹53.84 கோடியும் பெறப்பட்டுள்ளது. மீஞ்சூரில் உள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும், இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் இதர செலவினங்களுக்காகவும் குடிநீர் வாரியத்திற்கு ₹241.45 கோடி நிதியினை தமிழக அரசு மானியமாக வழங்கியது.

**5.9 குறை தீர்ப்பு நடவடிக்கைகள்**

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோரின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

### 5.9.1 24X7 புகார்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 24 மணி நேர குறைகள் களையும் பிரிவு வாரத்தின் எல்லா நாட்களிலும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும், கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 45674567 மூலமாகவோ, நுகர்வோர் தங்களது புகார்களையும் / குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள் / குறைகள் சம்பந்தப்பட்ட பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

புகார் பிரிவில் சாராசரியாக ஒரு நாளைக்கு 160 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன. குறைநிவர்த்தி அமைப்பு பொதுமக்களால் எளிதாக பயன்படுத்தும் விதத்தில் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு தனியான

நுகர்வோர் குறை தீர்க்கும் பிரிவு தலைமை அலுவலத்தில் நுகர்வோர்களுக்கு சேவை செய்ய அமைக்கப்பட்டுள்ளது.

### 5.9.2 இணையதளம் மூலம் புகார்களை நிவர்த்தித்தல்

நுகர்வோர் தங்களின் புகார்களை சென்னை குடிநீர் வாரியத்தின் இணையதளமான www.chennaimetrowater.tn.nic.in மூலமாகவும் பதிவு செய்யலாம். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைக்குள் தீர்வு காணப்படுகிறது.

### 5.9.3 திறந்தவெளி குறைதீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, திறந்தவெளி குறைதீர்ப்பு கூட்டங்கள் (Open House Meeting) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி

வரை வாரியத்தின் மூத்த அதிகாரிகள் தலைமையில் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.9.4 லாரிகள் மூலம் கழிவுநீர் தொட்டியில் இருந்து கழிவுநீர் அகற்றும் பணி

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர், சட்டமன்றத்தில் சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள நுகர்வோர் தங்கள் வீடுகளில் உள்ள கழிவு நீர் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்ற சென்னைக் குடிநீர் வாரியத்தின் மூலம் கழிவுநீர் அகற்றும் லாரியை குறைவான கட்டணத்தில் பதிவு செய்து கழிவுநீர் அகற்றப்படும் என்ற அறிவிப்பின்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் "Dial for Septic Tank Clearance" என்ற சிறப்பான திட்டத்தை தொடங்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள நுகர்வோர் www.chennaimetrowater.tn.nic.in என்ற இணைய தளத்திலோ அல்லது 044-4567 4567 என்ற சென்னைக் குடிநீர் வாரிய அழைப்பு மையத்தின் தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு ₹650 /- கட்டணத்தில் தங்கள் வீட்டில் உள்ள கழிவுநீர் தொட்டியிலிருந்து கழிவுநீரை அகற்றிக் கொள்ள பதிவு செய்து கொள்ளலாம். இத்திட்டம் 15.05.2018 முதல் நடைமுறைக்கு வந்து பொது மக்களிடையே நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது.

## 6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு அரசு, சென்னை மாநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சிகளுக்கு குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை சட்டபூர்வமான ஒரு நிறுவனமாக 14.04.1971 அன்று தோற்றுவித்தது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தொழில்நுட்பம், நிதி மற்றும் நிர்வாகப் பிரிவுகளுடன் அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களைத் தலைவராகவும், மேலாண்மை இயக்குநரை தலைமை அதிகாரியாகவும் கொண்டுள்ளது. வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மண்டலங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, நான்கு தலைமைப் பொறியாளர்கள் உள்ளனர்.

### 6.1 தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்

- குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கான திட்டமிடுதல், ஆய்வு,

வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல்.

- கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல்
- குடிநீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு
- குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மைக்கான செயல்பாடுகள்
- பயிற்சி நடவடிக்கைகள்

6.2 ஊரகக் குடிநீர்த் திட்டம்

ஊரகப் பகுதி மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவின் வரைமுறையை தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்தின் வழிகாட்டுதலின்படி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் என்ற அளவிலிருந்து 55 லிட்டராக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

கூட்டுக்குடிநீர்த் திட்டங்கள் மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்டம், மத்திய அரசின் தேசிய ஊரக குடிநீர்த் திட்டம் மற்றும் தேசிய விவசாய மற்றும்

கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி உதவியுடன் ஊரக பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டத்தின் பயனாளி ஒரே ஒரு உள்ளாட்சி அமைப்பாக இருந்தால், திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பராமரிப்பிற்காக அந்த உள்ளாட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப் படுகின்றன. ஒரு உள்ளாட்சி அமைப்பிற்கு மேல் பயனாளிகள் இருந்தால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமே திட்ட பராமரிப்பை மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டில், மொத்தம் 1,00,018 ஊரக குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 93,463 ஊரக குடியிருப்புகள், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு, முழுமையான குடிநீர் வசதி பெற்றுள்ளன. மீதமுள்ள 6,555 குடியிருப்புகள் பகுதியளவு குடிநீர் வசதி பெற்றுள்ளன.

2017-18 ஆம் ஆண்டில் 2,435 பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள் முழுமையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

## 6.3 குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மை

குடிநீர்த் திட்டங்களைச் செயலாக்குவதோடு மட்டும் அல்லாமல், குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மையை மேம்படுத்தும் நடவடிக்கையாக தடுப்பணைகள், செறிவூட்டுக் குழாய்கள், கசிவுநீர்க் குட்டைகள் போன்ற நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் நிர்மாணிக்கும் பணிகளையும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

2011-12 முதல் ₹228.24 கோடி மதிப்பீட்டில் 3,348 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ளன.

## 6.4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மக்களுக்கு நீடித்த, நிலையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்குடன் மாநிலத்தின் கடலோர பகுதிகள், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும்

குடிநீர் தேவையுள்ள பகுதிகளில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய பொதுவான நீராதாரங்களுடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நகரங்கள் மற்றும் ஊரக குடியிருப்புகள் இரண்டும் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**6.4.1 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் :**

2017 - 18 ஆம் ஆண்டில், 5 பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 34.50 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹1824.20 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 151.63 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கத்தக்க வகையில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் 31.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹1574.36 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுறும் தருவாயில், நாளொன்றுக்கு

202.38 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். இத்திட்டங்கள் குறைந்தபட்ச தேவை திட்டம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி, தேசிய ஊரக குடிநீர்த் திட்டம், நகர உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு மற்றும் உலக வங்கி (தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்) ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கத்தில் உள்ளன. செயலாக்கத்தில் உள்ள திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

| **வ. எண்.** | **திட்டத்தின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)** | **பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, அதிராமபட்டினம் மற்றும் பெருமகளூர் பேரூராட்சிகள் மற்றும் 1153 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 495.70 | 7.00 |
| 2. | புதுக்கோட்டை மாவட்டம் 1766 ஊரக குடியிருப்புகள் மற்றும் சிவகங்கை மாவட்டம் 125 குடியிருப்புகளுக்கான | 301.50 | 6.65 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | கூட்டுக் குடிநீர்த் திட்டம். | | |
| 3. | கடலூர் மாவட்டம், கடலூர் நகராட்சி, புவனகிரி, பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 260.54 | 7.75 |
| 4. | கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், 6 பேரூராட்சிகள் மற்றும் 134 ஊரக குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 130.46 | 1.83 |
| 5. | திண்டுக்கல் மாவட்டம், நத்தம் மற்றும் 2 பேரூராட்சிகள், 1276 ஊரக குடியிருப்புகளுக்கான (திண்டுக்கல் மாவட்டம் 2 பேரூராட்சிகள், 354 ஊரக குடியிருப்புகள் மற்றும் திருச்சி மாவட்டம் 135 ஊரக குடியிருப்புகளுக்கு மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய) கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 636.0 | 11.27 |
| 6. | சேலம் மாவட்டம், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஒன்றியங்களைச் சார்ந்த 698 ஊரக குடியிருப்புகள் மற்றும் 6 பேரூராட்சி களுக்கான மொத்த ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 158.64 | 3.93 |
| 7. | விருதுநகர் மாவட்டம், 755 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் | 234.00 | 6.51 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | திட்டம். | | |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டம், குடிநீர்த்தரம் பாதிக்கப்பட்ட 295 குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 105.70 | 3.70 |
| 9. | கன்னியாகுமரி மாவட்டம், அழகிய-பாண்டிபுரம், 8 பேரூராட்சிகள் மற்றும் 246 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 109.80 | 2.96 |
| 10. | திருச்சி மாவட்டம், முசிறி, துறையூர், தாத்தையங்கார் பேட்டை மற்றும் உப்பிலியாபுரம் ஒன்றியத்திலுள்ள 293 குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 140.22 | 1.68 |
| 11. | திருநெல்வேலி மாவட்டத் திலுள்ள சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிகள், திருவேங்கடம் பேரூராட்சி மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள இராஜபாளையம், சிவகாசி, திருத்தங்கல் நகராட்சிகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம். | 543.20 | 6.20 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன்பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 12. | திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த கீரனூர் மற்றும் நெய்காரப்பட்டி பேரூராட்சிகள், 253 கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 108.80 | 2.82 |
| 13. | கன்னியாகுமரி மாவட்டம் இரணியல் பேரூராட்சி, 319 ஊரகக் குடியிருப்புகள், பத்மநாபபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் அபிவிருத்தி திட்டம் | 174.00 | 3.44 |
| | மொத்தம் | 3398.96 | 65.74 |

மேலும், கீழ்க்காணும் 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புர வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்த ₹642.44 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

1. கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர், முப்பேரிபாளையம் பேரூராட்சிகள், திருப்பூர் மாவட்டம் அவிநாசி பேரூராட்சி மற்றும் பல்லடம், திருப்பூர் ஒன்றியங்களிலுள்ள 155 கிராம குடியிருப்புகளுக்கு மொத்த குடிநீர் ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டுக் குடிநீர்த்திட்டம்.

2. நாமக்கல் மாவட்டம், ஆலம்பாளையம், படவீடு பேரூராட்சிகள் மற்றும் 669 ஊரக குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

3. திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி மற்றும் பாளையங்கோட்டை ஒன்றியத்தில் உள்ள 63 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

### 6.4.2 இதர கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

2017-18 ஆம் ஆண்டில், 11.17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹412.78 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 74.85 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் 4 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், 15 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 10.71 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹443.39 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் முடிவுறும் தருவாயில் நாளொன்றுக்கு 65.79 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். இத்திட்டங்கள் குறைந்தபட்ச தேவைத் திட்டம், தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி மற்றும் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம்,

ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுகின்றன.

திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர், வேப்பந்தட்டை, ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 306 குடியிருப்புகள், அரும்பாவூர் மற்றும் பூலம்பாடி பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 61.11 | 2.57 |
| 2 | திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப்பேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த 158 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 54.14 | 1.23 |
| 3 | திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு அருகிலுள்ள இராதாபுரம் மற்றும் வள்ளியூர் ஒன்றியங்களைச் சார்ந்த கூடங்குளம் மற்றும் 12 ஊராட்சிகளைச் சார்ந்த 100 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 68.10 | 0.88 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 4 | கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 60 குடியிருப்புகள், 59 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் லால்பேட்டை பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 18.16 | 0.60 |
| 5 | ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த வெள்ளக்கோயில், காங்கேயம் நகராட்சிகள் மற்றும் 528 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 91.40 | 2.00 |
| 6 | தேனி மாவட்டம், கடமலைகுண்டு - மயிலாடும்பாறை ஒன்றியத்தைச் சார்ந்த ஆத்தங்கரைப்பட்டி மற்றும் 14 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 2.65 | 0.07 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 7 | திருப்பூர் மாவட்டம் வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம், காங்கேயம் ஒன்றியங்கள் மற்றும் ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தைச் சார்ந்த 1262 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (பகுதி-2). | 91.16 | 2.72 |
| 8 | அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தைச் சார்ந்த 281 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 26.06 | 1.09 |
| 9 | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி மற்றும் கடமலைக்குண்டு – மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த கண்டமனூர் மற்றும் 15 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம். | 5.50 | 0.12 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 10 | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 109 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ்) | 4.08 | 0.59 |
| 11 | தூத்துக்குடி மாவட்டம் கருங்குளம் (பகுதி), ஸ்ரீவைகுண்டம் (பகுதி) மற்றும் தூத்துக்குடி (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 90 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 17.17 | 0.48 |
| 12 | நீலகிரி மாவட்டம், முள்ளிகூர், இத்தலார் மற்றும் நஞ்சநாடு ஊராட்சிகளைச் சார்ந்த முள்ளிகூர் மற்றும் 54 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 25.85 | 0.30 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை ( இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 13 | திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் மற்றும் சங்கரன்கோவில் ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 31.32 | 1.56 |
| 14 | திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி (பகுதி), பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 46.55 | 1.55 |
| 15 | திருநெல்வேலி மாவட்டம், மானூர் (பகுதி) மற்றும் பாளையங்கோட்டை (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 170 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 32.40 | 1.13 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 16 | திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்தைச் சார்ந்த 101 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ்) | 4.11 | 0.43 |
| 17 | திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சார்ந்த 201 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் (வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ்) | 8.96 | 0.86 |
| 18 | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி (பகுதி), கயத்தார் (பகுதி), ஒட்டபிடாரம் (பகுதி), விளாத்திகுளம் (பகுதி) மற்றும் புதூர் (பகுதி) ஒன்றியங்களைச் சார்ந்த 248 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். | 94.04 | 1.25 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 19 | தேனி மாவட்டம் வடுகபட்டி பேரூராட்சி, பெரியகுளம் ஒன்றியத்தைச் சார்ந்த 57 ஊரக குடியிருப்புகள், பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம். மேலும், திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 45.70 | 0.92 |
| 20 | கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகைமலை ஒன்றியங்களைச் சார்ந்த 253 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 52.75 | 0.69 |
| 21 | கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 17 தரம் பாதிக்கப்பட்ட மற்றும் 69 வழியோர குடியிருப்புகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தின் கொடியம்பாளையம் குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம் | 19.14 | 0.38 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 22 | திருச்சி மாவட்டம் வையம்பட்டி மற்றும் மருங்காபுரி ஒன்றியங்களில் உள்ள 135 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம். (நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டின்கீழ்) | 46.32 | 0.29 |
| 23 | சேலம் மாவட்டம், கொங்கணாபுரம், எடப்பாடி ஒன்றியங்களைச் சார்ந்த 51 ஊரக குடியிருப்புகளுக்கு பயன்பாட்டில் உள்ள 327 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்து தலைமை இடம், நீர் சுத்திகரிப்பு மற்றும் நீர்உந்து நிலையங்கள் மூலம் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 9.50 | 0.09 |
| | மொத்தம் | 856.17 | 21.80 |

## 6.5 நகர்ப்புர தனி குடிநீர்த் திட்டம்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கான நகர்ப்புர தனி குடிநீர்த் திட்டப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. மேலும், இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன், பராமரிப்பிற்காக சம்பந்தப்பட்ட நகர உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

2017-18 ஆம் ஆண்டில், 8 நகர்ப்புர தனி குடிநீர்த் திட்டங்கள், 5 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் உள்ள 5.80 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹127.610 கோடி மதிப்பீட்டில், நாளொன்றுக்கு 86.71 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2 மாநகராட்சிகள், 9 நகராட்சிகள், 3 பேரூராட்சிகளில் உள்ள 22.28 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹969.10 கோடி மதிப்பீட்டில், 14 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள்

முடிவுறும் தருவாயில் நாளொன்றுக்கு 257.65 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

**6.6 அம்ரூத் திட்டங்கள்**

2015-16, 2016-17 மற்றும் 2017-2020 ஆகிய ஆண்டுகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை திட்டங்கள் பின்வருமாறு மூன்று தொகுப்புகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன

**6.6.1 மாநில ஆண்டு செயல் திட்டம் (SAAP-I -2015-16)**

8 குடிநீர்த் திட்டங்கள் ₹1907.09 கோடி மதிப்பீட்டில் 57.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும், 1 பாதாள சாக்கடைத்திட்டம் ₹23.32 கோடி மதிப்பீட்டில் 0.19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் செயலாக்கத்தில் உள்ளன. இத்திட்டங்கள் மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி, ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம், உலக வங்கி (TNSUDP) மற்றும் ஜெர்மானிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடனான நீடித்த நகர உட்கட்டமைப்பு

நிதி (SMIF) ஆகியவற்றின் நிதி உதவியுடன் செயலாக்கப்படுகின்றன.

திட்டங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:-

| **வ. எண்.** | **திட்டத்தின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்)** | **பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 50.90 | 1.82 |
| 2. | ஈரோடு மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 484.45 | 9.05 |
| 3. | திருப்பூர் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 250.00 | 19.50 |
| 4. | வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 234.93 | 9.20 |
| 5. | ஓசூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் (பகுதி-I) | 87.91 | 2.29 |
| 6. | கோயம்பத்தூர் மாநகராட்சி விரிவு படுத்தப்பட்ட, 8 பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 395.41 | 9.22 |
| 7. | நாகர்கோயில் நகராட்சி குடிநீர் | 223.44 | 3.90 |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட்சத் தில்) |
|---|---|---|---|
| | அபிவிருத்தித் திட்டம் | | |
| 8. | இராஜபாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் | 180.05 | 2.15 |
| 9. | நாகபட்டினம் மாவட்டம் வேளாங்கன்னி பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 23.32 | 0.19 |
| | மொத்தம் | 1930.41 | 57.32 |

### 6.6.2 மாநில ஆண்டு செயல்திட்டம் (SAAP- II - 2016-17)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட் சத்தில்) |
|---|---|---|---|
| 1. | இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 40.33 | 0.63 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான (குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) பாதாள சாக்கடைத் திட்டம் | 442.00 | 5.17 |
| | மொத்தம் | 482.33 | 5.80 |

### 6.6.3 மாநில ஆண்டு செயல்திட்டம் (SAAP- III - 2017-20)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) | பயன் பெறும் மக்கள் தொகை (இலட் சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இராஜபாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 178.75 | 2.20 |
| 2 | ஆம்பூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் | 129.07 | 1.72 |
| 3 | பவானி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு விரிவுபடுத்தப்பட்ட கோயம் புத்தூர் மாநகராட்சிக்கான ( புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுடன்) குடிநீர் அபிவிருத்தி திட்டம் -பில்லூர் III | 649.30 | 32.79 |
| | மொத்தம் | 957.12 | 36.71 |

### 6.7 கூட்டுக் குடிநீர்த் திட்டம் - இயக்குதல் மற்றும் பராமரிப்பு

அரசாணை (நிலை) எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 10.03.1994-ன்படி, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள கூட்டுக்

குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இன்றைய தேதியில், 8 மாநகராட்சிகள், 66 நகராட்சிகள், 324 பேரூராட்சிகள், 47,136 ஊரக குடியிருப்புகள் மற்றும் 532 தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் பயன்பெறும் வகையில், 554 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 4.21 கோடி மக்கள் பயன்பெறும் வண்ணம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 554 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் ஏப்ரல் 2018-ல், சராசரியாக நாளொன்றுக்கு 1803 மில்லியன் லிட்டர் குடிநீர் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொழிற்சாலைகள் / நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பயனாளிகள் | பயனாளிகளின் எண்ணிக்கை | திட்டத்தில் வடிவமைக்கப் பட்டபடி வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு (எம்.எல்.டி) | தற்போது சராசரியாக வழங்கப் படும் குடிநீரின் அளவு ஏப்ரல் 2018 (எம்.எல்.டி) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 8 | 265 | 200 |
| 2 | நகராட்சிகள் | 66 | 264 | 201 |
| 3 | பேரூராட்சிகள் | 324 | 334 | 301 |
| 4 | ஊரகக் குடியிருப்புகள் | 47136 | 1066 | 1011 |
| 5 | தொழிற்சாலைகள் / கல்வி நிறுவனங்கள் / வணிக நிறுவனங்கள் | 532 | 144 | 90 |
| | மொத்தம் | 48066 | 2073 | 1803 |

2017-18-ஆம் ஆண்டின் இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவு ₹707.83 கோடி மற்றும் குடிநீர்க் கட்டணத்தின் மூலம் பெறப்பட்ட வருமானம் ₹449.79 கோடி ஆகும்.

தமிழ்நாடு அரசு, கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பில் வருவாய்க்கும், செலவினத்திற்கும் உள்ள இடைவெளியை சரி செய்ய

2014-15 ஆம் நிதியாண்டில் ₹140.00 கோடியும், 2015-16 ஆம் நிதியாண்டில் ₹207.11 கோடியும், 2016-17 ஆம் நிதியாண்டில் ₹103.79 கோடியும் மானியமாக அளித்துள்ளது.

### 6.8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைப் புனரமைத்தல்

நீராதாரங்களின் கொடுதிறன் குறைவு அல்லது மின்னிறைப்பான்களின் செயல்திறன் குறைவு அல்லது குடிநீர் குழாய்கள் மற்றும் தடுக்கிதழ்கள் சேதம் போன்ற காரணங்களுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை முழுமையாக செயல்பாட்டிற்கு கொண்டுவரவும், வடிவமைக்கப்பட்ட அளவிற்கு குடிநீர் வழங்கலை மேம்படுத்தவும் இத்தகைய புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டநிதி மற்றும் மாநில அரசின் பங்களிப்பு நிதியுதவியுடன் ₹64.26 கோடி செலவில், 657 புனரமைப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

### 6.9 குடிநீரின் தரப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு, சென்னையில் மாநில அளவிலான ஒரு குடிநீர் தரப்பரிசோதனைக் கூடம், மாவட்ட அளவிலான 31 குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்கள் மற்றும் உபமாவட்ட அளவிலான 56 குடிநீர் தரப்பரிசோதனைக் கூடங்களை நிறுவியுள்ளது. இப்பரிசோதனை கூடங்களில் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் இரசாயனம் மற்றும் நுண்கிருமிகள் உள்ளிட்ட அடிப்படை தரக் காரணிகளுக்கான பரிசோதனைகள் மற்றும் குடிநீர் தரக் கண்காணிப்பு பணிகள் செய்வதற்கான வசதிகள் உள்ளன. மத்திய அரசு, சென்னையில் உள்ள மாநில குடிநீர் தரப்பரிசோதனைக் கூடத்தை மாநில வழிகாட்டி பரிசோதனைக் கூடமாக அங்கீகரித்துள்ளது.

மாநில அளவிலான தரப்பரிசோதனைக் கூடத்திற்கு, NABL (National Accreditation Board for Testing and

Calibration Laboratories) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசோதனைக் கூடங்களில் 50,000 குடிநீர் மாதிரிகளும், உப மாவட்டஅளவிலான பரிசோதனைக் கூடங்களில் 1,68,000 குடிநீர் மாதிரிகளும், தரப்பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 12,524 களநீர் பரிசோதனை பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டன. 10,000 அடிப்படை பணியாளர்களுக்கு நீர் பரிசோதனை பெட்டி உபயோகிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதிகப்படியான குடிநீர் மாதிரிகளை பரிசோதிப்பதின் மூலமும், அடிப்படை பணியாளர்களுக்கு குடிநீர் பரிசோதனை பெட்டி உபயோகிக்க பயிற்சி அளிப்பதன் மூலமும், மேலும், குடிநீர் பரிசோதனை பெட்டிகள் வழங்குவதன் மூலமும், 2018-2019-ஆம் ஆண்டில் பரிசோதனைக் கூடங்களின் செயல்பாட்டினை மேலும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6.10 நில நீர்ப் பிரிவின் செயல்பாடுகள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்களுக்கான நீராதாரம் தோற்றுவிக்கும் பணிகளுக்கும் மற்றும் நீராதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகளுக்கான இடம் தேர்வு செய்யவும் நவீன தொலையுணர்வு நுட்பம் மற்றும் புவியியல் தகவல் முறைமை ஆகிய நவீன தொழில் நுட்பம் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் அமையப் பெற்றுள்ள நிலத்தடி நீர் வளங்களை குறிக்கும் வரைபடங்களைத் தயாரிக்கும் பணிகள் மத்திய அரசின் நிதியாதாரத்துடன் மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட அளவிலான ஒன்றிய வரைபடங்கள் அச்சிடப்பட்டுள்ளன. மேலும், இவ்வரைபடங்களின் மென்நகல் மற்றும் அச்சுநகல், தொடர்பு துறைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் பகுதிகளை உள்ளடக்கிய தாமிரபரணி ஆற்று வடிநிலப் பகுதியில், எதிர்கால தேவைக்கான குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத் தன்மையை உறுதி செய்யும் வகையில், ஒரு ஆய்வுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

மாநில திட்ட ஆணையம், ஓர் முன்மாதிரி திட்டம் மூலம் ஈரோடு மாவட்டம், நம்பியூர் ஒன்றியத்தின் லாகாம்பாளையம் கிராம பஞ்சாயத்து மற்றும் நம்பியூர் ஒன்றியங்களில் 24X7 குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கிராம பஞ்சாயத்துகளுக்கிடையே போதிய குடிநீர் பகிர்வு மற்றும் பாதுகாப்பு செயல்படுத்தப்படுகிறது.

நீடித்த நிலைத்த குடிநீர் பாதுகாப்பு இயக்கம் (“SuWaSeM") மாநிலத்திலுள்ள நகர பகுதிகளில், அனைத்து வகைகளிலும் மழைநீரை சேகரிக்க உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு

₹20.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநரகம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மாநிலம் முழுமைக்குமான முகமை நிறுவனமாக செயல்படும்.

தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களில் நீர் ஆதாரம், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, பள்ளி குடிநீர் திட்டம், அங்கன்வாடி குடிநீர் திட்டம் ஆகியவற்றுக்கான புவி குறிச்சொல் (Geotagging) 95 % வரை சேகரிக்கப்பட்டுள்ளது.

**6.11 பாதாள சாக்கடைத் திட்டங்கள்**

நகராட்சி நிர்வாக ஆணையரகம், பேரூராட்சிகளின் இயக்குநரகம் மற்றும் அரசு நிர்ணயிக்கும் முன்னுரிமை அடிப்படையில் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் இதர நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

2017-18 ஆம் ஆண்டில், பெரியகுளம் மற்றும் அரியலூர் நகராட்சிகளுக்கு 91,000 மக்கள் பயன்பெறும் வகையில் ₹54.10 கோடி மதிப்பீட்டில் பாதாளச்சாக்கடைத் திட்டங்கள் நாளொன்றுக்கு 10 மில்லியன் லிட்டர் கழிவுநீர் மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் வகையில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

மேலும், 19.41 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹1315.08 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 158.77 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மறு பயன்பாட்டிற்கு உகந்ததாக்கும் 20 பாதாளச்சாக்கடைத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளன.

இவை தவிர, வல்லம், மண்ணச்சநல்லூர் மற்றும் S.கண்ணனூர் பேரூராட்சிகளில் உள்ள 0.64 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹84.07 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

### 6.11.1 கழிவுநீர் கசடு மேலாண்மை (Septage Management)

காஞ்சிபுரம் மாவட்டம், கருங்குழி பேரூராட்சியில் கசடு மேலாண்மைத்திட்டம் 58,000 மக்கள் பயன்பெறும் வகையில் ₹4.93 கோடி மதிப்பீட்டில் முன்மாதிரி திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அடிப்படையில், இதர பேரூராட்சிகளில் முன்னுரிமை அடிப்படையில், கசடு மேலாண்மைக்கான விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 6.12 குடிநீர்த் திட்டங்கள் குறித்த ஆய்வு மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 1 மாநகராட்சி, 14 நகராட்சிகள், 56 பேரூராட்சிகள் மற்றும் 17,339 ஊரகக் குடியிருப்புகளில் 99.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ₹13,633.04 கோடி மதிப்பீட்டில் 32 குடிநீர் திட்டங்களுக்கு ஆய்வு பணிகள் மற்றும் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள 32 திட்டங்கள் பற்றிய விவரங்கள் கீழ்க்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | குடிநீர் திட்டங்கள் (எண்ணம்) | பயனாளிகள் | மக்கள் தொகை (இலட்சத்தில்) | மதிப்பீட்டுத் தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ள திட்டங்கள் | 22 | 1 மாநகராட்சி, 6 நகராட்சிகள், 35 பேரூராட்சிகள் மற்றும் 6,029 ஊரகக் குடியிருப்புகள் | 38.85 | 3667.84 |
| 2 | ஆய்வு / விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கும் நிலையில் உள்ள திட்டங்கள் | 10 | 8 நகராட்சிகள், 21 பேரூராட்சிகள் மற்றும் 11,310 ஊரகக் குடியிருப்புகள் | 60.33 | 9965.80 |
| | மொத்தம் | 32 | 1 மாநகராட்சி, 14 நகராட்சிகள், 56 பேரூராட்சிகள் மற்றும் 17,339 ஊரகக் குடியிருப்புகள் | 99.18 | 13633.64 |

## 6.13 தரக்கட்டுப்பாடு பரிசோதனைக் கூடங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் நான்கு தரக்கட்டுப்பாடு பரிசோதனைக் கூடங்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி மற்றும் திண்டிவனத்தில் செயல்பட்டு

வருகின்றன. இவற்றில் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் உள்ள பரிசோதனைக் கூடங்கள் ISO 9001 : 2008 சான்றிதழ் பெற்றவை ஆகும்.

களமாதிரிகளின் ஒப்புமை மதிப்பீடு வழக்கமாக, இந்திய தரக்கட்டுப்பாடு அமைப்பின் (BIS) நடைமுறைகளின்படி அதன் பயன்பாட்டிற்கு முன்னதாக மதிப்பீடு செய்யப்படுகிறது. பரிசோதனை கூடங்களில் உள்ள சோதனை வசதிகள், பணி செயல்பாட்டின் போது தர உயர்வுக்கு பெரிதும் உதவுகின்றன.

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அமைப்புகளிடமிருந்து பெறப்படும் மாதிரிகளும் இந்த கூடங்களில் பரிசோதிக்கப்படுகின்றன.

2017-18 ஆம் ஆண்டில் இந்த 4 பரிசோதனை கூடங்களிலும் 6070 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

### 6.14 மேலாண்மை தகவல் அமைப்பு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அனைத்து திட்டங்கள், திட்ட மேலாண்மை, நிதி கணக்கியல், மனித

வளம், பட்டியல்கள் தயாரித்தல் மற்றும் இதர பணிகள் சம்பந்தமான தகவல் பரிமாற்றங்களை மேலாண்மை செய்ய TWADNEST எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தியுள்ளது.

குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை மற்றும் பராமரிப்பு திட்டங்களின் செயல் திறன்கள் மற்றும் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் போன்றவற்றின் பணி மற்றும் நிதி முன்னேற்றம் குறித்த தகவல்கள் இணையதளத்தில் (online) கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தலைமை நீரேற்று நிலையங்களில் உந்தப்படும் குடிநீரின் அளவு தினமும் பதிவேற்றம் செய்யப்பட்டு உடனுக்குடன் இணையத்தின் வழி (online) கண்காணிக்கப்படுகின்றது.

வாரியத்தில் குடிநீர்த் திட்டங்களை மிகச் சிறப்பான முறையில் திட்டமிட்டு வடிவமைக்க ஏதுவாக வடிவமைப்பு

மென்பொருளை (CAD Software) பயன்படுத்தி குடிநீர் பகிர்மானக் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்புகளின் கட்டமைப்புகள் குறித்து பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இவ்வொருங்கிணைக்கப்பட்ட மின் ஆளுமை இணையம், வாரியத்தின் தேவைக்கேற்ப அவ்வப்பொழுது திருத்தி அமைக்கப்படுகிறது. மேலும், அதன் உபயோகத்திற்கேற்ப வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், திறன் உயர்த்தப்பட்டும் வருகிறது.

வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் குடிநீர்த் திட்ட செயலாக்கத்தின் பணி முன்னேற்றத்தினை உடனுக்குடன் ஆய்வு செய்யும் பொருட்டு சென்னை தலைமை அலுவலகம் மற்றும் கோவை, மதுரை, தஞ்சாவூர், வேலூரில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகங்கள் மற்றும் திருச்சி, கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் தர்மபுரியில் உள்ள ஐந்து

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் காணொலி காட்சி மூலம் இணைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அனைத்து நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் சிறப்பான கண்காணிப்பிற்கு இது உதவுகிறது.

திட்டங்களை திறம்பட பணி ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் கைத் தொலைபேசி வாயிலான ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்பு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மண்டல பரிசோதனைக் கூடங்களில் தளவாடப் பொருள்களில் தரக் கட்டுப்பாடு பரிசோதனைகளை கண்காணிக்க உடன் நிகழ்வு (Online) இணையம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்

தமிழ்நாடு அரசு, தனியார்த் துறை பங்களிப்புடன் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தை (TNUIFSL), ஒரு பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக நிறுவியது. இதன் அனுமதிக்கப்பட்ட பங்குத் தொகை ₹ 2 கோடி ஆகும். இதில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையான ₹ 1 கோடியில், தமிழக அரசின் பங்கு ₹49 லட்சம் ஆகும். இதன் மற்ற பங்குதாரர்கள், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல் & எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL), தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF), குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மற்றும் இதரஅரசு மானிய நிதிகளை நிர்வகித்து வருகிறது. இதன் பிரதான பணிகளில், திட்ட மேம்பாடு, திட்ட மதிப்பீடு, திட்ட வடிவமைப்பு, மூலதன திரட்டு மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை அடங்கும்.

இந்நிறுவனமானது, நகர்ப்புர உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கான, ஆரம்பம் முதல் திட்டச் செயலாக்கம் வரையிலான அனைத்திற்குமான முழு தீர்வையும் அளித்து வருகிறது. தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஆதாயம் ஈட்டி வருவதோடு ஆதாயப் பங்குத் தொகையையும் இந்நிறுவனம் தொடர்ந்து செலுத்தி வருகிறது.

### 7.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF)

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் (TNUDF) என்ற அமைப்பினை, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல் & எப்.எஸ் ஆகிய தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் தோற்றுவித்தது.

இம்மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கான நிதி இடையீட்டாளராக செயல்பட்டு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் திறம்பட மற்றும் நீடித்த நிலைத்தன்மையுடைய அமைப்புகளாக வளர்வதற்கும்

அவை தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் மிகத் தரமான நகர்ப்புர சேவைகளை வழங்குவதற்கும் ஏதுவாக செயல்படுவது தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

நகர்ப்புர உட்கட்டமைப்பு சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் புதுமையான திட்டங்களை உருவாக்குதல், தற்சார்பற்ற மதிப்பீடுகள் மற்றும் நீடித்த நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றின் மூலம் இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கு பங்களிப்பது தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோளாகும்.

### 7.1.1 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள்

தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

- நகர்ப்புர உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு, நிதியளிப்பதன் மூலம், நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சி மூலமாக, உட்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்.
- நகர்ப்புர வளர்ச்சி அமைப்புகள் மூலதன சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் செயல்படுத்தப்படும் அடிப்படை வசதி திட்டங்களான சாலைகள், பாலங்கள், மழை நீர் வடிகால்கள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் போன்றவற்றுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியம் தொடர்ந்து நிதியுதவி அளிக்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு பொறுப்பாட்சி நிறுவனம் (TNUITCL) தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தை (TNUDF) நிர்வகித்து வருகிறது. இந்நிதியம் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) மூலம் இயக்கப்படுகிறது.

தமிழ் நாடு நகர்ப்புர வளர்ச்சி நிதியத்தின் மொத்த மூலதனமான ₹ 199.60 கோடியில், தமிழக அரசு ₹142.91 கோடியும், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, எச்.டி.எப்.சி மற்றும் ஐ.எல்.&எப்.எஸ் ஆகிய நிறுவனங்கள் ₹56.69 கோடியும் பங்களிப்பு செய்துள்ளன.

### 7.2 வெளி ஆதாரத் திட்டங்கள்

ஜெர்மன் நிதி நிறுவனத்தின் (KfW) நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர கட்டமைப்பு நிதியுதவி – தமிழ்நாடு (SMIF-TN) திட்டம் (நிலை II - பகுதி 1 மற்றும் பகுதி- 2) மற்றும் உலக வங்கியின் நிதி உதவியுடனான தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (TNSUDP) ஆகிய இரண்டு வெளி ஆதாரக் கடன்கள் இந்நிதியத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. மேற்சொன்ன இரண்டு வெளி நிதி ஆதாரங்களின் மொத்தம் ₹5286.55 கோடியாகும்.

அவற்றின் விபரம் பின் வருமாறு :

# வெளி ஆதாரக் கடன்களின் அளவு

(₹ கோடியில்)

| வ. எண் | உட்கூறுகள் | TNSUDP | SMIF-TN | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | நிலை II பகுதி 1 | நிலை II பகுதி 2 | |
| 1 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான கடன் | 1,225.92 | 329.73 | 460.36 | 2,016.01 |
| 2 | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான மூலதன மானியம் | 1,225.92 | 248.43 | 353.94 | 1,828.29 |
| 3 | மாதிரி நகரங்களுக்கான மானியம் | 389.48 | 0 | 0 | 389.48 |
| 4 | தொழில்நுட்ப உதவி மானியம் | 344.80 | 0 | 22.39 | 367.19 |
| 5 | பங்கு பத்திரம் & மற்றவை | 644.88 | 0 | 40.70 | 685.58 |
| மொத்தம் | | 3,831.00 | 578.16 | 877.39 | 5,286.55 |

### 7.2.1 ஜெர்மன் மேம்பாட்டு வங்கி (KfW) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு (SMIF-TN) திட்டம்

ஜெர்மன் நிதி நிறுவனமான KfW நிதியுதவியுடன் நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு எனும் திட்டம் இரண்டு நிலைகளை கொண்டது (நிலை1 & நிலை 2). இத்திட்டம், சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாத்து நகர்ப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் நிலை டிசம்பர் 2015-ல் நிறைவடைந்தது. இரண்டாவது நிலை இரண்டு பகுதிகளை (பகுதி 1 & பகுதி- 2) கொண்டது.

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு (இரண்டாம் நிலை-பகுதி-1) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹578.16 கோடி (80 மில்லியன் யூரோ) ஆகும். இதன் செயல்பாட்டு கால அளவு டிசம்பர் 2012 முதல்

ஜூன் 2018 வரை ஆகும். இது நகர்ப்புர அடிப்படை வசதி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் மற்றும் மூலதன மானியமாக வழங்குகிறது.

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி - தமிழ்நாடு (இரண்டாம் நிலை - பகுதி 2) திட்டத்தின் மொத்த மதிப்பீடு ₹877.39 கோடி (107.75 மில்லியன் யூரோ). இதில் நகர உட்கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதியுதவியாக ₹814.30 கோடி (100 மில்லியன் யூரோ) கடன் மற்றும் மூலதன மானியமாக நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்கு மானியமாக ₹22.39 கோடி (2.75 மில்லியன் யூரோ) வழங்கப்படும். மூலதனச் சந்தையிலிருந்து நகராட்சிகளுக்கு கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்திற்கு ₹ 40.70 கோடி (5 மில்லியன் யூரோ) கடனாக

வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் செயல்பாட்டு கால அளவு ஜூன் 2014- முதல் டிசம்பர் 2019 வரை ஆகும்.

நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி – தமிழ்நாடு திட்டத்தின், இரண்டாம் நிலை-பகுதி-1 மற்றும் பகுதி-2 திட்டங்களின் கீழ், 33 துணைத்திட்டப் பணிகளுக்காக ₹1389.53 கோடி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### 7.2.2 உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் (TNSUDP)

தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (TNSUDP), உலக வங்கி நிதியுதவியுடன், ₹3831 கோடி (600 மில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்பீட்டில், மார்ச் 2015-ல் தொடங்கப்பட்டது. இதில், உலக வங்கியின் நிதியுதவி ₹ 2554 கோடி (400 மில்லியன் அமெரிக்க டாலர்). தமிழ்நாடு அரசு மற்றும் பிற ஆதாரங்கள் மூலமாக நிதியுதவி ₹1277 கோடி (200 மில்லியன் அமெரிக்க டாலர்). இத்திட்டத்திற்கான கால அளவு ஜூன் 2015 முதல் மார்ச்

2022 வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ், 16 துணை திட்டப் பணிகளுக்காக ₹2483.75 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 7.2.3 ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டுத்திட்டம் (TNUFIP)

புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்திற்கு (TNUFIP) ஆசிய மேம்பாட்டு வங்கியிடமிருந்து (ADB) நிதியுதவி பெறுவதற்கு, ₹4790 கோடி (715 மில்லியன் அமெரிக்க டாலர்) மொத்த மதிப்பீட்டில் கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதில் ஆசிய மேம்பாட்டு வங்கியின் நிதியுதவி ₹3350 கோடி (500 மில்லியன் அமெரிக்க டாலர்). அந்த கருத்துருவை மத்திய அரசு ஏற்று கொண்டு, ஆசிய மேம்பாட்டு வங்கிக்கு (ADB) நவம்பர் 2016-ல் பரிந்துரை செய்துள்ளது.

இத்திட்டம், மூன்று நிலைகளாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் முதல் நிலையின் திட்ட மதிப்பு ₹3066 கோடி (477 மில்லியன் அமெரிக்க டாலர்) ஆகும். இதில், ஆசிய மேம்பாட்டு வங்கியின்

நிதியுதவி ₹1099 கோடி (171 மில்லியன் அமெரிக்க டாலர்). முதல் நிலைக்கான திட்ட மதிப்பீட்டை, ஆசிய மேம்பாட்டு வங்கி அக்டோபர் 2017-ல் நிறைவு செய்தது. இத்திட்டத்திற்கான நிதியுதவியை பெறுவதற்கு தேவையான கடன் ஒப்பந்தம் 2018-2019-ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**7.3. குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF)**

குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) என்ற அறக்கட்டளை, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மற்றும் மூலதனச் சந்தையில் நிதி திரட்டவும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை இலாப நோக்கமற்று செயல்பட்டு வருகிறது.

இந்த நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி உதவியளித்தல்

- கூட்டு நிதி அமைப்பின் கீழ் மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்

- நேரடி, பொது மற்றும் தனியார் துறை கூட்டு முதலீட்டின் மூலம் குடிநீர் மற்றும் கழிவுநீர் துறைகளில் தனியார் பங்களிப்பை ஊக்குவித்தல்

- நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து நேரடியாக நிதி திரட்ட உதவுதல்

- குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மத்திய / மாநில அரசின் நேரடி முகவராக செயல்படுதல்.

நிதி ஆண்டு 2017-2018 இல், வரி விதிக்கத்தக்க பத்திர வெளியீட்டின் மூலமாக, தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்தின் (நிலை 2 - பகுதி 2) கீழ் ₹80 கோடி நிதியை குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் திரட்டியுள்ளது. இதுவரை, ₹302.30 கோடி நிதியை வரி விதிக்கத்தக்க மற்றும் வரியில்லா பத்திர வெளியீட்டின் மூலமாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் பின்வருமாறு திரட்டியுள்ளது:

| வ. எண் | விவரங்கள் | ₹ கோடியில் |
|---|---|---|
| 1. | **9.20 சதவீதம் - 15 ஆண்டுகள் -மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2002 ஆம் ஆண்டு 13 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 30.41 |
| 2. | **7.25 சதவீதம் - 10 ஆண்டுகள் - கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2008 ஆம் ஆண்டு 7 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 6.70 |
| 3. | **7.50 சதவீதம் - 10 ஆண்டுகள் - கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லாத மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2010 ஆம் ஆண்டு 7 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து மத்திய அரசின் கூட்டு நிதி வளர்ச்சி திட்டத்தின் கீழ் வரியில்லா கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 83.19 |
| 4. | **10.60 சதவீதம் - 10 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2012 ஆம் ஆண்டு 10 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் | 51.00 |

| வ. எண் | விவரங்கள் | ₹ கோடியில் |
|---|---|---|
| | பத்திரங்கள் (முதல் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | |
| 5. | **8.71 சதவீதம் - 10 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2013 ஆம் ஆண்டு 10 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் (இரண்டாம் பகுதி) வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 51.00 |
| 6. | **8.25 சதவீதம் - 12 ஆண்டுகள் - மாற்ற இயலாத திரும்பப் பெறத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு** 2017 ஆம் ஆண்டு 4 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் தேவைகளை ஒருங்கிணைத்து தமிழ்நாடு நீடித்த நகர்ப்புர உட்கட்டமைப்பிற்கான நிதியுதவி திட்டத்திற்கு (நிலை 2 - பகுதி2) வரி விதிக்கத்தக்க கடன் பத்திரங்கள் வெளியீடு மூலமாக திரட்டப்பட்ட தொகை | 80.00 |
| மொத்தம் | | 302.30 |

## 7.4. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (Chennai MegaCity Development Mission)

தமிழ்நாடு அரசு, சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு

திட்டங்களை செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் நிதியுதவி வழங்க, பெருநகர வளர்ச்சி திட்டம் (CMCDM) என்ற திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்திற்கான நிதி, ஒவ்வொரு ஆண்டும், அரசின் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டின் வாயிலாக வழங்கப்படும். தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம்(TNUIFSL) இத்திட்டத்திற்கான மைய முகவராக செயல்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த 2011 முதல் 2018 வரை ₹ 2,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், ₹3,209.16 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை செயல்படுத்த மூலதன மானியமாக ₹2492.10 கோடியும் தொழில்நுட்ப மானியமாக ₹7.90 கோடியும் ஒப்பளிக்கப் பட்டுள்ளது. இதில், ₹1981.83 கோடி பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும், ஆலோசனை மற்றும் கட்டணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2018-19 முதல் இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்த 2018-19 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ₹500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7.5 தொழில்நுட்ப உதவி - கழிவு நீர் மறுசுழற்சி சாத்தியக்கூறு ஆய்வு

தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் அரசின் திட்ட மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் கழிவுநீர் மறுசுழற்சி முனையம் அமைக்க சாத்தியக் கூறு அறிக்கை தயாரித்தல் மற்றும் இது தொடர்பாக மாநிலக் கொள்கையை வடிவமைத்தல் ஆகிய பணிகளை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இதன் முக்கிய நோக்கம் மறு சுழற்சிக்கு கிடைக்கும் நீரின் இருப்பை கணக்கீடு செய்தலும், கழிவு நீர் மறுசுழற்சி மூலம் தொழிற்சாலைகள் மற்றும் வேளாண்மை பயன்பாடுகளுக்கு மறுசுழற்சி செய்யப்பட்ட நீரை பயன்படுத்துவது தொடர்பாக மாநிலம் முழுமைக்குமான கொள்கையை வடிவமைப்பதாகும்.

## 8. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை

சென்னை பெருநகரப்பகுதி பல நீர்நிலைகள் மற்றும் மூன்று கிழக்கு நோக்கி பாயும் நதிகளான கூவம், அடையாறு மற்றும் கொசஸ்தலையாற்றை கொண்டுள்ளது. இந்நதிகள் பெருநகரத்தினை கடந்து இறுதியாக வங்கக்கடலை சென்றடைகின்றன. முக்கிய கால்வாயான, பக்கிங்காம் கால்வாய், சென்னை கடலோர பகுதிக்கு இணையாக பயணித்து பெருநகரத்திற்குட்பட்ட நீர்நிலைகளின் சுற்றுச்சூழலில் முக்கியப் பங்காற்றி வருகின்றது. கடந்த சில ஆண்டுகளில் அதிவேக நகர்ப்புர வளர்ச்சியின் விளைவாகவும், நீர்நிலைகளின் முக்கியத்துவம் குறித்த போதிய விழிப்புணர்வு இன்மையாலும், திடக்கழிவுகளை கொட்டுதல் மற்றும் கழிவுநீரை வெளியேற்றுதல் போன்ற செயல்களாலும், சென்னை பெருநகரத்தின் நீர்நிலைகள் மற்றும் ஆறுகள் வெகுவாக பாதிப்படைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு, சென்னை பெருநகரப்பகுதிக்கு உட்பட்ட ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் நிலையை கண்டறிந்து, உரிய சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான திட்டங்களை தயாரித்தல், சார் துறைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் சீரமைப்பு பணிகளை கண்காணித்தல் போன்ற முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கி பல ஆயத்த பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**8.1 அடையாறு கழிமுகப் பகுதியின் சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் - 58 ஏக்கர்**

தமிழ்நாடு அரசு, நகர்ப்புற ஈர நிலங்களை பாதுகாப்பதற்கான முன்னோடித் திட்டமாக, 358 ஏக்கர் பரப்பளவினை கொண்ட அடையாறு நதியின் முகத்துவாரம் மற்றும் உப்பங்கழி சுற்றுச்சூழல் சீரமைப்பு திட்டத்தை உருவாக்கியது. இதன் முதற்கட்டமாக, 58 ஏக்கர் நிலப்பரப்பளவில் உள்ள அடையாறு உப்பங்கழியினை சீரமைக்கும் பணி எடுத்துக்

கொள்ளப்பட்டது. அடையாறு உப்பங்கழி பகுதியில் கழிவுநீர் விடப்பட்டதாலும், நகர திடக்கழிவுகள் மற்றும் கட்டடக்கழிவுகள் கொட்டப்பட்டதாலும், உப்பங்கழியின் நீர் மற்றும் நிலத்தடி நீர் மாசடைந்து, மீன்கள், ஊர்வனங்கள் மற்றும் பறவைகளின் வாழ்விடங்கள் பாதிக்கப்பட்டது. அடையாறு உப்பங்கழி முழுவதும் சீமைக்கருவேல மரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, கொசுக்கள் மற்றும் துர்நாற்றத்தால், அருகில் வசிப்பவர்கள் இப்பகுதியிலிருந்து விலகி இருந்தனர்.

அடையாறு உப்பங்கழி பகுதியை சீரமைப்பிற்கான முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இரண்டு ஆண்டுகளில் முடிவுற்றது ;

(i) கடல் ஓதத்தின் தொடர்பு மற்றும் நீர் பரப்பு பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது.

(ii) உள்ளூர் தாவரங்களான உலர்வெப்ப மண்டல பசுமைமாறாக் காடுகளை சார்ந்த தாவரங்கள், சதுப்புநிலத் தாவரங்கள் மற்றும் அதன் வகையைச் சார்ந்த தாவரங்கள், கோரைப்புற்கள் நடப்பட்டுள்ளன.

(iii) சுற்றுச்சூழல் சார்ந்த கல்வியினை தொடர்புப்படுத்தும் வகையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடையாறு சுற்றுச்சூழல் பூங்கா, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகின்றது. சுற்றுச்சூழல் கல்வியினை சமுதாயத்திற்கு, குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதற்காக, சுற்றுச்சூழல் கல்வி திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2018-ஆம் ஆண்டு மே 20-ந் தேதி வரை 939 பள்ளிகளைச் சேர்ந்த 71,039 மாணவர்கள் மற்றும் 3943 ஆசிரியர்கள், இப்பூங்காவில் நடத்தப்பட்டு வரும் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் பங்குபெற்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவசியத்தினை உணர்ந்து பயனடைந்துள்ளனர். ஆண்டுதோறும், தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) தனது சமூகப் பொறுப்புணர்வு திட்ட (CSR) நிதியின் மூலம், அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு உதவி வருகின்றது.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உயிரின பாதுகாப்பு குறித்து, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை பொதுமக்கள் உணர்ந்திடும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவை பார்வையிட ஆர்வமுள்ள பொதுமக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவினை, 2014-ஆம் ஆண்டு ஜூலை முதல் 2018-ஆம் ஆண்டு மே 20-ந் தேதி வரை, 6655 நபர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.

இச்சீரமைப்பினால் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்வதற்காக சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் குறித்த கண்காணிப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் வழிக்காட்டு விதிமுறைகளை ஒப்பிடுகையில், அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவின் நீரின் தரம் 'வகுப்பு D' பிரிவின் கீழ் உள்ளது. இப்பிரிவின்படி தண்ணீரில் மீன்கள் மற்றும் பிற

உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் உள்ளமையால், சீரமைப்பின் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது.

**அடையாறு சுற்றுச்சூழல் பூங்காவில் காணப்படும் பல்லுயிரிகள்**

| விலங்குகள் | 2007-08 | 2009-10 | 2011-12 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மெல்லுடலிகள் | - | - | - | 6 | 6 | 6 | 8 | 8 |
| நண்டுகள் | - | - | 4 | 9 | 9 | 9 | 9 | 13 |
| பூச்சிகள்<br>அ) தும்பிகள் | - | - | 12 | 15 | 17 | 19 | 25 | 25 |
| ஆ) பட்டாம் பூச்சிகள் | - | - | 51 | 55 | 56 | 60 | 73 | 73 |
| இ) மற்ற பூச்சி யினங்கள் | - | - | - | - | - | - | - | 52 |
| மீன்கள் | 14 | 27 | 27 | 10 | 10 | 6 | 10 | 10 |
| இருவாழ்விகள் | 7 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| ஊர்வன | 19 | 19 | 19 | 19 | 19 | 19 | 19 | 19 |
| பறவைகள் | 88 | 90 | 98 | 100 | 97 | 99 | 103 | 105 |
| பாலூட்டிகள் | 13 | 13 | 13 | 15 | 15 | 16 | 16 | 16 |
| மொத்தம் | 141 | 159 | 234 | 239 | 239 | 244 | 273 | 331 |

## 8.2 அடையாறு முகத்துவார சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம்

அடையாறு உப்பங்கழி, முகத்துவாரம், சிறு தீவுகள், மணல் திட்டுகள் மற்றும் அதனை சுற்றியுள்ள 300 ஏக்கர் பரப்பளவிலான பகுதிகளில், சீமைக்கருவேல மரங்கள், குப்பைகள் மற்றும் கட்டடக்கழிவுகள், கழிவு நீர் கலப்பது ஆகியவற்றால் கழிமுக சுற்றுச்சூழல் மிகவும் பாதிப்படைந்ததின் விளைவாக நீர்ப்பரப்பு பகுதி குறைந்து, கடல் நீர் ஓதத்தின் தொடர்பு குறைந்து மற்றும் பல்லுயிர் பெருக்கம் பெரிதும் பாதிப்படைந்தது.

அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப்பகுதியின் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக, சீமைக்கருவேல மரங்கள் மற்றும் முட்புதர்கள் அகற்றப்பட்டு, அடையாறு உப்பங்கழி மற்றும் கழிமுகப்பகுதியின் கரைகள் திடப்படுத்தப்பட்டுள்ளன. நெகிழி மற்றும் கட்டடக்கழிவுகளை அகற்றி, உப்பங்கழியில் மிதக்கின்ற மட்காத பொருட்கள் மற்றும் சகதிகளை அப்புறப்படுத்தி, கடல் ஓதத்தின் தொடர்பு

மற்றும் நீர் பரப்பு பகுதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதில் பிராந்திய நிலவாழ் கடற்கரைத் தாவரங்கள் 35,000 மற்றும் 57,000 சதுப்புநிலத் தாவரங்கள் நடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு அக்டோபரில் இச்சீரமைப்பு பணிகள் முழுமையாக நிறைவு பெற்று, தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 8.3 ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத்திட்டம்

கூவம் நதி, திருவள்ளூர் மாவட்டம் கூவம் ஏரியில் தொடங்கி சுமார் 70 கிலோ மீட்டர் பயணித்து புனித ஜார்ஜ் கோட்டையின் தென்பகுதியிலுள்ள நேப்பியர் பாலத்தின் கீழ்நோக்கி சென்று இறுதியாக வங்கக்கடலை சென்றடைகிறது.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டம் சென்னை ஆவடி அருகேயுள்ள பருத்திப்பட்டு அணையிலிருந்து முகத்துவாரம் வரையிலான (32 கி.மீ) கூவம் நதி பகுதிகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாக, கழிவுநீர் கூவம்

நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்தி பராமரித்தல், கூவம் நதிக் கரையில் வாழும் மக்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான திட்டமிடல், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டு சுற்றுச்சூழலை மேம்படுத்தி நதியின் கரையோரங்களில் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டப் பணிகள் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படவுள்ளது. குறுகிய கால திட்டப்பணிகள் மூன்று ஆண்டுகள் நடைபெறும். முதற்கட்டமாக சுமார் 60 துணைத்திட்டங்களைக் கொண்ட குறுகிய கால திட்டப்பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ₹604.77 கோடிக்கான நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இச்சீரமைப்பு பணிகள், தொடர்புடைய சார்துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பொதுப்பணித்

துறையினரால் எல்லைகளை வரையறை செய்து எல்லை கல் நடுதல், தூர்வாருதல் மற்றும் சிறு கால்வாய் அமைத்தல், கரைகளை பலப்படுத்துதல், பெருநகர சென்னை மாநகராட்சியால் திடக்கழிவு அகற்றுதல், பாதுகாப்பு வேலி, மிதவை தடுப்பான் அமைத்தல் மற்றும் பூங்காக்கள் அமைத்தல், ஆற்றின் கரையோரங்களில் மிதிவண்டித் தடங்கள் மற்றும் நடைப்பாதைகள் ஏற்படுத்துதல்; நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தால் திடக்கழிவு அகற்றல், ஆற்றின் கரையோரங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல் மற்றும் மரக்கன்றுகள் நடவு செய்தல்; சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கழிவுநீரை இடைமறித்தல் மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கான மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டங்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால்

அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை பல்வேறு துணைத் திட்டங்களை செயல்படுத்தவும் கண்காணிக்கவும் திட்ட மேலாண்மை ஆலோசகரை நியமனம் செய்து சதுப்பு நிலங்களை மேம்படுத்துதல் மற்றும் தாவரங்களை நடுதல் சமுதாய சுற்றுச்சூழல் கல்வித்திட்டத்தினை தொடர்ந்து நடத்துதல் போன்ற பணிகளை செய்து வருகிறது.

₹604.77 கோடி மதிப்பீட்டிற்கான பணிகளில், ₹199.40 கோடிக்கு பணிகள் சார்துறைகளால் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், ₹33.95 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு சார்துறைகளால் பணியாணை வழங்கப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படவுள்ளன. ₹132.49 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை, இச்சீரமைப்பு திட்டத்திற்காக ₹134.44 கோடி சார் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 8.4 அடையாறு நதியின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரை சீரமைப்பதற்கான மூன்றாம் கட்டப்பணியின் பெருந்திட்டம்

அடையாறு நதி, கூடுவாஞ்சேரி அருகே உள்ள ஆதனூர் ஏரியில் தொடங்கி, திருநீர்மலை அருகில் செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் கலந்து சுமார் 42 கிலோ மீட்டர் தூரம் காஞ்சிபுரம் மற்றும் சென்னை மாவட்டங்களில் பாய்ந்து வங்கக்கடலில் கலக்கிறது.

நகரமயமாதலின் விளைவாக நீண்ட காலமாக அடையாறு நதியின் சுற்றுச்சூழல் மிகவும் மாசடைந்துள்ளது. ஆகவே, அடையாறு நதியின் தொடக்கமான ஆதனூர் ஏரி முதல் முகத்துவாரம் வரை சீரமைக்க பெருந்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் முக்கிய கூறுகள், கழிவுநீர் நதியில் கலப்பதை தடுக்க மாற்று ஏற்பாடுகளை செய்தல், திடக்கழிவு மேலாண்மை, நதியின் வெள்ளநீர் கொள்ளளவை மேம்படுத்துதல், மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான பணிகள், பல்லுயிர் பெருக்கத்தை அதிகரித்தல் மற்றும்

நதியின் கரையோர மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை ஆகும்.

தமிழ்நாடு அரசு, இத்திட்டத்தினை செயல்படுத்த ₹555.46 கோடி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

அடையாறு நதி சீரமைப்பின் துணைத்திட்டங்கள் பொதுப்பணித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை ஆகிய சார் துறைகளின் மூலம் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

அடையாறு நதியின் முகத்துவாரத்திலிருந்து சைதாப்பேட்டை பாலம் வரையில் (7.5 கி.மீ) உள்ள பகுதி கடல்சார் ஒழுங்குமுறை மண்டலத்திற்கு உட்பட்டுள்ளதால், இப்பகுதியில் சுமார் 15 துணை

திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு கடல்சார் ஒழுங்குமுறை மண்டல ஆணையத்தின் அனுமதியினை பெறுவதற்கு ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டு, விரைவு சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இச்சீரமைப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு சார் துறைகளால் மேற்கொள்ளப்படும் 55 துணை திட்டங்களை கண்காணிப்பதற்கான திட்ட மேலாண்மை ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

## 8.5 நீர்நிலைகள் மற்றும் நீர்வழிகள் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை

தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சுற்றுச்சூழல் சீரமைப்புத் திட்டங்களின் ஒரு பகுதியாக, சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட கீழ்காணும் நீர்நிலைகள் மற்றும் நீர்வழிப்பாதைகளை சீரமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன;

1) கூவம் வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல்,

இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

2) அடையாறு வடிநில பகுதிகளில் உள்ள பிரதான நீரோடைகளில் கழிவுநீர் கலப்பதை தடுத்தல், இடைமறித்து மற்றும் மாற்று வழிகளை அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

3) சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட எண்ணூர் கழிமுகப் பகுதி முதல் முட்டுக்காடு உவர்நீர் பகுதி வரை பக்கிங்காம் கால்வாயில் கலக்கும் பிரதான நீரோடைகளை சீரமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

4) கோவளம் கழிமுகப் பகுதி சீரமைப்பிற்கான பெருந்திட்ட அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

5) எண்ணூர் கழிமுகப் பகுதி சீரமைப்பிற்கான பெருந்திட்ட அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

6) சென்னை பெருநகரப் பகுதிக்குட்பட்ட பீர்க்கன்கரணை ஏரி சுற்றுச்சூழல் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பதற்கான பெருந்திட்ட அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்

## 9. தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டுபிட்கோ) 21.03.1990-இல் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. துவக்கப்பட்ட நாளிலிருந்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்புகளின் ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதி அளிப்பதில் டுபிட்கோ நிறுவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதுமட்டுமல்லாமல், டுபிட்கோ நிறுவனம் மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்களான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் - நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் ஆளுகைக்கான திட்டம் (Jawaharlal Nehru National Urban Renewal Mission – Urban Infrastructure and Governance), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Small and Medium

Towns), துணை நகரங்களில் நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (Urban Infrastructure Development Scheme for Satellite Towns), பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (Metropolitan Infrastructure Development Fund) மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (Integrated Urban Development Mission) ஆகியவற்றினை செயல்படுத்தும் முகமையாகவும் உள்ளது.

டுபிட்கோ நிறுவனம் மூலதன மானிய நிதி (Capital Grant Fund), இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&MGFF) ஆகியவற்றின் நிதி மேலாளராகவும் செயல்படுகிறது.

டுபிட்கோ நிறுவனம் 2015 ஆம் ஆண்டு முதல் சீர்மிகு நகரத்திட்டம் (Smart Cities Mission) மற்றும் அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றங்களுக்கான திட்டம் (Atal Mission for Rejuvenation and Urban Transformation) ஆகிய மத்திய அரசின் முன்னோடித் திட்டங்களுக்கு திட்ட இயக்குநரகமாக செயல்படுகிறது.

### 9.1. சீர்மிகுநகரத் திட்டம்

சீர்மிகு நகரத்திட்டத்தின் நோக்கமானது தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததிகளின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுசூழல் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிறவழிகளை பயன்படுத்தி மக்களின் வாழ்க்கை தரம் உயர்த்தப்படவும், நகரத்தின் செயல்பாட்டினை செம்மைப்படுத்துவதும், நகர்ப்புர சேவை மற்றும் போட்டியிடும் திறனை மேம்படுத்துவதும் ஆகும். மத்திய அரசு போட்டி தேர்வு அடிப்படையில் 99 நகரங்களை சீர்மிகு நகரங்களாக உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்டதில் தமிழகத்திலிருந்து 11 நகரங்கள் தேர்வாகியுள்ளன. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகியவை சீர்மிகு நகரங்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.

மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து 50:50 விழுக்காடு பங்கு விகிதத்தில் நகர

அளவில் ஒரு வரையறுக்கப்பட்ட சிறப்பு நோக்க நிறுவனம் மூலம் இத்திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகளை செயல்படுத்த ஒவ்வொரு நகரத்திற்கும் மத்திய அரசின் நிதி உதவியாக ₹500 கோடியும் மாநில அரசின் மானியமாக ₹500 கோடியும் கிடைக்கப்பெறும்.

11 நகரங்களுக்காக சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ₹11394.13 கோடி முதலீடு செய்ய உள்ளன. நகர வாரியான திட்டங்களின் விவரம் பின்வருமாறு.

| வ எண் | நகரத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 36 | 1047.86 |
| 2 | கோயம்புத்தூர் | 23 | 1127.72 |
| 3 | மதுரை | 16 | 1000.00 |
| 4 | தஞ்சாவூர் | 19 | 955.01 |
| 5 | சேலம் | 22 | 1418.32 |
| 6 | வேலூர் | 21 | 983.44 |
| 7 | திருப்பூர் | 19 | 1003.98 |
| 8 | தூத்துக்குடி | 21 | 743.60 |
| 9 | திருநெல்வேலி | 30 | 986.18 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 18 | 1193.08 |
| 11 | ஈரோடு | 17 | 934.94 |
| | மொத்தம் | 242 | 11394.13 |

## 9.2. அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டம் (AMRUT)

வீடுகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் நகரங்களுக்கு தேவையான வசதிகளை உருவாக்கி தரவும் மேலும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் குறிப்பாக ஏழை மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டமானது (AMRUT) ஜுன் 25ஆம் நாள், 2015 அன்று 500 நகரங்களில் துவக்கப்பட்டது. குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி மற்றும் கழிவு நீர் கசடு அகற்றும் மேலாண்மை, மழை நீர் வடிகால் வசதி, நகர போக்குவரத்து வசதிகள் அமைத்தல், பசுமை மற்றும் திறந்த வெளி பகுதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றை உறுதிசெய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின் கீழ் (AMRUT) நிதி பெற

பின்வரும் 12 மாநகராட்சிகள், 15 நகராட்சிகள் மற்றும் 1 பேரூராட்சி (28 நகரங்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

| வ.எண் | உள்ளாட்சியின் பெயர் | வ.எண் | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 15 | தாம்பரம் பெருநகராட்சி |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 16 | கடலூர் நகராட்சி |
| 3 | மதுரை மாநகராட்சி | 17 | காஞ்சிபுரம் பெருநகராட்சி |
| 4 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | 18 | ஆவடி பெருநகராட்சி |
| 5 | சேலம் மாநகராட்சி | 19 | திருவண்ணாமலை நகராட்சி |
| 6 | திருநெல்வேலி மாநகராட்சி | 20 | கும்பகோணம் நகராட்சி |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | 21 | இராஜபாளையம் நகராட்சி |
| 8 | தூத்துக்குடி மாநகராட்சி | 22 | புதுக்கோட்டை நகராட்சி |
| 9 | தஞ்சாவூர் மாநகராட்சி | 23 | ஓசூர் நகராட்சி |
| 10 | ஈரோடு மாநகராட்சி | 24 | ஆம்பூர் நகராட்சி |
| 11 | வேலூர் மாநகராட்சி | 25 | காரைக்குடி நகராட்சி |
| 12 | திண்டுக்கல் மாநகராட்சி | 26 | நாகப்பட்டினம் நகராட்சி |

| வ.எண் | உள்ளாட்சியின் பெயர் | வ.எண் | உள்ளாட்சியின் பெயர் |
|---|---|---|---|
| 13 | நாகர்கோவில் நகராட்சி | 27 | இராமேஸ்வரம் நகராட்சி |
| 14 | பல்லவபுரம் நகராட்சி | 28 | வேளாங்கன்னி பேரூராட்சி |

### 9.2.1 நிதிப் பங்கீட்டு முறை

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான திட்ட மதிப்பின் பங்கு விகித விவரம் பின்வருமாறு.

| வ.எண் | மக்கள் தொகை | மத்திய அரசின் பங்கு - மானியம் | மாநில அரசின் பங்கு - மானியம் | நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 33.33% | 20% | 46.67% |
| 2 | 10 இலட்சத்திற்கு கீழ் மக்கள் தொகைக் கொண்ட நகரங்கள் | 50% | 20% | 30% |
| 3 | பசுமை பகுதி அமைத்தல் (அனைத்து அம்ரூத் நகரங்கள்) | 50% | 20% | 30% |

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் ₹11672.68 கோடி மதிப்பீட்டில் 445 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. ஒப்புதல் வழங்கப்பட்ட 445 திட்டங்களில் 159 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சியுள்ள 286 திட்டங்கள் பல்வேறு நிலையில் செயல்பாட்டில் உள்ளன.

மாநில ஆண்டு செயல் திட்டம் I (2015-16), II (2016-17) மற்றும் III (2017-20) – இன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின் விவரம் பின்வருமாறு.

மாநில ஆண்டு செயல் திட்டம் I (2015-16)

| **வ எண்** | **உள்ளாட்சி அமைப்பின் பெயர்** | **திட்டத்தின் பெயர்** | **திட்ட மதிப்பீடு (₹கோடியில்)** |
|---|---|---|---|
| 1 | ஆம்பூர் நகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 50.90 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி | விரிவாக்கப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் (துடியலூர், வெள்ளைக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காலப்பட்டி, குனியமுத்தூர் மற்றும் குறிச்சி) | 395.41 |

| வ எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹கோடியில்) |
|---|---|---|---|
| 3 | ஈரோடு மாநகராட்சி | குடிநீர் வழங்கல் திட்டம் | 484.45 |
| 4 | ஓசூர் நகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 87.91 |
| 5 | நாகர்கோவில் நகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 223.44 |
| 6 | இராஜபாளையம் நகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 180.05 |
| 7 | தஞ்சாவூர் மாநகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 48.14 |
| 8 | திருப்பூர் மாநகராட்சி | விரிவாக்க பகுதிகளுக்கு குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 250.00 |
| 9 | வேலூர் மாநகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 234.93 |
| 10 | சென்னை | நீராதாரத்தை மேம்படுத்துதல் (வேளச்சேரி, ஆலந்தூர், உள்ளகரம் புழுதிவாக்கம், மேடவாக்கம், கோவிளம்பாக்கம், நன்மங்கலம் மற்றும் மூவரசம்பேட்டை) | 954.00 |
| 11 | வேளாங்கன்னி பேரூராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | 23.32 |
| 12 | சென்னை மாநகராட்சி | 45 MLD TTRO Plant – கொடுங்கையூர் | 223.91 |
| 13 | பல்லவபுரம் | விடுபட்ட பகுதிகளுக்கு | 381.86 |

| வ எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹கோடியில்) |
|---|---|---|---|
| | நகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | |
| 14 | 25 அம்ரூத் நகரங்கள் | பூங்காக்கள் – 98 எண்ணிக்கை | 63.67 |
| | | மொத்தம் | 3245.50 |

மாநில ஆண்டு செயல் திட்டம் II (2016-17)

| வ எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி | 24 x 7 குடிநீர் வழுங்கல் | 506.04 |
| 2 | சென்னை | இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் திட்டம் (உத்தண்டி, ஜல்லடம்பேட்டை, மாத்தூர், மடிப்பாக்கம் மற்றும் நீலாங்கரை) | 184.11 |
| 3 | சென்னை | குடிநீர் வழங்க நீராதாரத்தை மேம்படுத்துதல் | 125.89 |
| 4 | கும்பகோணம் நகராட்சி | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் | 40.50 |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | 442.00 |
| 6 | வேலூர் | பாதாளச்சாக்கடை | 248.26 |

| வ எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹கோடியில்) |
|---|---|---|---|
| | மாநகராட்சி | திட்டம் - முதலாம் கட்டம் | |
| 7 | வேலூர் மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம்- இரண்டாம் கட்டம் | 343.69 |
| 8 | சென்னை | பாதாளச்சாக்கடை திட்டம் (மணலி, சின்ன சேக்காடு, காரம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம்) | 223.00 |
| 9 | சென்னை | 45 MLD TTRO Plant கோயம்பேடு | 394.00 |
| 10 | கும்பகோணம் நகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் - விடுபட்ட பகுதிகளுக்கு | 59.84 |
| 11 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம்- முதலாம் கட்டம் | 344.00 |
| 12 | திருநெல்வேலி மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் - இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு | 289.01 |
| 13 | திருநெல்வேலி மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் பகுதி - இரண்டாம் கட்டம் | 381.86 |
| 14 | இராமேஸ்வரம் நகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | 40.33 |
| 15 | 25 அம்ரூத் நகரங்கள் | பூங்காக்கள்– 157 எண்ணிக்கை | 77.95 |
| | | மொத்தம் | 3700.48 |

மாநில ஆண்டு செயல் திட்டம் III (2017-2020)

| வ எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (₹கோடியில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி | பில்லூர் 3 குடிநீர் வழங்கல் திட்டம் | 649.30 |
| 2 | மதுரை மாநகராட்சி | குடிநீர் வழங்கல் திட்டம் | 1128.00 |
| 3 | திருப்பூர் மாநகராட்சி | குடிநீர் வழங்கல் நீராதாரத்தை மேம்படுத்துதல் | 992.94 |
| 4 | சென்னை | குடிநீர் வழங்கலை மேம்படுத்துதல் - வளசரவாக்கம் | 67.74 |
| 5 | ஆம்பூர் நகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | 129.07 |
| 6 | இராஜபாளையம் நகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | 178.75 |
| 7 | திருப்பூர் மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் | 525.92 |
| 8 | சென்னை | பாதாளச்சாக்கடை திட்டம் | 700.00 |
| 9 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | பாதாளச்சாக்கடை திட்டம் 2ஆம் கட்டம் | 264.12 |
| 10 | 25 அம்ரூத் நகரங்கள் | பூங்காக்கள் 154 எண்ணிக்கை | 90.85 |
| | | மொத்தம் | 4726.00 |

### 9.3. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (MIDF)

சென்னை பெருநகரப் பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு பெருநகர திட்ட சுழற்சி நிதியிலிருந்து உருவான பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டுநிதி (MIDF) டுபிட்கோவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் மாநில அளவிலான ஒப்புதல் குழுவால் ₹ 4342.65 கோடி மதிப்பீட்டில் 34 திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது மற்றும் பெருநகர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் பங்களிப்பு தொகை ₹1156.47 கோடியாகும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும் தன்னாட்சி நிறுவனங்களுக்கும் மிக குறைந்த வட்டி விகிதத்தில் இந்நிதியிலிருந்து கடனுதவி அளிக்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட 34 திட்டங்களில், 26 திட்டங்கள் ஏற்கனவே நிறைவுற்றுள்ளன. மீதமுள்ள 8 திட்டங்கள் பல்வேறு நிலையில் உள்ளன.

## 9.4. டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம்

அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க டுபிட்கோ உட்கட்டமைப்பு வசதி நிதித் திட்டம் டுபிட்கோவில் உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் துணை நிறுவனங்களின் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நீண்டகால மற்றும் குறுகிய கால கடனுதவி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம், டுபிட்கோ நிறுவனத்தின் பங்கு மூலதனம், சேமநிதி, உபரிநிதி மற்றும் வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் ஆகியவையாகும்.

2017-18 ஆம் ஆண்டில் ₹96.21 கோடி மதிப்பீட்டிலான 3 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டன.

## 9.5. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் (IUDM)

2011-12ல் தொடங்கப்பட்ட மாநில அரசின் முன்னோடி திட்டமான ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமானது எல்லா மாநகராட்சிகள்

(சென்னை நீங்கலாக), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலும் அடிப்படை உள்கட்டமைப்புகளான சாலைகள், குடிநீர் வசதி, தெரு விளக்குகள், கழிவுநீர் அகற்றல், மழைநீர் வடிகால், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல், மற்றும் பூங்காக்கள் போன்றவற்றை மேம்படுத்துவதே ஆகும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் தேவைப்படும் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, ₹10,773.22 கோடி மதிப்பீட்டில் 13,445 திட்டங்களுக்கு ஒப்புதல் (முழு நிதி / பகுதி நிதி) வழங்கப்பட்டுள்ளன.

இதன் விவரம் பின்வருமாறு.

(₹ கோடியில்)

| திட்டப்பணிகள் | மொத்த திட்டங் கள் | திட்ட மதிப்பீடு | பிற திட்டங்களின் நிதி / உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு | ஒருங்கி ணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தின் பங்கு |
|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கல் | 1061 | 3900.83 | 2558.47 | 1342.36 |
| பாதாளசாக்க டை | 66 | 4589.96 | 3587.92 | 1002.04 |
| சாலைகள் | 3713 | 923.13 | 82.51 | 840.62 |

| | | | | |
|---|---|---|---|---|
| மழைநீர் வடிகால் | 2078 | 366.42 | 63.24 | 303.18 |
| திடக்கழிவு மேலாண்மை | 1091 | 231.30 | 4.93 | 226.37 |
| தெரு விளக்குகள் | 2963 | 551.80 | 315.87 | 235.93 |
| திறந்தவெளி மலம் கழித்தலை ஒழிக்கும் திட்டம் | 2066 | 160.10 | 105.65 | 54.45 |
| மற்றவைகள் | 407 | 49.68 | 6.44 | 43.24 |
| மொத்தம் | **13445** | **10773.22** | **6725.03** | **4048.19** |

ஒப்புதல் வழங்கப்பட்ட 13,445 திட்டங்களில் 13,169 திட்டங்கள் நிறைவுற்றுள்ளன. எஞ்சிய திட்டங்கள் செயலாக்கத்தின் பல்வேறு நிலையில் உள்ளன. ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டமானது மீண்டும் துவக்கப்பட்டு 2018-2019 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ₹750 கோடி ஒதுக்கப்பட்டது.

**9.6. அரசு திட்டப் பணிகளுக்கான நிதி மேலாண்மை**

தமிழக அரசு மாநிலத்தில் உள்ள நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும்

நோக்கோடு, மூலதன மானிய நிதி (Capital Grant Fund), இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி (O&MGFF) போன்ற திட்டங்களை நிறுவி, மேற்கண்ட திட்டங்களின் நிதியை கையாள டுபிட்கோ நிறுவனத்தை நியமித்துள்ளது.

அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டதற்கிணங்க, மூலதன மானிய நிதியின் கீழ் (Capital Grant Fund) ₹315.01 கோடி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் (O&MGFF) ₹125.04 கோடியும் 2017-18ம் ஆண்டில் விடுவிக்கப்பட்டது.

## 11. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், 1995-ல் முன்னாள் தமிழ்நாடு அரசு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தால் (TACID) தொடங்கப்பட்டது. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம், திருப்பூர் நகராட்சி, அதன் சுற்றுப்புற பகுதிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, நீர் மற்றும் பாதாளசாக்கடை திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்கோடு தமிழ்நாடு அரசால் ஒரு சிறப்பு நோக்கு நிறுவனமாக 20.06.2002-ல் தொடங்கப்பட்டது. இந்த சிறப்பு நோக்கு நிறுவனத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, உட்டகட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவைகள் நிறுவனத்தின் (IL&FS), 54% பங்குகளுடனும், தமிழ்நாடு அரசின் 46% பங்குகளுடனும் தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) உருவாக்கபட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, திருப்பூர் நகராட்சி (தற்போது மாநகராட்சி) மற்றும் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் சேர்ந்து நாள் ஒன்றிற்கு 185 மில்லியன் லிட்டர்

(MLD) குடிநீர் வழங்கவும் மேலும் 250 (MLD) மில்லியன் லிட்டராக உயர்த்தத்தக்க திட்டத்தை அமலாக்கம் செயவதற்கான சலுகை ஒப்பந்தம் ஒன்றினை செய்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவு தொகை ₹1023 கோடியாகும். அதில் 15 தனியார் நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட அசல் சமபங்கு தொகை ₹ 322.70 கோடியாகும் மற்றும் 19 வங்கி மற்றும் நிதிநிறுவனங்கள் தொகுப்பின் மூலம் மொத்தக் கடனாக பெறப்பட்ட தொகை ₹613.80 கோடியாகும் மற்றும் இரண்டாம் தர கடனாக அளித்த தொகை ₹ 86.50 கோடியாகும்.

திருப்பூர் மாநகராட்சியில் சுமார் 38.957 MLD, குடிநீர் வழங்கவும் 8 ஊராட்சிகள் மற்றும் 5 சார்பு ஒன்றியங்களுக்குட்பட்ட சுமார் 600 கிராமப்புர குடியிருப்புகளுக்கு சுமார் 18.26 MLD குடிநீர் வழங்கவும் இத்திட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இதைத்தவிர, இத்திட்டம் திருப்பூர் மற்றும் அதை சுற்றியுள்ள பல்வேறு நூலாடை நிறுவனங்கள், சாயப்பட்டறை மற்றும் அதைச் சார்ந்த செயலாக்க

தொழிற்சாலைகளின் தேவையையும் பூர்த்தி செய்கிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சியின் பெரும்பாலான பகுதிகளில் 15 MLD திறனுள்ள பாதாள கழிவுநீர் அகற்றும் அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. தற்போது 15,246 பாதாள கழிவு நீர் இணைப்புகள் மூலம் பெறப்படும் சுமார் 8 MLD பாதாள கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. மேலும், திருப்பூர் மாநகராட்சிக்குப்பட்ட நகர்ப்புற ஏழைமக்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறை வசதிகள், 31 சுகாதார வளாகங்கள் மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2005 ஆம் ஆண்டு முதல் திருப்பூர் மாநகராட்சி மற்றும் அதை சுற்றி உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கி வருகிறது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் 31.01.2011 நாளிட்ட ஆணைப்படி பல்வேறு சாய மற்றும் வெளுத்தல் பட்டறைகள் / தொழிற்சாலைகள் மூடப்பட்டதாலும், வீணாகும் தண்ணீரை மறுசுழற்சி செய்து உபயோகம் செய்வதற்கான பொது கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் கொண்டுவரப்பட்டதாலும், திருப்பூர் மாவட்டத்தில்

தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரின் அளவு பிப்ரவரி 2011 முதல் வெகுவாக குறைந்துவிட்டது. இதன் காரணமாக, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின் தொழிலில் ஒரு சுணக்கத்தையும் அதன் காரணமாக வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை காலத்துடன் செலுத்துவதில் சிரமத்தையும் சந்திக்க நேரிட்டது. இந்த நிதிப்பற்றாக்குறை 2011-2012-ல் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் சமாளிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி கடனுதவி செய்த நிதிநிறுவனங்கள் கடனை மறு பரிசீலனை செய்து, கடனுக்கான வட்டிவிகிதத்தை குறைத்தும், 15% கடன் தொகையினை சமபங்குகளாக மாற்றியும், மேலும் அரசாங்கம் கூடுதலாக நாள் ஒன்றிற்கு 100 மில்லியன் லிட்டர் வரை குடிநீரை பொது மக்களின் வீட்டு உபயோகத்திற்காக இந்நிறுவனம் மூலம் வாங்கிக் கொள்ளவும் வழிமுறைகள் செய்யப்பட்டன. மேலும் அரசாங்கம் ₹150 கோடி சமபங்குகளை இத்திட்டதில் உள்முதலீடு செய்துள்ளது. தற்சமயம் இந்நிறுவனத்தின் மூலம் கூடுதலாக நாள்

ஒன்றிற்கு 54 மில்லியன் லிட்டர் குடிநீரை திருப்பூர் மாநகராட்சிக்கும் மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு 11 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்திற்கு திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு வெளியே அமைந்துள்ள குறிப்பிட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக அமைப்பினை விரிவாக்கம் செய்ய அனுமதி அளித்துள்ளது. அதன்படி, இந்நிறுவனம் திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் பகுதியிலும், ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை பகுதியிலும், வாடிக்கையாளர்களைஅடையாளம் கண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்களை ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த ஈரோடு, பெருந்துறை, சென்னிமலை மற்றும் ஊத்துக்குளி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளுக்குட்பட்ட 68 கிராம பஞ்சாயத்துக்களைச் சார்ந்த 461 குடியிருப்புகளுக்கு கோணவாய்க்கால், கங்காபுரம், வாவிக்கடை, சரளை, பெருந்துறை, விஜயமங்கலம், பல்லக்கவுண்டம்பாளையம்,

செங்கப்பள்ளி, சர்க்கார் பெரியபாளையம், அக்ரஹாரப் பெரியபாளையம் ஆகிய இடங்களில் இருந்து குடிநீர் வழங்க திட்டப்பணிகளை நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம் 11 MLD குடிநீர் கூடுதலாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 65 MLD குடிநீர் கூடுதலாக திருப்பூர் மாநகராட்சி, ஊராட்சிகள் மற்றும் சுற்றுப்புற வழியோர கிராமங்களின் தேவைகளுக்காக இத்திட்டத்தின் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தற்சமயம் விநியோகம் செய்யப்படும் 40 MLD தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

2015-2016 ஆண்டு முதல் இந்த நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. தமிழகஅரசின் சமபங்கு முதலீடு, திருப்பூர் மாநகராட்சி மற்றும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளால் நாள் ஒன்றிற்கு 65 மில்லியன் லிட்டர் தண்ணீரை கூடுதலாக வாங்குவது, நிறுவனத்தின் சேவை பகுதியை விரிவுபடுத்தி திருப்பூர் உட்கட்டமைப்பு பகுதிக்கு

வெளியே அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கும் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்ட செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இந்நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு சாதகமாக அமைந்துள்ளன. இதனால், இந்நிறுவனமானது தனது சேவையை திருப்பூர் மாவட்டம் மற்றும் புறநகர் பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்து தனது சேவையை தொடர்ந்து செய்து வருகிறது.

திருப்பூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்வதில் திருப்பூர் மாநகராட்சிக்கு, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் உதவி செய்துள்ளது. இந்த திட்ட அறிக்கை "அம்ருத்" திட்டதின் ஒரு பகுதியாக மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனமானது குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளை உள்ளடக்கிய புதிய திருப்பூர் குடிநீர் திட்டத்தினை (185 MLD, ₹ 1023 கோடி) தனியார் பங்களிப்புடன் இணைந்து செயல்படுத்துவதற்காக தனிபட்ட நோக்கம் கொண்ட நிறுவனமாக தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் இரு முக்கிய பங்குதாரர்களாக தமிழ்நாடு அரசும், உட்கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவை (IL & FS) நிறுவனமும் உள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் தொழிற்சாலை கழிவுப்பொருள் மேலாண்மை மற்றும் நகர்ப்புர நீர் மேலாண்மை ஆகியவற்றில் இந்த நிறுவனம் முன்னணி இடத்தை அடைந்துள்ளது. மேலும், கழிவு நீர் வெளியேற்ற தொழில்நுட்பம் மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது. இதில் அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை அவர்களை தலைவராகவும், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, தொழில் துறை மற்றும் நிதித்துறை ஆகியவற்றின் மூத்த அதிகாரிகளை இயக்குநர்களாகவும் அரசு நியமனம் செய்துள்ளது. மேலும் சுயேச்சை இயக்குநர்கள் நான்கு பேர் உட்பட மொத்த இயக்குநர்களின் எண்ணிக்கை 12 ஆக உள்ளன. இந்நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகள் இயக்குநர்களின் வழிகாட்டுதலுடன் முதன்மை செயல் அலுவலரின் மூலம் நடைபெறுகிறது. இந்நிறுவனம், தொழில்நுட்ப வடிவமைப்பு மேம்பாடு, குடிநீர் வழங்கல், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் திட்டங்களின் செயல்பாடு, கண்காணிப்பு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. தமிழக அரசின் கொள்கை முயற்சிகளான நகர்புர குடிநீர் வழங்கல், கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் கடல் நீரை குடிநீராக்குதல் ஆகியவற்றினை செயல்படுத்த உரிய வருவாய் மாதிரிகள் மற்றும் தரமான மனித ஆற்றலை இந்நிறுவனம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 பிரிவு 16 (f) ன் கீழ் இந்நிறுவனம் பங்கேற்கும் ஆலோசனை கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு விலக்கு அளித்து அதனை தமிழ்நாடு அரசின் அரசிதழில் அறிவிப்பு எண். 333, நாள்: 17.10.2017-ல் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம் தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தில் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு 46% மூலதன பங்குகள் உள்ளன.

இந்நிறுவனத்தில் 2018-19-ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் மூன்று சிறப்புவணிக அலகுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு

(அ) சாயக்கழிவுகளுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு செய்து பூஜ்ஜிய அளவு கழிவுநீர் வெளியேற்றம் மற்றும் பராமரிப்பு பணிகள்.

(ஆ) நகர்ப்புர குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகள், கடல் நீரை குடிநீர் ஆக்குதல் மற்றும் மறுசுழற்சி நீர்நிலைகளை மேம்படுத்துதல், நகரத்தை அழகுபடுத்துதல் (SMART CITY)

(இ) திறன் மேம்பாட்டு பயிற்சி

## 11.1 குடிநீர் மறுவிநியோகம் - சிறப்பு வணிக அலகு

இந்நிறுவனம் தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் நகர்ப்புர பகுதிகளில் குடிநீர் மேலாண்மையில் முதன்மைத்துவத்தை பெற்றுள்ளது. இயக்குதல் மற்றும் பராமரித்தல் சேவை மற்றும் ஆலோசகர் சேவைகளின் மூலம் ஈட்டப்படும் வருவாயே இந்நிறுவனத்தின் வருவாயில் பெரும்பகுதியாக உள்ளது. இந்நிறுவனத்தில் மொத்தம் 400 பணியாளர்கள் உள்ளனர். சமீபத்தில் ஈஸ்டர்ன் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு ரோகிணி ஜவுளி, பெருந்துறை மற்றும், திருப்பூர் ஆகியவற்றில் கழிவுநீர் மற்றும் சுத்திகரிப்பு பணிக்காக இந்நிறுவனம் அமர்த்தப்பட்டுள்ளது. கூடுதலாக ஏழு சுத்திகரிப்பு நிலையங்கள் 15 ஆண்டு கால ஒப்பந்தத்தில் இந்நிறுவனம் சேவை புரிந்து வருகிறது.

ஆலோசனை வணிகத்துறை பிரிவில் கடந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனைகள் புரிந்துள்ளது. கடந்த ஆண்டு இந்நிறுவனம் ஈஷால்கரஞ்சி ஜவுளித்

தொகுப்பு, பித்துஜா, இராஜஸ்தான், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் புதிய சுத்திகரிப்பு ஆலை ஆகிய நிறுவனங்களால் திட்ட மேலாண்மை ஆலோசனை வழங்குவதற்காக அமர்த்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தொடர்ந்து தேசிய திட்டத்தின் கீழ் தூய கங்கை (NMCG), தெலுங்கான மாநில தொழில் முதலீட்டு கழகத்தின் இந்திரகரன் திட்டம் மற்றும் சிறிய வாடிக்கையாளர்களுக்கும் சேவை புரிந்து வருகிறது.

### 11.2 நகர்ப்புர குடிநீர்- சிறப்பு வணிக அலகு :-

தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தின் இச்சிறப்பு வணிக அலகு முக்கியத்துவம் பெற்று வளர்ந்து வருகிறது. இந்நிறுவனம் பல புதிய பணிகளை தமிழக அரசின் கீழ் இயங்கும் பல்வேறு முகமைகளிலிருந்தும் குஜராத் மற்றும் மஹாராஷ்டிரா மாநில அரசுகளிடமிருந்தும் பெற்று செய்து வருகிறது. கூடுதலாக கொடுங்கையூர் மற்றும் கோயம்பேட்டில் உள்ள (TTRO) மூன்றாம் நிலை சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல்

நிலையத்தின் கட்டுமான மேற்பார்வை மற்றும் ஆலோசனைக்கு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் இந்நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் தொழில்நுட்ப கண்டுபிடிப்பில் முன்னணியில் உள்ளது. சமீபத்தில் இந்திய மற்றும் ஜெர்மனி அரசுகளின் ஆதரவுடன் இயங்கும் இந்தோ-ஜெர்மன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையத்தின் விருதினை பெற்றுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனம் நிதியுதவியினை மேற்கண்ட அமைப்பிடம் இருந்து பெற்று அதனை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் மேம்பாட்டுக்காக பயன்படுத்துகிறது. இதற்காக அறிவுசார் சொத்துரிமையின் கீழ் சென்னை ஐ.ஐ.டி மற்றும் ஜெர்மன் நிறுவனத்துடன் கூட்டு உரியமையாளராக பங்கேற்கும்.

இந்நிறுவனத்தின் விற்பனை ₹28 கோடியிலிருந்து 2017-18-ல் ₹35 கோடியாக உயர்ந்துள்ளது. 2018-19 ஆம்

ஆண்டில் வருவாய் ₹35 கோடியிலிருந்து ₹44 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி
மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்
துறை அமைச்சர்